www.tamilarangam.net

# களத்தில்



தமிழரின் பிரச்சனைக்கு சமாதான வழியில் நிரந்தரமான அரசியற் தீர்வு காணப்பட வேண்டுமாயின் தமிழர் பற்றிய சில அடிப்படை உண்மைகளை சிங்கள தேசம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அத்தோடு தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை விரும்புகின்றார்கள் என்பதையும் அவர்களது அடிப்படை அபிலாசைகள் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

14.12.2000 தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (223)




நோர்வே சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் தமிழீழத் தேசியத் தலைவருடன் உரையாடுகின்றார். தேசியத் தலைவருடன், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு.சங்கர், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச் செல்வன் ஆகியோர் உடனிருக்கின்றனர்.

## சமாதான முயற்சியின் கதி என்ன? மௌனமொழி பேசும் சிங்களம்.

சமாதான முன்னெடுப்பில், விடுதலைப் புலிகள் கொண்டுள்ள ஆர்வம் அக்கறை என்பன, அண்மையில் இரண்டு சந்தர்ப்பங்களில் அழுத்தம் திருத்தமாக வெளியிடப்பட்டிருக்கின்றன. 01.11.2000 அன்று, வன்னி மண்ணில், நோர்வே நாட்டின் விசேட தூதுக்குழுவினரை, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் சந்தித்து, சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள ஈடுபாட்டை, தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

இதைத்தொடர்ந்து, 27.11.2000 அன்று, தமிழீழ தேசிய மாவீரர் நாளின்போது, தேசியத் தலைவர் ஆற்றிய வரலாற்றுப் பேருரையில், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என, அறிவித்திருந்தார். தேசியத் தலைவரால், பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்ட இந்த சமாதான அறைகூவலுக்கு, இரண்டு வாரங்கள் கடந்தும் சிறீலங்காத் தரப்பில் இருந்து எந்தவிதமான பதில்களும் வெளிப்படவில்லை. சன்னக்குரலில், ஆங்காங்கே சில சமாதானத்தின்மீதான அக்கறைகள் வெளிப்படுகின்றன. அதேவேளை, யுத்தம் பற்றிய தீவிர சூளுரைப்புகளே, அரசாங்கத்தின் அதிகாரம்கொண்ட தரப்பிடம் இருந்து கிளம்புகின்றன. சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளில், விடுதலைப் புலிகளின் சமாதானப்பேச்சுவார்த்தை குறித்தான நிலைப்பாட்டை, சந்தேகக் கண்கொண்டு நோக்கி அரசை எச்சரிக்கும் பணியைச் செய்துவருகின்றன. சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றுள்ள நோர்வேயின் சமாதானப் பணி எங்கே சென்றுகொண்டிருக்கின்றது என்ற குழப்பமே மேலோங்கியிருக்கின்றது. ■

## சிங்களத்திற்கோ பலநாக்கு... விடுதலைப் புலிகளுக்கோ ஒரே நாக்கு

லண்டன் மாநகரில், 02.12.2000 அன்று நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய நீண்ட உரையின் முழுமையையும் வெளியிடுகின்றோம்.



- *"சிறீலங்காவின்ர பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பவருக்கு, ஒண்டும் தெரியாது. அவருக்கு அரசியலும் தெரியாது, போரும் என்னண்டு தெரியாது. உலகம் முழுக்க புலியளோட பேசவேண்டும், சமாதானம் காணவேண்டும் எண்டு சொல்லிக்கொண்டிருக்க, அவர் சண்டை தொடரும் எண்டு சொல்லுறார். அதாவது சண்டை பிடிச்சக்கொண்டு சமாதானம் பேசுவம் எண்டு சொல்லுறார். அது என்ன மாதிரி எண்டால்... உனக்கு முஞ்சியைப் பொத்தி அடிப்பன், நீ என்னைக் கட்டிப்பிடிச்சு கொஞ்சு எண்ட மாதிரி"*
- *"சந்திரிகாவும் கதிர்காமரும் இந்தச் சர்வதேச உலகத்தை திருப்திப்படுத்திறதுக்காக சில அறிக்கைகள் விடுகினம். நாங்கள் புலியளோட பேசத் தயார் எண்டு. அதை இந்த உலகம் கேட்க விரும்புது. ஆனால் அதுக்குள்ள, பிரதமமந்திரியும், இராணுவத்தளபதியும் புலியளை பூண்டோடு அழிப்பம் எண்டு சொல்லுகினம்"*
- *"சிங்கள அரசு குண்டுகளைப் போடுது. செல்லுகளை அடிக்குது. எங்கட மக்களைக் கொன்றொழிக்குது. அதைப் போர் எண்டு சொல்லுகினம். ஒரு அரசு செய்யிற அட்டூழியங்களைப் போர் எண்டு சொல்லுகினம். நாங்கள் போய்க் கொழும்பில ஒரு பட்டாசை வெடிச்சிட்டால் அது பயங்கரவாதம். இந்திய அமைதிப்படை தமிழீழத்தில ஆறாயிரம் மக்களைக் கொன்றழித்தது. அது எல்லாம் போர்த் தர்மம். நாங்கள் பதிலுக்கு ஏதாவது செய்தால் பயங்கரவாதம்."*


3

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சந்திரிகாவும் மனித உரிமை அறிக்கையும்.

கடந்த பத்தாம் திகதி, சர்வதேச மனித உரிமைகள் நாள். உலகில் இயங்கும் மனித உரிமைகள் அமைப்புக்கள், இயக்கங்கள், இந்நாளில் அறிக்கைகள் வெளியிடுவது வழக்கம். சிறீலங்கா அரசும் இந்நாளில் மனித உரிமைகள் அறிக்கையை வெளியிட்டது. ஒரு அரசு என்ற வகையில், அறிக்கை விடுவதனை அது ஒரு சடங்காக்கிக் கொண்டுள்ளது.

சிங்களப் பேரினவாத அரச படையினரின் கைகளில் சிக்கி, தமிழ்மக்கள் படுகின்ற வேதனைகள், சொல்லொணாத் துன்பங்கள், கொடுந்துயர்களை விபரிக்க வார்த்தைகள் கிடையா. தமிழர்கள் எப்போது வேண்டுமானாலும் கைதுசெய்யப்படலாம், சுட்டுக் கொல்லப்படலாம், பொய்க்குற்றச்சாட்டைச் சுமத்தி வருடக்கணக்கில் சிறையில் அடைக்கப்படலாம், கேள்வி கேட்பார் இல்லாததால் தாக்கப்படலாம், அவமானப்படுத்தப்படலாம், சொந்த நிலங்களில் இருந்து விரட்டப்படலாம்... இதுதான் தமிழ்மக்களின் இன்றைய நிலை.

சிங்களப்பேரினவாதம் தன்னை ஸ்தாபனமயப்படுத்தி, தமிழ்மக்கள் மீது மோசமான இந்த மனித உரிமை மீறல்களை, கொடுமைகளைப் புரிந்தபடி, உலகத்திற்கு மனித உரிமை அறிக்கைகள் விடுவது வேடிக்கையானது. சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா தனது, சர்வதேச மனித உரிமைகள் நாள் செய்தியில், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களைப் பேணிப் பாதுகாப்பதில், தனது அரசு கொண்டுள்ள கரிசனை, அக்கறை, அதற்கான அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்படுவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். நாகரீக உலகில், வெளிப்பாட்டுச் சுதந்திரம், சித்திரவதையற்ற பயப்பீதியற்ற வாழ்கைச் சுதந்திரம், பொருளாதார சமூக சமத்துவத்தைக் கொண்ட நடைமுறைச் சாத்தியமான செயற்பாட்டை அவர் வலியுறுத்துகின்றார்.

அறிக்கைகளால் குளிர்ச்சிகொள்ளும் தரப்பிற்கு சந்திரிகாவின் இந்த அறிக்கை, கவர்ச்சிகரமான, ரசனைமிக்க ஒரு அம்சமாக இருக்கக்கூடும். ஆனால், தமிழ்மக்களுக்கோ சந்திரிகாவின் இந்தச் செய்தி வேடிக்கை நிரம்பியதாகவே இருக்கும். தமிழர்களிடையே புளக்கத்தில் உள்ள, படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்ற பழமொழியைத்தான் தமிழர்கள் இதன்போது நினைத்துக்கொள்வர்.

பண்டாரவளை பிந்துநுவேவாச் சிறையில், சிந்திய தமிழரின் குருதி இன்னமும் காயவில்லை. மடுத் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழரின் அவலக்குரலின் அதிர்வுகள் இன்னமும் தணியவில்லை. கைதடி வயோதிபர் இல்லத்தில் வயோதிபர்களோடு இடிந்து தரைமட்டமாகிப்போன அந்தக் கட்டட இடிபாடுகளில் இருந்து கிளம்பும் முனகல்கள் இன்னமும் அடங்கவில்லை. புதுக்குடியிருப்பின் கொடுமைகளும் செம்மணிகளின் துயர்களும் இன்னமும் வடியவில்லை. ஆனால்.. இவற்றையெல்லாம் நடத்திக்கொண்டிருக்கும் சந்திரிகாவோ மனித உரிமை அறிக்கை விடுகின்றார்.

இதைவிட வேடிக்கையான விடயம் என்னவென்றால், சிங்களத்தின் எடுபிடியாகி, இனத் துரோகச் செயல்களை கூச்சமின்றிச் செய்துவரும் டக்ளஸ் தேவானந்தாவும் மனித உரிமை நாளில் அறிக்கை விட்டிருப்பதுதான். சிங்களத்திற்கு இந்த வகையிலும் சேவை செய்யலாம் என்பதை அவர் நிரூபிக்க முனைந்திருக்கின்றார்.

யாழ் நீதிபதி மு.திருநாவுக்கரசு அவர்கள், மனித உரிமை நாளை முன்னிட்டு தெரிவித்த கருத்து, இன்றைய தமிழ்மக்களின் நிலையை தெளிவுபடுத்துகின்றது. இருள் சூழ்ந்த நிலையில், குடியுரிமை, சிவிலுரிமை மறுக்கப்பட்ட நிலையில், திறந்தவெளிச் சிறையில் கைதிகளாக யாழ் மக்கள் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் எனக் குறிப்பிடுகின்றார் அவர். சிறீலங்காவின் நீதித்துறையைச் சார்ந்தவர் என்றபோதும், தமிழ்மக்களின் நிலைகண்டு மனம் பொறுக்காமல் அவர், தனது உள்ளக்கிடக்கையை யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்த கூட்டத்தில் கொட்டியிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மனித உரிமை, கல்வி, சுகாதாரம் உட்பட எல்லாச் செயற்பாடுகளும் பூச்சியமாகவே உள்ளன. தமிழன் ஒருவன் கைது செய்யப்பட்டால் எதுவித விசாரணையும் இன்றி தடுத்துவைக்க முடியும். ஒருவர் கைது செய்யப்பட்டால், எதற்காகக் கைதுசெய்யப்பட்டார் என்பது கைதானவருக்கோ கைதானவரை மறியலில் வைக்கும் நீதவானுக்கோ தெரியாது. படை அதிகாரிக்கு மட்டுமே தெரியும். கைதானவரை நீதிமன்றத்தில் நிறுத்தும்போது, ஏன்? எதற்கு? என்று சொல்வதில்லை. அவரை மூன்று மாதமோ, ஆறு மாதமோ தடுத்து வைக்க உத்தரவிடுமாறு கேட்பார்கள். சிங்களத்தில் சொல்வது எவருக்குமே விளங்காது. எங்கே கையெழுத்துப்போட எனக் கேட்டுவிட்டு தடுத்துவைத்தல் பத்திரத்தில் கையெழுத்துப்போட வேண்டியதுதான்.'

'யாழ் மக்களை யார் வேண்டுமானாலும் கொல்லலாம். யார் வேண்டுமானாலும் கைது செய்யலாம். வாகனத்தைக் கொண்டு மோதலாம். இராணுவம் என்றால் என்னவும் செய்யலாம், செய்துவிட்டுத் தப்பலாம். இதுதான் இன்றைய யாழ் குடாநாட்டு நிலைமை.'

இவற்றைத் தெரிவித்திருப்பது யாழ் நீதவான். உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லை என, கூறக்கேட்டு, குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றி விசாரித்துத் தண்டனை வழங்கும் ஒரு நீதிபதியின் கொதிப்பு. இந்தக் கொடுமைகளைப் பார்த்தும் தன்னால் எதுவும் செய்யமுடியவில்லையே என்ற தவிப்பையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

சந்திரிகா யாரை ஏமாற்ற மனித உரிமை அறிக்கைகளை விடுகின்றாரோ தெரியவில்லை. ■

# தமிழர் மனிதர் உரிமைகள் மையம் - (TCHR)
# சர்வதேச மனிதர் உரிமைகள் தின அறிக்கை

தமிழர் மனிதர் உரிமைகள் மையம் (TCHR) தனது தோழமை அமைப்புக்களுடன் சேர்ந்து, 52வது சர்வதேச மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறது.

52வருடங்களுக்குமுன் மார்கழி 10ம் திகதி சர்வதேச மனித உரிமைகள் சாசனம் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டது. இதில் மக்களின் சமூக, பொருளாதார உரிமைகளுடன் அரசியல் உரிமைகள் வற்புறுத்தப்பட்டுள்ளது.

சிறீலங்காவில் மனித உரிமைகள் மிக மிக நீண்ட காலமாக மீறப்பட்டு வந்துள்ளன. அங்கே, சர்வதேச மனித உரிமைகள் சாசனம் மட்டுமல்லாது சகல சர்வதேச சட்டங்களையும் சிறீலங்கா அரசும் அதன் எடுபிடிகளும் மிகவும் மோசமாக மீறிவருகின்றன.

தற்போதய உலகில், 'சாத்வீகம்' தவிர்ந்த ஏனைய போராட்டங்கள் யாவும் 'பயங்கரவாதமாகவும், பயங்கர வாதிகளாகவும் வர்ணிக்கப்படுகிறது. நிச்சயம், மனித உரிமையாளரின் செயற்பாடுகள் யாவும் சாத்வீகமானவையே. இவர்கள் கூட்டங்கள், மாநாடுகள் ஒழுங்குசெய்வதுடன் அறிக்கைகள் தயாரித்துப் பிரச்சாரம் செய்பவர்கள். ஆனால் அரசபயங்கரவாதமும் அதன் ஊதுகுழல்களும் இவர்களை 'முன்னணி அமைப்புக்கள்' என்றும் பட்டம் சூட்டுகின்றனர்.

உண்மையாதெனில், அரச பயங்கரவாதமும் அதன் பிரச்சாரிகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களினால் தயாரித்து, வெளியிட்ட அறிக்கைகளுக்குப் பதிலளிக்கமுடியாது தவிப்பது மட்டுமல்லாது, அறிக்கைகள் தயாரித்தவர்களை கொலைசெய்யவும் முயற்சிக்கின்றனர்! இது அரசபயங்கரவாதத்தை மேலும் அதிகரிப்பதுடன் அதே அரசபயங்கரவாதத்தை வேறு நாடுகளுக்கும் விஸ்தரிக்கின்றனர். அண்மைக்காலங்களில், சிறீலங்காவும் அதன் அயல்நாடுகளும் தமது அரசபயங்கரவாதத்தை மிகவும் கடுமையாக அதிகரித்துள்ளனர்.

ஓர் நாட்டின் மனித உரிமை மீறல் களைச் சர்வதேச, ஐ.நா மனித உரிமை அமைப்புக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் பட்சத்தில் அரசு ஏதோ வழியில் இவற்றை மூடிமறைக்க முயல்கிறது. அண்மைக்கால ஐ.நாவின் விடயத்தில், மனித உரிமை மீறல்களில் முன்னணியில் நிற்கும் நாடுகளே, ஐ.நாவின் மனித உரிமை கூட்டத்தொடர்களை ஆட்சிசெலுத்த முன்வருகின்றன!

மனித உரிமையைக் கடுமையாக மீறும் சகல நாடுகளும், ஐ.நா மனித உரிமைக் கூட்டத்தொடரில் அங்கத்துவம் வகிப்பதுடன், உப ஆணைக்குழுவில் தமக்குச் சாதகமான ஒருவரை அங்கத்தவர் ஆக்குகின்றனர்! அத்தோடு தமக்கு நெருங்கியவர்களைச் சர்வதேச அமைப்புக்களில் முக்கிய பதவிகளில் அமர்த்தியுள்ளது மட்டுமல்லாது வெவ்வேறு அரசாங்கங்களில் உள்ள முக்கிய நபர்களுக்கு லஞ்சமும் வழங்குகின்றனர்.

சர்வதேச மட்டங்களில், மனித உரிமை மீறல்களுக்கு ஆளான, நாடற்ற மக்களின் குரல் ஒலிக்கவேண்டுமானால், மனித உரிமைச் செயற்பாட்டாளர் தமது உயிரைப் பணயம் வைத்துச் செயற்படவேண்டிய நிலை ஏற்படுகிறது. கடந்த ஜனவரி மாதம் சிறீலங்கா அரசினால் படுகொலை செய்யப்பட்ட திரு. குமார் பொன்னம்பலம், இதற்கு ஓர் நல்ல உதாரணமாக அமைகிறார்.

தமிழர் மனிதர் உரிமைகள் மையம் (TCHR) அறிக்கைகளை வருடாந்தம் காலாண்டு இடைவெளியில் தயாரிப்பதுடன் பத்திரிகைச்செய்திகளையும் வெளியிடுகின்றனர். தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தின் அங்கத்தவர்கள் பல இழிவுபடுத்தல்களுக்கும், கொலை மிரட்டல்களுக்கும் மத்தியில் தமது சேவைகளைத் தொடர்கின்றனர். தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தின் கடந்தகாலச் செயற்பாடுகள் நிச்சயம் நல்ல பயனைத் தந்துள்ளது.

மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களைக் கொண்ட சிறீலங்கா அரசு, தற்பொழுது சர்வதேச மட்டத்தில் செல்வாக்கிழந்துவருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. சர்வதேச உலகின் எச்சரிக்கையை அலட்சியம் செய்யும் சிறீலங்கா அரசு அண்மைக்காலங்களில் மிகவும் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

1- ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகித்துவந்த சிறீலங்கா அரசு, கடந்த மே மாதம் தனது அங்கத்துவத்தை இழந்துள்ளது.

2- கடந்த 55வது, ஐ.நா மனிதர் உரிமை ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்கவிருந்த சிறீலங்கா அரசு, தனது மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் காரணமாக, தலைமைத்துவத்தை நேபாள நாட்டுக்கு விட்டுக்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. சிறீலங்கா அரசு மனித உரிமை ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்குவது, கசாப்புக்காரன் ஓர் தேவாலயத்தில் பூசை செய்வதற்குச் சமன் என பெரும்பாலான நாடுகள் வர்ணித்துள்ளன.

3- கடந்த ஆண்டு பாரிஸில் உள்ள ஐ.நா கல்வி விஞ்ஞான கலாச்சார அமைப்பின் (UNESCO) செயலாளர்நாயகம் பதவிக்குப் போட்டியிட்ட சிறீலங்காப் பிரதிநிதி, இரண்டு வாக்குகளை மட்டும் பெற்று படுதோல்வியடைந்தார்.

4- சர்வதேச நீதிமன்றத்தில் மிகநீண்ட காலமாக வகித்துவந்த அங்கத்துவத்தை சிறீலங்கா அரசு கடந்த ஆண்டு இழந்துள்ளது.

5- கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அணிசேரா நாடுகளின் அங்கத்துவத்தை இழக்கவேண்டிய நிலை சிறீலங்காவிற்கும் வேறு இரு நாடுகளுக்கும் ஏற்பட்டது. இதற்கும் இந்நாடுகளின் மனித உரிமை மீறல்களே காரணம்.

சிறீலங்கா அரசு தனது சர்வதேச பிரச்சார வேலைகளுக்குப் பெரும்தொகையான பணத்தைச் செலவிடுகின்றது. இதனால் தமிழீழத்தில் எப்படியாக மக்கள் மீது விமானக் குண்டுவீச்சுக்களும் ஆட்லறிகளும் ஏவப்படுகின்றனவோ, அதேபோன்ற வீச்சுக்கள் வேறுவடிவில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீது வெளிநாடுகளில் வீசப்படுகின்றன. வெளிநாடுகளில் இயங்கும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு பதுங்கு குழிகள்அவசியம் இல்லை. இவர்களுக்கு திடமான மனமும், கடுமையான உழைப்புமே தேவையானவை. இவர்களின் செயற்பாடுகள் நிச்சயம் மனித உரிமைகளை நிலைநாட்டும்.

சிறீலங்காவின் பொய்ப் பிரச்சாரத்தின் மத்தியிலும் எம்முடன் நெருங்கி நின்று பணியாற்றும் மற்றைய சர்வதேச அமைப்புக்களுக்கு தமிழர் மனிதர் உரிமைகள் மையம் (TCHR) நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. ■

www.tamilarangam.net



# லண்டன் மாநகரில் மாவீரர் நாள் விழாவில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரை

**தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையை விரிவாகவும், சுவைததும்பவும் விளக்கி, அவர் ஆற்றிய நீண்ட உரையை இங்கு தருகின்றோம்.**

**தலைவர் அவர்கள் வருடாந்த மாவீரர் தின அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார். மிகவும் முக்கியமான அறிக்கை. எமது விடுதலை இயக்கத்தின் கொள்கைப் பிரகடனமாக அந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. இது பற்றி விளக்கமாக உங்களுக்குச் சொல்லலாம் என்றிருக்கின்றேன்.**

**தலைவரின் அறிக்கையில் நான்கு விடயங்கள் முக்கியமாக இருக்கின்றன.**

*முதலாவது சமாதானப் பேச்சுவார்த்தை.*

*இரண்டாவது அரசியல் நிலைமை.*

*மூன்றாவது இராணுவ நிலைமை.*



*நான்காவது சர்வதேச நிலைமை.*

**ஆகவே இந்த நான்கு அம்சங்கள் பற்றியும் எமது விடுதலை இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதைப் பற்றி, தலைவர் கொடுத்த விளக்கத்திற்கு, கூடுதலான, தெளிவான விளக்கம் அளித்து விரிவுரையாற்ற விரும்புகின்றேன்.**

### சமாதானப் பேச்சுவார்த்தை

இந்த முழு உலகமுமே எதிர்பார்த்துக் காத்திருந்தவிடயம் அதுதான். தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக என்ன சொல்கிறார்? என்ன சொல்லப்போகின்றார்? அவரது நிலைப்பாடு என்ன? என்பதை, என்றுமில்லாத அளவிற்கு இம்முறை சர்வதேச உலகம் எதிர்பார்த்திருந்தது. அந்த அறிக்கையில், சமாதானப் பேச்சுப்பற்றி சொல்லும்போது, நிபந்தனையற்ற பேச்சுக்கு நாம் தயார் என்று தலைவர் சொல்கிறார். ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போடுறார். ஒருவரும் எதிர்பார்க்காத குண்டு. ஏனென்றால், இவ்வளவு காலமும், நாங்கள் பல நிபந்தனைகளை முன்வைச்சு பேசுவார்த்தைக்குத் தயார் என்று சொல்லி வந்திருக்கிறோம். ஆனால், இம்முறை நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று சொல்லியிருக்கின்றார் தலைவர். இது ஒரு முக்கியமான விடயம். ஆனால், அதேவேளையில் இச்சமாதானப் பேச்சுவார்த்தை, ஒரு சமாதானச் சூழ்நிலையில், நல்ல புறநிலையில், ஒரு இயல்பான சூழ்நிலையில் நடைபெறவேண்டும் என்பதையும் தலைவர் சொல்லியிருக்கின்றார்.

அது என்ன சமாதானச் சூழ்நிலை?

சமாதானச் சூழ்நிலை என்றால், அது ஒரு இயல்பு நிலை என்று சொல்ல வேண்டும். தமிழீழத்தில் ஒரு அசாதாரண சூழ்நிலை இருக்கு. அங்கு பொருளாதார நெருக்குவாரங்கள் இருக்கு. போர் நடைபெற்றுக்கொண்டிருக்கு. மக்கள் பெரும் அவலத்தில இருக்கினம். இப்பிடியான நிலைமை இல்லாமல், ஒரு இயல்பு நிலையை உருவாக்கி, சமாதானப் புறநிலையை உருவாக்கி பேசுவம். இதைத்தான் தலைவர் சொல்கிறார்.

உங்களுக்குத் தெரியும், அங்க வன்னியில நிலைமை மோசம். உணவுத்தடை, மருந்துத்தடை, மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்குத்தடை. இப்படியாகப் பல நெருக்குவாரங்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கினம். இதோட மீன்பிடித்தடை, போக்குவரத்துத்தடை, எரிபொருள்தடை, சீமெந்துத்தடை, இப்படியாக ஏகப்பட்ட தடைகள். இந்தத்தடைகள் கடந்த பத்துவருடங்களாக இருக்குது. இப்படியான தடைகள் ஏன் போட்டவை எண்டால், பொருட்கள் ஒண்டும் புலிகள் கைக்குக் கிடைக்கக்கூடாது எண்டு. ஆனால் கடந்த பத்துவருடங்களாக எங்களுக்குத் தேவையான பொருட்களை நாங்கள் எப்பிடியோ எடுத்துப்போடுறம். இயக்கத்துக்குத் தேவையான பொருட்களை எப்படியோ கொண்டு சேர்த்து போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறம். ஆனால் இந்தத் தடைகள் மக்களை நேரடியாகத் தாக்குது. இது அம்மாவுக்கு நன்றாகத் தெரியும். தெரிஞ்சுகொண்டு, மக்களின்ர மனஉறுதியை உடைக்கவேண்டும், புலியளுக்கு மக்கள் ஆதரவு கொடுக்கக்கூடாது, மக்களின்ர விடுதலை உணர்வை சிதைக்கவேண்டும், இப்படியான நோக்கங்களுக்காகவே இந்தத்தடையை வைத்திருக்கின்றா.

தலைவர் சொல்லுறார், இந்தத் தடையை நீக்கி ஒரு இயல்பு நிலையைக் கொண்டுவரவேண்டும் என்று.

வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் அகற்றப்படவேண்டும் என்று முன்னர் தெரிவித்து வந்தனாங்கள். ஆனால் இந்த முறை நாங்கள் அந்தக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. போர்நிறுத்தம் செய்துதான் பேசவேண்டும் என்று சொல்லிவந்தனாங்கள். இப்ப, அப்பிடியும் சொல்லேல்ல. படிப்படியாக போர் நெருக்கடி தளர்த்தப்படவேண்டும் என்றுதான் சொல்கின்றோம்.

ஒட்டுமொத்தத்தில் பார்த்தால், தலைவர் அவர்கள் தெரிவிச்ச யோசனைகள் உலகத்தால் வரவேற்கக்கூடியது. உண்மையான சமாதான முயற்சிக்கு அடிப்படையாக நல்லயோசனைகளைச் சொல்லியிருக்கின்றார். தலைவர் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை. அதேநேரம் நல்லெண்ணப் புறநிலை, இயல்பு நிலை, போர் நெருக்கடிகள் தணிந்த சூழ்நிலை இருக்கவேண்டும் என்று மாத்திரம் சொல்கின்றார். இது சிங்களவருக்கு சரியாக விளங்குதில்லை.

நிபந்தனை ஏதும் இல்லை என்று சொல்லிவிட்டு பிரபாகரன் நிபந்தனைகளைப் போடுகின்றார் என்று, சிங்களவர்கள் தெரிவிக்கினம்.

சிறீலங்காவின்ர பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பவருக்கு, ஒண்டும் தெரியுதில்லை. அவருக்கு அரசியலும் தெரியாது, போரும் என்னெண்டு தெரியாது. அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார் புலியளைப் பூண்டோடு அழிப்பம் எண்டு. உலகம் முழுக்க, புலியளோட பேசவேண்டும், சமாதானம் எண்டு சொல்லிக்கொண்டிருக்க, அவர் சண்டை தொடரும் எண்டு சொல்லுறார். அதாவது சண்டை பிடிச்சுக்கொண்டு சமாதானம் பேசுவம் எண்டு சொல்லுறார். அது என்ன மாதிரி எண்டால்... உனக்கு மூஞ்சையைப் பொத்தி அடிப்பன், நீ என்னைக் கட்டிப்பிடிச்சுக் கொஞ்சு எண்டமாதிரித்தான்.

பிறகு சொல்லுறார், புலியள் பலவீனப்பட்டு நிற்கினம், புலியளால சண்டை பிடிக்க முடியாது, ஆகவேதான் பேச்சுக்கு இறங்கிவருகினம் ஆகவே அவையளோட இப்ப பேசக்கூடாது எண்டு சொல்லுறார்.

விக்கிரமநாயக்காவுக்கு நான் சொல்ல விரும்பிறது என்னண்டால், விடுதலைப் புலிகள் பலவீனப்படவில்லை. பலம் பொருந்திய நிலையில்தான் இருக்கின்றார்கள். நாங்கள் சண்டைக்குப் பின்நிற்கிற ஆட்கள் இல்லை. புலி பசித்தாலும் இந்த சமாதானப் புல்லை மேயாது. நாங்கள் யானையை விழுங்கி கொட்டையைப் போட்ட ஆக்கள்.

நாங்கள் ஏன், சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் போனனாங்கள் எண்டால், உலக நாடுகள் எங்களை வந்து அணுகின. இரத்தக்களரி இல்லாமல், உங்கள் இலட்சியத்தை அடைய முடியுமா என்று, ஒரு முறை முயற்சித்தால் என்ன என்று, அவை எங்களிடம் தெரிவித்தன. உலகத்தின்ர ஆலோசனையின்பேரில்தான், நாங்கள் பேச்சுவார்த்தைக்கு சம்மதித்தோமேதவிர, ஏதோ பயத்தினாலோ, பலவீனத்தினாலோ அல்ல.

அடுத்து தலைவர், தன்னுடைய அறிக்கையில் அரசியல் நிலைமை பற்றிச் சொல்கிறார்.

சந்திரிகாவின் ஆட்சியமைப்பில், அதிகாரக் கட்டமைப்பில் இனவாதிகள் இருக்கினம், பேரினவாதிகள் இருக்கினம், கடும்போக்காளர்கள் இருக்கினம், போதாக்குறைக்கு தமிழினத் துரோகக்கும்பல்களும் இருக்கினம். இப்படியான பேரினவாதச் சக்திகளைக் கொண்ட ஆட்சி, தமிழ் மக்களுக்கு நீதி வழங்குமா? வழங்கமாட்டாது என்று வலியுறுத்திச் சொல்கின்றார் தலைவர்.

சிறீலங்காவின் அமைச்சரவையில் நாற்பது அமைச்சர்மார். நாற்பதுபேரும் மோசடி செய்து பதவிக்கு வந்தவர்கள். பதவியில ஏன் இருக்கினம் எண்டால், அதிலையும் ஏதும் மோசடி செய்து காசடிக்கிறதுக்குத்தான். இப்படியான ஒரு அமைச்சரவைதான் அங்க இருக்குது. ஆனால் எங்கட இயக்கத்தில தலைவர் இருக்கிறார். அவருக்கு ஒரேயொரு மந்திரிதான் இருக்கிறார். அது நான்தான். ஆலோசகர் என்ற மந்திரி. ஆனால் அம்மாவின்ர அமைச்சரவையில நாற்பது நாக்குகள் இருந்து நாற்பது விதமாக நாற்பது கொள்கைகளோட பேசுது.

ஆனால் எங்கட இயக்கம் ஒரே குரலிலதான் பேசுது. ஒரு இயக்கம், ஒரு இலட்சியம், ஒரு கொள்கை, ஒரு தலைவன், ஒரு உறுதியான நிலைப்பாட்டில் இருந்து கொண்டுதான் நாங்கள் பேசுறம்.

சந்திரிகாவும் கதிர்காமரும் இந்தச் சர்வதேச உலகத்தை திருப்திப்படுத்திறதுக்காக சில அறிக்கைகள் விடுகினம். நாங்கள் புலியளோட பேசத் தயார் எண்டு. அதை இந்த உலகம் கேட்க விரும்புது. ஆனால் அதுக்குள்ள, பிரதமமந்திரியும், இராணுவத் தளபதியும் புலியளைப் பூண்டோட அழிப்பம் எண்டு சொல்லுகினம்.

பாராளுமன்றத் திறப்புவிழாவில் சந்திரிகா ஒரு அறிக்கை வாசித்தார். ஐம்பது வருடங்களாக தமிழ்மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்று சொல்லுகின்றார். இதனை இழைத்தவர்கள் யார்? எப்படி இழைத்தார்கள்? என்று சொல்ல வரும்பொழுது, அரசியல் யாப்புக்கள், அரசியல் அமைப்புச் சட்டங்கள்தான் இதற்குக் காரணம் நாங்கள் இல்லை என அவர் தெரிவிக்கின்றார். சிங்களப் பேரினவாதத் தலைமைகள் காலங்காலமாக தமிழ் மக்கள்மீது ஏவிவிட்ட இந்த ஒடுக்குமுறை வரலாற்றை மூடிமறைத்துவிட்டு, ஏதோ காலனித்துவம் தந்த அரசியல் அமைப்புச் சட்டங்களில் பழியைப் போட்டு, முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் கதையைச் சொல்கின்றார்.

சந்திரிகா தன்ர அறிக்கையில, இனப்பிரச்சனையின்ர ஒரு வெளிப்பாடுதான் போர் என்று ஒரு கட்டத்தில சொல்லுறார். ஆனால் அதே பந்தியில சொல்லுகின்றார்

**நாங்கள் ஏன், சமாதானப் பேசுவார்த்தைக்குப் போனனாங்கள் எண்டால், உலக நாடுகள் எங்களை வந்து அணுகின. இரத்தக்களரி இல்லாமல், உங்கள் இலட்சியத்தை அடைய முடியுமா என்று, ஒரு முறை முயற்சித்தால் என்ன என்று அவை எங்களிடம் தெரிவித்தன. உலகத்தின்ர ஆலோசனையின்பேரில்தான், நாங்கள் பேச்சுவார்த்தைக்கு சம்மதித்தோமே தவிர, ஏதோ பயத்தினாலோ, பலவீனத் தினாலோ அல்ல.**

இது ஒரு ஆயுதப் பயங்கரவாதம் எண்டு. பிறகு சொல்லுகின்றார், இனப்பிரச்சனையைச் சமாதான வழியில் தீர்த்துவைக்க முயற்சி செய்வோம், ஆயுதப் பயங்ரவாதத்தை போரினால் அழிப்போம் எண்டு. சந்திரிகாவின்ர உள்நோக்கம் என்ன எண்டால், போரைத் தொடரவேண்டும் புலிகளை அழிக்கவேண்டும் என்பதுதான்.

எங்கட விடுதலைப் போராட்டம் அகிம்சைப் போராட்டமாக ஆரம்பித்து, ஆயுதப் போராட்டமாக விரிவடைந்திருக்கின்றது. இன அடக்குமுறை தீவிரமாகிய காரணத்தால், இனப்படுகொலை என்ற வடிவம் எடுத்த காரணத்தினால், நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையில்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் பிறந்தது. இது ஒரு வரலாற்று உண்மை. ஒரு கெரில்லாப் போராட்டமாக ஆரம்பித்து, இன்று முழு அளவிலான மரபு வழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யுத்தமாக அது விரிவாக்கம் கண்டிருக்கின்றது. இதுதான் இந்தப் போரின் வரலாற்று உண்மை. இந்தப்போர் ஒரு விடுதலைப் போர். தமிழீழ மண்ணை மீட்டெடுப்பதற்காக நடைபெறுகின்ற ஒரு போர். இந்தப் போரை பயங்கரவாதம் எண்டு சொல்லிக்கொண்டு உலகத்தைக் குழப்பிக்கொண்டு இருக்கிறாங்கள். சந்திரிகா, கதிர்காமர் ஆகியோரின் பிரச்சாரத்தில் எடுபட்டுச் சில நாடுகள் எங்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்திவைச்சிருக்கினம். இது தமிழ்மக்களின் விடுதலைப் போர் என்று தெரிந்திருந்தும், சந்திரிகாவுக்குச் சார்பான நிலைப்பாட்டைச் சில நாடுகள் எடுத்திருக்கினம்.

பயங்கரவாதம் என்ற விடயத்திற்கு வருவம். அதாவது ஒரு அரசு என்று சொல்லும்போது, தாங்கள் நினைச்ச பயங்கரவாதச் செயல் எல்லாம் செய்யலாம். சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட மக்களைக் கொன்று அழிக்கலாம். ஒரு அரசுக்கு அந்த உரிமை இருப்பதாக அவையள் நினைச்சுக் கொண்டிருக்கினம். ஆகவே சிங்கள அரசு குண்டுகளைப் போடுது. செல்களை அடிக்குது. எங்கட மக்களைக் கொன்றழிக்குது. அதைப் போர் என்று சொல்லுகினம். ஒரு அரசு செய்யிற அட்டூழியங்களைப் போர் என்று சொல்லுகினம். நாங்கள் போய் கொழும்பில ஒரு பட்டாசை வெடிச்சிட்டால் அது பயங்கரவாதமாம்.

அமெரிக்காக்காரன் ஜப்பான்காரன்ர தலைக்குமேல அணுகுண்டைப் போடுறான், லட்சக்கணக்கான மக்களைக் கொல்லுறான். அது போர்த் தர்மமாம். இந்திய அமைதிப்படை தமிழீழத்தில ஆறாயிரம் மக்களை கொன்றழிக்கின்றது. அது எல்லாம் போர்த் தர்மமாம். நாங்கள் பதிலுக்கு ஏதும் செய்தால் பயங்கரவாதம்.

பிரித்தானிய அரசிடம் புலியளைப் பயங்கரவாதப் பட்டியலில் இடுமாறு கோரி கதிர்காமர் அலைந்து திரியிறார்.

ஒருபக்கம் எங்களுடன் பேசத்தயார் என்று சொல்லிக்கொண்டு, விடுதலைப் புலிகளைத் தடைசெய்யச்சொல்லி பிரித்தானிய அரசிடம் இன்னொரு பக்கத்தால கேட்டுக்கொண்டிருக்கினம். கதிர்காமருக்கு ஒண்டு தெரியவேணும், அதாவது எங்களை சிறீலங்கா அரசாங்கம் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கினால்தான் பேச்சுவார்த்தையில் ஒரு முன்னேற்றம் ஏற்படும். நாங்கள் அதை வலியுறுத்துவம். அப்பிடியான நிலைமை இருக்கேக்க, அவர் வந்து பிரித்தானிய அரசிடம் எங்களைத் தடைசெய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

நாங்கள் பிரித்தானிய அரசிடம் ஒன்றைச் சொல்லியிருக்கின்றோம். எம்மீது கைவைத்தால், நாங்கள் இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டம். மற்றைய நாடுகளின்ர சமாதானக் கதவுகளை மூடிவிடுவோம். அதுக்குப் பிறகு உண்மையிலேயே பயங்ரவாதியளாக மாறிவிடுவோம்.

இந்தத்தடையின்ர நோக்கம், எங்கட மக்களிடம் இருந்து வாற நிதியை தடுக்கிறதுக்குத்தான். அமெரிக்காவிலும் அப்பிடித்தான் ஒரு தடையைப் போட்டு வைத்திருக்கினம். ஆனால், அங்க என்ன நடக்குதெண்டால், தூங்கிக் கிடந்த தமிழர்கள், இப்ப விழித்தெழுந்து கூட வேலை செய்யினம் காசும் கூடவருகுது. ஆகவே நாங்கள் இந்தத் தடையை வரவேற்கிறம். இங்கையும் கொண்டுவா, எங்கட சனம் கூடக் காசுதரும். இதைச் சமாளிக்கிறது என்னண்டு எங்களுக்குத் தெரியும். தடை செய்துவிட்டுப்போ... ஆனால் அதுக்குப் பிறகு பேச்சுவார்த்தை எண்டு சொல்லி கதவைத் தட்டமுடியாது.

கதிர்காமர் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு பெருந்தொகைக் காசை ஒதுக்கி, எல்லா நாடுகளிலும் புலிகளுக்கு பிரச்சினை குடுத்துக்கொண்டு இருக்கிறார். கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் எண்டதுமாதிரி, புலிகளும் எல்லா இடத்திலும் இருப்பர். உலகம் முழுக்க இருக்கினம். ஐம்பத்திநான்கு நாடுகளில் அமைப்புக்கள் வைத்திருக்கிறம். நீ.. என்ன செய்துபோடுவாய்? உனது தூதரகங்களைவிட எங்களது கிளைகள்தான் அதிகம்.

உன்னால் ஒன்றுமே செய்துவிட முடியாது. நாங்கள் பலம் வாய்ந்த ஒரு மக்கள் சமூகம். உலகம் முழுக்க கிளைபரப்பி, ஒரு விருட்சமாக நிற்கிறம். தமிழ்த் தேசியம் என்பது யாழ்ப்பாணத்துக்குள்ள மாத்திரம் முடங்கிக்கிடக்கேல்ல. உலகம் முழுக்க வியாபித்து நிற்கின்றது. சிங்களவர்களாலை ஏதும் செய்துவிட முடியாது.

ஒட்டுமொத்தத்தில இவையள் என்ன செய்யப் பார்க்கினம் எண்டால், தமிழரையும் சிங்களவரையும் வெவ்வேறு இனமாகப் பிரித்துவிடுகினம். நாங்கள் இரண்டு இனங்களும் இணைந்துவாழ முடியாது என்பதைத்தான் இவர்களது நடவடிக்கைகள் காட்டுகின்றன. அவையளின்ர நடவடிக்கைகளாலதான், தமிழ் இனம் பிரிந்துசென்று தனி அரசை அமைக்க விரும்புது.

தலைவர் தன் அறிக்கையில் முக்கியமான ஒண்டைச் சொல்கிறார்.

அதாவது ஈழத்தமிழ் மக்கள் எண்டால் யார்? அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் என்ன? அந்த மக்களின் ஆழமான அபிலாசைகள் என்ன? என்பதை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லியிருக்கின்றார். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொண்டால்தான் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஒரு நீதியான தீர்வு ஒன்றை எட்டமுடியும் எண்டு விளக்கம் சொல்லியிருக்கின்றார். ஈழத்தமிழ் மக்கள் தனித்துவமான இன அடையாளத்தைக்கொண்ட ஒரு மக்கள் சமூகம். அவர்களுக்கு வரலாற்று ரீதியான ஒரு நிலம் உண்டு. இந்த உண்மைகள் முதலில் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதற்குப்பின்னர், தமிழ்மக்கள் எதை விரும்புகின்றனர்?

தமிழ் மக்கள் என்ன விரும்புகின்றார்கள் என்றால், தங்கட நிலத்தில் நிம்மதியாக நிறைவாக வாழ விரும்புகினம். அந்நியர் வந்து கரைச்சல் கொடுப்பதையோ, அழுத்தம் கொடுப்பதையோ அவர்கள் விரும்பவில்லை.

தலைவர் தனது அறிக்கையில இராணுவ நிலைமை பற்றிச் சொல்லியிருக்கிறார். முக்கியமான விடயம்.

இந்தவருடம் மிகப்பெரும் சமராக நடந்தது ஆனையிறவுப் பெரும்சமர். ஆனையிறவுப் பெருந்தளத்தை புலிகள் நெருங்கி, யாழ்ப்பாணத்தின்ர வாசலை உடைத்தெறிஞ்சு, யாழ்ப்பாணத்துக்குள்ள நுளையினம். இருபதினாயிரம் படையினரைக்கொண்ட பெரும்தளத்தை புலியள் அழிச்சுப் போட்டினம்.

அழிச்சுப்போட்டு, யாழ்ப்பாணத்துக்க காலை எடுத்து வைச்சினம். யாழ்ப்பாணத்தை அரைப்பிறைவடிவில் சுற்றி வளைச்சு புலியள் நிற்கேக்க, அம்மையார் பயந்திட்டா. ஆடிப்போய் ஆட்டம்கண்டிட்டா. யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளிடம் விழப்போகுது, தமிழீழம் வரப்போகுது எண்டு அம்மையார் அபாயச் சங்கை எடுத்து ஊதினார். அபாயச் சங்கை ஊதி, உலக நாடுகளின்ர உதவியைக் கோரினா. கதிர்காமர் இந்தியாவுக்கு ஓடினார்.

**ஒருபக்கம் எங்களுடன் பேசத்தயார் என்று சொல்லிக்கொண்டு, விடுதலைப் புலிகளைத் தடைசெய்யச்சொல்லி பிரித்தானிய அரசிடம் இன்னொரு பக்கத்தால கேட்டுக்கொண்டிருக்கினம். கதிர்காமருக்கு ஒண்டு தெரியவேணும், அதாவது எங்களை சிறீலங்கா அரசாங்கம் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கினால்தான் பேச்சுவார்த்தையில் ஒரு முன்னேற்றம் ஏற்படும். நாங்கள் அதை வலியுறுத்துவம். அப்பிடியான நிலைமை இருக்கேக்க, அவர் வந்து பிரித்தானிய அரசிடம் எங்களைத் தடைசெய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றார்.**

அடுத்த இதழில் தொடரும்.......

# சமாதான முயற்சிகளை ஒழிக்கமுயலும் சிங்களப் பேரினவாத சக்திகள்

இலங்கை இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கு காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் அதற்கு சிங்களப் பேரினவாதிகளால் போடப்பட்ட பல வடிவங்களிலான முட்டுக்கட்டைகளும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களாகும்.

இந்தவகையில் தற்போது நோர்வே அரசாங்கத்தினால் அதாவது மேற்குலகின் ஆதரவுடன், பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டவர்களை -தமிழரின் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், சிங்கள ஆட்சியாளர்களையும் சமாதானப் -பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரும் முயற்சியும் அந்தக் கறைபடிந்த வரலாற்றில் அடுத்த அத்தியாயமாகிவிடுமோ என ஆய்வாளர்கள் அஞ்சுகின்றனர்.

இருபகுதியினருக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஏற்படுத்துவதற்கான நோர்வே அரசாங்கத்தின் இந்த முயற்சிகளுக்கு சிங்களப் பேரினவாதிகள் போட்டுவரும் முட்டுக்கட்டைகளே ஆய்வாளர்களுக்கு அச்சம் ஏற்படக் காரணமாகும்.

'நோர்வே விடுதலைப் புலிகளுக்கு சார்பான நாடு இது இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் நடுநிலையாளராக அங்கம் வகிப்பதை நாம் எதிர்க்கிறோம். இவ்வாறான நாடு ஒன்றின் மூலம் சிறீலங்கா அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்படும் ஒப்பந்தங்களை சிங்கள மக்கள் நிராகரிப்பார்கள். நோர்வேயின் தலையீட்டிற்கெதிராக தொடர்ந்து போராட்டங்களை நடத்துவோம்' என நாற்பது பௌத்த அமைப்புக்கள் அங்கம் வகிக்கும் தேசியக்கூட்டமைப்பின் (National Joint Committee) செயலாளர் டாக்டர் பியசேன திஸநாயக்க கூறியுள்ளார்.

'இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே சம்பந்தப்படுவது எதிர்விளைவையே ஏற்படுத்தும் இதுவொரு உள்நாட்டுப்பிரச்சினை. இதில் நோர்வேயின் தலையீடு தேவையற்றது. நோர்வே நாடு புலிகளுக்குச் சலுகை செய்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. விடுதலைப் புலிகளின் அலுவலகத்தை அங்கு திறப்பதற்கு நோர்வே அனுமதித்துள்ளது. இலங்கை இனப்பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள் தலையிடுவதை எம்மால் சகித்துக்கொள்ள முடியாது. நோர்வேயின் தலையீடு தனி நாட்டை நோக்கிப் புலிகளை மேலும் பலப்படுத்தும். நாம் நோர்வேயின் தலையீட்டை எதிர்த்து தொடர்ந்து போராடுவோம்' என ஜனதாவிமுக்தி பெரமுனவின் பேச்சாளரான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

'இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட எண்ணும் நோர்வே அரசுப் பிரதிநிதியான எரிக் சுல்ஹெய்மை சிறீலங்கா அரசு அவர் கொழும்பிற்கு வரும்போது உடன் கைதுசெய்யவேண்டும், நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகளை அரசு உடன் நிறுத்திக் கொள்ளவேண்டும், விடுதலைப் புலிகளுக்கெதிராகத் தொடர்ச்சியாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, இராணுவ ரீதியாக அவர்களைப் பலவீனப்படுத்த வேண்டும்' என சிஹல உறுமய கட்சி கூறியுள்ளது.

'விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குமுன்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அரசியல் தீர்வு யோசனைகளை பாராளுமன்றத்தின் ஆலோசனைக்கு முன்வைக்க வேண்டும். நாம் புதிய அரசியல் கலாச்சாரத்தை ஏற்படுத்தப்போகிறோம். நானும் ஜனாதிபதியும் வடக்குக் கிழக்கிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சகல உறுப்பினர்களுடனும் கலந்தாலோசித்தே எந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது என்ற அணுகுமுறையை வகுக்க வேண்டும். அத்துடன் புலிகளுடன் மட்டுமா பேசுவது என்பது குறித்தும் முடிவுசெய்யப்படவேண்டும்' என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

நோர்வேயின் அரச பிரதிநிதி சமாதானப் பேச்சு தொடர்பாக வன்னிக்குச் சென்று, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களைச் சந்தித்தது இலங்கை அரசியலிலும், இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு திருப்புமுனையாகவே மேற்குலகம் உள்ளிட்ட சர்வதேச சமூகமும் இதயசுத்தியுள்ள ஆய்வாளர்களும் வர்ணித்துள்ளனர்.

இந்த நிலையிற்தான், சிங்களப் பேரினவாதிகள் சமாதானத்திற்கெதிரான ஆதிக்க

**கெல்மன்**

வெறிகொண்ட தமது முன்னைய நிலைப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளனர். அதில் முக்கியமான சக்தியாக ஐ.தே.கட்சியைக் கூறமுடியும். கடந்த காலத்தில் ஆளுங்கட்சியாக இருந்ததும், சிங்கள மக்களின் செல்வாக்கைப் பெற்ற பெரிய கட்சியுமான இந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் சிறீலங்கா அரசு அமைதிப்பேச்சு நடத்துவது குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் குதர்க்கமானதாகவும், ஆய்வாளர்களுக்கு விசனத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

அதாவது, நோர்வே-புலிகள்-அரசு என்ற முத்தரப்பு செயற்பாட்டை மேலும் விரிவாக்க ரணில் எண்ணுவதைப்போல் தோன்றுகின்றது. தான் புதிய அரசியல் கலாச்சாரத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைக் கனல் மூண்டது

## அது தமிழீழ ஒளியானது

*சென்ற இதழ் தொடர்ச்சி..*

மக்களின் விருப்பை தமிழீழ ஆணையை முன்னெடுத்து வரலாற்றில் மீளவும் தமிழீழ அரசு நோக்கிய அரசினை உருவாக்கிவிட்ட கொள்கை வீரனாக தமிழீழ மக்கள் தங்கள் தேசியத் தலைவர் பிரபாகரனை போற்றி நிற்கின்றனர்.

சிறீலங்காப் பொலிசாரின், இராணுவத்தின் உளவுப்படையை அழித்தல் - தமிழீழத்தில் உள்ள சிறீலங்காப் பொலிஸ் நிர்வாக அமைப்பை நிலைகுலைத்து அழித்தல் - இராணுவ அணிகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் மோதி அழித்தல் என்கின்ற மூன்று நோக்குகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் பயணம் ஆரம்பமாகியது.

இதன் வளர்ச்சி நிலையாக 1978 சித்திரை 7ஆம் நாளில் பொலிஸ் அதிகாரி பஸ்ரியாம்பிள்ளை கோஸ்டியினர் முருங்கன் காட்டில் அழிக்கப்பட்ட வரலாறு சிறீலங்காவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தை வெளிப்படுத்தியது. இதனால் சிறீலங்கா 1978 வைகாசி 19ஆம் நாளில் தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்தை நிறைவேற்றி மக்களை அச்சப்படுத்தி இயக்க வளர்ச்சியை கட்டுப்படுத்த முயன்றது.

ஆயினும் அது ஆகக்கூடிய காரியமல்ல எனக் கண்ட சிறீலங்கா 1979 ஆடி 20 ஆம் நாளில் உலகிலேயே மிக மோசமான முறையில் மனித உரிமைகளை மீறும் பயங்கரவாதச் தடைச்சட்டத்தை கொண்டு வந்தது.

அத்துடன் நில்லாது அன்றிலிருந்து ஆறு மாதங்களுள் வடக்கில் இருந்து விடுதலைப் புலிகளை அழித்து ஒழிக்க வேண்டுமென ஆணையிட்டு ஜே. ஆர் ஜெயவர்த்தனா தனது உறவினரான பிரிகேடியர் வீரதுங்காவை வடக்கிற்கு நவீன மயப்படுத்தப்பட்ட இராணுவத்துடன் அனுப்பி வைத்தார்.

"அஞ்சி அஞ்சி சாவார் அவனியிலே
இவர் அஞ்சாத பொருளில்லை பூமியிலே"

எனப் பாரதி பாடிய தமிழர்களாக ஈழத்தமிழர்கள் வாழ்ந்த காலம் தலைவர் பிரபாகரனின் தோற்றத்துடன் மலையேறி விட்டது என்பதை ஆறுமாத காலக்கெடுவை நிறைவேற்ற முடியாத சிங்கள இராணுவத்தின் பரிதாபநிலை சிறீலங்காவுக்கு உணர்த்தியது.

ஆயினும் தலைவர் பிரபாகரன் சிறீலங்காவின் நடவடிக்கைகளை மிக நுணுக்கமாக அவதானித்து அவற்றுக்கு மத்தியில் தமிழீழத் தேசத்தின் அரசு நோக்கிய அரசை உருவாக்குவதற்குத் தேவையாக இருந்த மரபு வழிப்படைகள், நிர்வாகக் கட்டமைப்புக்கள் அமைப்புக்கள் ஆகியன தோன்றவைப்பதற்கான தன் திட்டங்களை நடாத்திச் சென்றார்.

இந்தக் காலகட்டத்தில் உலகே கண்டறியாத கேவலமான செயற்பாடாக ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட நூல்களைக் கொண்டிருந்த யாழ்நூலகம் சிறீலங்கா அரசாங்கத்தின் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களின் தலைமையில் எரியூட்டப் பெற்ற வரலாற்றுக் கொடூரம் 1981 ஆனி 1ஆம் நாளில் நிகழ்த்தப்பட்டது. இதனை அடுத்து படைபலம் கொண்டு அப்பாவி தமிழ் மக்களை பயப்படுத்தி அவர்களை அடிபணிய வைக்கும் சிறீலங்காவின் இராணுவத் தந்திரத்திற்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாயின.



1981ஆம் ஆண்டு ஐப்பசிமாதத்து 15 ஆம் நாளில் தமிழீழ போராட்ட வரலாற்றின் இராணுவத்தினருக்கு எதிரான முதல் தாக்குதல் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் வைத்து சிறீலங்கா இராணுஅணி மீது நடாத்தப்பட்டது.

1982 ஆடி 2ஆம் நாள் நெல்லியடியில் காவற்றுறை மீது நடாத்தப்பட்ட தாக்குதலையும் 1982 புரட்டாசியில் பொன்னாலை பாலத்தில் கடற்படையினர் மீது கண்ணிவெடி தாக்குதலையும் நடாத்தியதை தொடர்ந்து ஐப்பசி 27ஆம் நாளில் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய வெற்றிகரமான தாக்குதலினால் முழு இலங்கையுமே அதிர்ந்தது. 3 பொலிசாரை அழித்து 3 பேரைக் காயப்படுத்தி பெருந்தொகையான ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டதை அடுத்து பல பொலிஸ் நிலையங்களை சிறீலங்கா அவசரம் அவசரமாக மூடியது. இராணுவ முற்றுகையொன்றில் காயமடைந்த லெப்டினன்ட் சங்கர் தமிழகத்திற்கு வைத்தியசிகிச்சைக்கு என கொண்டு செல்லப்பட்டு அங்கு கார்த்திகை 27ஆம் நாளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் வீரச்சாவை தழுவினார். பின்னர் 1989இல் இந்நாளே தமிழீழ மாவீரர் நாளாக தமிழீழத் தேசிய தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது.

1989, கார்த்திகை 27, அன்று நடந்த முதல் மாவீரர்நாள் உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், 'எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கியமான நாள். இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த 1207 போராளிகளை நினைவுகூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்

**பற்றிமாகரன்**

பித்துள்ளோம். எத்தனையோ உலக நாடுகளில் விடுதலைக்காகப் போரிட்ட படைவீரர்களின் நினைவாக இப்படிப்பட்ட மாவீரர் நாட்களைக் கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும், இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாட்களைக் கொண்டாடுவது வழக்கம். ஆனால் இந்த வருடத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒருநாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாள் ஆகப் பிரகடனப்படுத்தி உள்ளோம். அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவடைந்த சங்கரின் நினைவு தினமான இன்று மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம் என்றார்.

எங்கள் தேசியத் தலைவரின் இந்த ஆணையை ஏற்று மாவீரர்நாளை தமிழீழத் தேசத்தின் தேசிய நாளாக உலகப்பரப்பெங்கும் வாழும் தமிழ் மக்கள் கொண்டாடுகின்றனர். இம்முறை ஆனையிறவுப் பெருந்தளமும் வன்னிப் பெருநிலப் பரப்பும் யாழ் குடாநாட்டின் கணிசமான பகுதியும் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. இந் நிலையில் எங்கள் தலைவர் 1987ஆம் ஆண்டு சுதுமலை கூட்டத்தில் சொன்ன அந்த வார்த்தைகள் எங்கள் காதுகளுள் இன்றும் ஒலிக்கின்றன.

"எம் மக்களது விடுதலைக்காக எம் மக்களது விமோசனத்துக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கின்றோம். தமிழீழ மக்களின் ஒரே பாதுகாப்புச் சாதனமாக இருந்துவந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடம் இருந்து பெற்றுக் கொள்வதில் இருந்து தமிழீழ மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறது. ஆயுதக்கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைத்தான் குறிக்கின்றது. நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் இதை நாம் விரும்பவில்லை. தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன். தமிழீழ மக்களின் நலன்கருதி இடைக்கால அரசில் பங்கு பற்ற அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது இயக்கத்துக்கு ஏற்படலாம். ஆனால் நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்" ஆயுத ஒப்படைப்பு என்பதன் பொருள் பற்றி தலைவர் பிரபாகரன் அளித்த விளக்கம் தமிழீழ மக்களின் பிரச்சினையே அவர்களது பாதுகாப்புக்கான சிறீலங்கா அரசாங்கத்தின் பயமுறுத்தல்கள் என்பதை உலகிற்கு உறுதியாக விளக்கியது.

1987 ஆடி 24ஆம் நாளில் இந்திய அதிகாரிகள் தலைவர் பிரபாகரனை சந்தித்து இராணுவ ஹெலிகொப்டரில் டில்லிக்கு ராஜிவ் காந்தி சில முக்கிய விடயங்கள் குறித்து பேச அழைப்பதாக அழைத்துச் சென்றனர். புறப்படுவதற்கு முன்னர் தலைவர் பிரபாகரன் அவர்கள் நாட்டு மக்களுக்கு விடுத்த அறிக்கையில் "இன்று தமிழீழ மக்கள் தங்கள் இலட்சியத்தை வென்றெடுக்கும் ஒரு தலைமையைப் பெற்றுள்ளனர் என்பதை நான் அறுதியிட்டுக் கூறுகின்றேன். நீங்கள் எனக்கு அளித்துவரும் பொறுப்புக்களை நான் நேர்மையாகவும் உண்மையாகவும் உறுதியுடனும் செய்வேன் என நம்புகின்றேன். தற்காலத்தில் காணப்படும் இடைக்கால தீர்வுகள் எமது பிரச்சினையின் தீர்வாக அமையாது. எனவே தமிழ் மக்களின் நிரந்தரமான நிம்மதியான சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நிரந்தரத் தீர்வுக்காகவே நான் பாடுபடுகின்றேன். இத் தீர்வு தமிழீழம் என்றே நான் நம்புகின்றேன். இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியின் அழைப்பின் பேரில் நான் தமிழீழத்தைவிட்டு உத்தியோக பூர்வமாகவே இந்தியா செல்கின்றேன்" என்று குறிப்பிட்டிருந்தார். அன்று முதல் இன்று வரை என்றுமே எதற்குமே விலைபோகாத உள்ள உறுதியுடன் அழைப்புக்களால் தனக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை சிந்தியாது தன் மக்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை சிந்தித்து செயற்படும் கர்மவீரனாக எங்கள் தலைவர் பிரபாகரன் இலங்குவது கண்கூடு.

எங்கள் தேசத்தின் மண்ணையும் கடலையும் விண்ணையும் எங்கள் எதிரிகளின் பிடியிலிருந்து மீட்க ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி அமைதியான பாதுகாப்பான தேசத்தில் தமிழீழ மக்கள் வாழ எம்மாலான நிதி உதவிகளை அள்ளி வழங்குவதே எங்கள் மாவீரர்களுக்கு நாம் அளிக்கும் மிக உகந்த காணிக்கையாகவும் அமையும். ■

---

ஏற்படுத்தப்போவதாகக் கூறியுள்ளதும், ஜனாதிபதியும் தானும் வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர்தான் புலிகளுடன் மட்டுமா பேசுவதென்பது குறித்து முடிவு செய்யப்படவேண்டுமென கூறியுள்ளதும், இவ்வாறான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அவர் பொதுநலனுக்காக தமது கட்சியின் அரசியற்போக்கில் பிறழ்வை ஏற்படுத்த விரும்பவில்லை. கட்சி அரசியல் நடவடிக்கைகளையே தொடர்ந்து முன்னெடுக்கப் போகிறார் என்பதையே அவரின் இந்த நிலைப்பாடு காட்டுகின்றது.

இதேவேளை, 'புலிகளை இராணுவ ரீதியாக வலுவிழக்கச் செய்யவேண்டும். புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யப்படமாட்டாது. யுத்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்' என சிறீலங்காவின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியிருந்தார்.

அதுமட்டுமல்ல, சிறீலங்காவின் சிரேஷ்ட அமைச்சர்களுக்கிடையிலும் நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இவ்வாறான கருத்து முரண்பாடுகளால் அமைச்சர்கள் மட்டத்தில் வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்றுள்ளன.

சிறீலங்காவில் தற்போது ஏற்பட்டுள்ள இவ்வாறானதொரு அரசியல் பின்னணியில் தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினையில் இரட்டை அணுகுமுறையை அதாவது, இராணுவ வழிமுறையையும், அரசியல் தீர்வு வழிமுறையயும் கடைப்பிடிக்க எண்ணியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் அதேவேளையில், இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதாகவும், பொருளாதாரத் தடைகளை நீக்குமாறு விடுதலைப் புலிகள் விடுக்கும் கோரிக்கையில் பயனில்லை எனவும் சந்திரிகா குமாரதுங்க தனது 11வது பாராளுமன்றத்தின் முதல் அமர்வில் அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையில் கூறியுள்ளார்.

இதேவேளை, 'இராணுவ ரீதியிலான வெற்றியே சமாதானத்தை அடைந்துகொள்ள ஒருநல்ல மார்க்கமாகும்' என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல கூறியுள்ளார். 'புலிகளுடன் யுத்த நிறுத்தம் மேற்கொள்வது, புலிகள் தம்மை இராணுவ ரீதியாக பலப்படுத்திக்கொள்ள உதவும்' எனவும் அவர் கூறுகின்றார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றின் தற்போதைய நகர்வு நிலை இந்த அடிப்படையிலான சூழ்நிலையிலேயே உள்ளது. இந்த நிலையில் நோர்வேயின் புதிய தளத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சியாகத் தெரியும் ஒளிக்கீற்றை சிங்களப் பேரினவாத இருள் கவ்விக்கொள்ளும். மற்றொரு கறைபடிந்த அத்தியாயமாக நோர்வேயின் முயற்சிகள் பதியப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஆய்வாளர் மத்தியில் மேலோங்கி வருகின்றது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகத் தமிழர் கண்ட இணை



## தமிழீழ உயிர் மூச்சு

**வேலுப்பிள்ளை பிரபாகரன்..**

இந்தப் பெயர் தமிழீழத்தைப் பொறுத்தவரை மூச்சுக்குழாய் நுகருகின்ற உயிர்க் காற்றாகவே கருதப்படுகின்றது. உலகத் தமிழர்களைப் பொறுத்தவரை நான் ஒரு தமிழன் என்று சொல்லி நெஞ்சை நிமிர்த்த வைத்த பெயராகப் போற்றப்படுகின்றது.

உலகத்தைப் பொறுத்த வரை 'இந்தியா ருடே' தனது 1999ஆம் ஆண்டு மே 30ஆம் நாளைய இதழில் குறிப்பிட்டது போல ஒரு புரியாத புதிர்.

உலகில் தன்னாட்சி நடந்துவரும் நாடுகள், அதன் தலைவர்கள், விடுதலைக்காகப் போராடும் இயக்கங்கள், அவற்றின் தலைவர்கள் பற்றி உள்ளபடி அறியாதவர் பலர். எனினும் பிரபாகரனையும் அவர் கட்டியெழுப்பிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பையும் எல்லோருக்கும் இன்று நன்றாகத் தெரியும். உலகத்தின் எங்கோ ஒரு மூலையின் குக்கிராமத்தில் இருக்கும் மக்கள்கூட பிரபாகரனை அறிந்திருக்கிறார்கள் என்பது புரியமுடியாத அந்தப் புதிரின் ஆளுமைக்குச் சான்று.

## 'இந்து'வின் கணிப்பு

1989இல், இந்தியாவின் மிகப் புகழ்வாய்ந்த ஆங்கில நாளிதழான இந்து தமிழ்நாட்டிலுள்ள கும்பம் எனும் குக்கிராமத்தில் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தியது. இந்தியாவின் மிகுந்த செல்வாக்குள்ள அரசியல் தலைவர்கள் ஐவரோடு, பிரபாகரனது பெயரையுஞ் சேர்த்து இவர்களை அறிவீர்களா? எனக் கேள்விகேட்டது. அந்தக் கருத்துக்கணிப்பின் முடிவு, இந்தியாவை மட்டுமல்ல, உலக அரசியல் அறிஞர்களையும் வியக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தது. அக்கணிப்பையும் முடிவையும் கீழே பாருங்கள்.

| பெயர் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| என்.ரி.ராமராவ் | 75.0வீதம் | 17.6 வீதம் |
| பிரபாகரன் | 65.1வீதம் | 12.8 வீதம் |
| ஜோதிபாசு | 46.7வீதம் | 03.4 வீதம் |
| வி.பி சிங் | 29.6வீதம் | 02.0 வீதம் |
| தேவிலால் | 17.8வீதம் | 01.0 வீதம் |
| ஏ.பி.வாஜ்பாய் | 09.9வீதம் | 01.0 வீதம் |

இந்தியாவின் பிரதமராக விளங்கிய வி.பி.சிங், தற்போது பிரதமராக உள்ள வாஜ்பாய், பிரதிப் பிரதமராக இருந்த தேவிலால், மாநில முதலமைச்சராக விளங்கிய ஜோதிபாசு போன்றவர்களையும்விட, அந்தக் கிராம மக்களுக்கு நன்கு தெரிந்தவராக 89களிலேயே பிரபாகரன் விளங்கினார் என்பதை இந்துவின் கருத்துக் கணிப்பு விளக்குகின்றதல்லவா.

## எதிர்ப்பவர் நெஞ்சுக்குள்ளும்

கடந்த வருடம் 'சண்டே ரைம்ஸ்' கூட ஒரு கருத்துக்கணிப்பு நடத்தியது. 20ஆம் நூற்றாண்டின் இலங்கையர் யார்? என்ற கேள்வியோடு டி.எஸ். சேனநாயக்கா உள்ளிட்ட பல தலைவர்களோடு, தமிழீழத் தேசியத் தலைவரவர்களின் பெயரும் முன்மொழியப்பட்டிருந்தது. இன்னொரு வகையிற் பார்க்கும்போது, பயங்கரவாதி-கொலைகாரன் என்று தமது ஊடகவாயிலாக பிரபாகரன் மீது சேறு பூசிக் கொண்டிருக்கும் சிறீலங்காவின் தலைநகரிலிருந்து வெளிவரும் சஞ்சிகை தனது கருத்து வட்டத்துக்குள் பிரபாகரனும் 20ஆம் நூற்றாண்டின் சிறந்த தலைவன்தானென்பதை மறுப்புக் கிடமின்றி ஒப்புக்கொள்கிறதென்றே பொருள். எதிர்ப்பவர் நெஞ்சுக்குட்கூட எளிதாக உள் நுழையும் புரியாத புதிர்தான் தமிழீழத்தின் தேசியத் தலைவர் பிரபாகரன்.

## கூலியல்ல.. போராளி

கறுத்த மனிதன் ஒருவன் வெள்ளையர் தேசத்தில் மதிப்புப் பெற்றதில்லை. பிளாக்கீஸ், கூலீஸ், நிகோஸ் எனப் பல்வேறு பழிப்புமொழிகள் அவனைப் புண்செய்திருக்கின்றன. மகாத்மா காந்திகூட இதற்கு விதிவிலக்காகவில்லை என்பதும், அரை நிர்வாணப் பக்கிரியாகவே அந்த மாமனிதன் வெள்ளையர் கண்ணுக்கும் கருத்துக்கும் தெரிந்தார் என்பது வரலாறு- இந்த இன, நிறப் பாகுபாடுகள், உலகின் வளம், பலம், நாகரிகம் தழைக்கும் நாடுகளெனத் தம்மைப் பறைசாற்றிக் கொள்ளும் அமெரிக்கா, ஜேர்மனி, பிரித்தானியா போன்ற நாடுகளிலே கூடக் குறைந்ததாகத் தெரியவில்லை. நாய்களும் கறுப்பரும் இங்கே அனுமதிக்கப்படுவதில்லை என்ற உணவு விடுதி வாசகங்கள் இன்னும் அங்கே முற்றாக அழிக்கப்படவில்லை.

இருப்பினும் தமிழீழத் தமிழர் என்றால் சிறப்பாகவும், தமிழர் என்னும்போது குறிப்பாகவும், அவ்வெள்ளையர் நெஞ்சுகளிற்கூட மதிப்பு ஏற்படுகின்ற நிலை உருவாகியமை பற்றி உலக சஞ்சிகைகள் எழுதவும் மற்றும் ஊடகங்கள் சொல்லவும் தொடங்கியுள்ளன. இந்தத் திடீர் மாற்றத்திற்கு வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற பெயரே முதலும் முழுதுமான காரணமாகின்றது.

## அமெரிக்க ரைம்ஸ் அன்றும் இன்றும்

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் ரைம்ஸ் சஞ்சிகை, தனது 86.06.09 ஆம் நாளைய இதழிலே ஆயுதந்தாங்கிய தமிழ்ப் போராளிகளில் மறுப்புக்கிடமில்லாத தலைவர் திரு. பிரபாகரன்தான் என அறுதியிட்டுச் சொன்னது. ஒரு சிறிய தீவிலுள்ள சிறிய தேசிய இனமான தமிழரின் விடுதலைக்காகப் போராடும் தலைவராகப் பிரபாகரனை அன்று பார்த்த ரைம்ஸ் இன்று எப்படிப் பார்க்கின்றது.

20ஆம் நூற்றாண்டின் மிகுந்த செல்வாக்கு வாய்ந்த ஆசியர்கள் எனும் தலைப்பில் வெளியிட்ட தனது(ஆகஸ்ட் 23-30 1999) விசேட பதிப்பில் பிரபாகரன் பற்றி இவ்வாறு கூறுகின்றது.

வேலுப்பிள்ளை பிரபாகரன் சிறீலங்காவிலுள்ள தமிழர்களுக்கான ஒரு தன்னாட்சித் தாயகம் வேண்டி 16 ஆண்டுகளுக்கு மேலாகப் பெரும் போரினை நிகழ்த்தி வருகின்றார். அவரது விடுதலைப் புலிகள் அமைப்பு மிகுந்த கட்டுப்பாடும், இறுக்கமும் வாய்ந்தது. 80களின் பிற்பகுதியில் வலிமை மிகுந்த இந்திய இராணுவத்துடன் மோதி, அவர்களைச் சமாளிக்கும் அளவிற்கு மன உறுதி கொண்டது. இதைவிட 1983இல் விடுதலைப் புலிகள் நிகழ்த்திய திருநெல்வேலித் தாக்குதலை, அந்த ஆண்டிற்குரிய வரலாற்று நிகழ்ச்சியாகவும் தேர்ந்தெடுத்துள்ளது.

ரைம்ஸ் சஞ்சிகையின் இந்தக் குறிப்புக்கள், ஓயாத அலைகள் மூன்று படைத்த வியத்தகு வெற்றிச் செய்திகள் காதிலே விழுமுன்னர் சொல்லப்பட்டவையாகும்.

ரைம்ஸைப் பொறுத்தவரையில் அதற்கு விடுதலைப் புலிகளில் எவ்விதக் காதலுங் கிடையாது. இன்னுஞ் சொல்லப் போனால், தமிழீழத்தில் இன்று வெடித்துக் கொண்டிருக்கும் வேட்டுக்களின் பின்னாலுள்ள ஆன்மாவின் பருமனை உள்ளபடி ரைம்ஸ் உணர்ந்துள்ளதென்றும் சொல்ல முடியாது. ஆயினும் விடுதலைப் புலிகளின் தற்கட்டுப்பாடும், ஈகங்களும் தலைவர் பிரபாகரனின் புரிந்து கொள்ள முடியாத இராணுவப் புதுமைச் சிக்கல் நிறைந்த திட்டங்களும் படை நகர்த்தலும், இறுக்கம் நிறைந்த எளிமையும் அச்சஞ்சிகையை அவ்வாறு எழுத வைத்திருக்கின்றது என்பதே உண்மை. விரும்பாக் கடமையொன்றைக் காலம் அதன் பேனா நுனியிற் கருத்தரிக்க வைத்துள்ளது என்றால் அது மிகையானதல்ல.

## போரென்றாற் போர்..

போரென்றாற் போர் சமாதானம் என்றாற் சமாதானம் இந்த வார்த்தைகளும் தமிழீழ மக்களைப் பொறுத்தவரை எழுபதின் பிற்பகுதியில், அவர்தம் மானத்துவேரில் அழியாததும் ஆழமானதுமான புண்ணை ஏற்படுத்திய வார்த்தைகள்.

கொன்றது போலொரு வார்த்தை.

அதி உத்தமரென்று சிங்கள பௌத்த வல்லாளர்கை வட்டத்தினாற் கற்பிக்கப்பட்ட சிறீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்த வார்த்தைகளை உதிர்த்தபோது, அன்றிருந்த பாராளுமன்றத் தமிழ்த் தலைவர்கள் குனிந்து கொண்டதுதான் வரலாறு. அரசியல் வட்டாடி ஜே.ஆரிடம் தோற்ற தமிழ்த் தலைவர்கள், பாஞ்சாலி துகில் பறிபோனபோது தலை கவிழ்ந்து நின்ற பெரும் வீரர்களான பாண்டவரை ஒத்து நின்றனர் என்று காலம் அவர்களைக் கேலி செய்யத் தவறவில்லை.

பிரபாகரன் என்ற நெருப்பு, தனது அழியாச் சூட்டினாலே தமிழீழக் கோழைமை மனக் குளிரை ஓட்டி, நாடிநரம்புகளில் விடுதலைச் சூடேற்றும் வரை ஜே. ஆர் மொழிந்த கேலி வார்த்தை செய்த புண்ணை நக்கிப் பார்க்கும் வலிமைகூட தமிழ் அரசியலாளர்க்கு இருந்ததில்லை.

## புதிர்க்கணக்கு..

பிரபாகரனின் விடுதலைப் புலிகள் இன்று வரை உலக அறிவியற் போர்முறைக் கணக்குகள் எதனாலும் விடுவிக்கப்படாத புதிர்க்கணக்காகவே இருக்கின்றனர்.

போராளிகளின் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் உலகில் இயங்கிய, இயங்கிக் கொண்டிருக்கின்ற எந்தவொரு அமைப்பினாலும் எண்ணிப் பார்க்கத்தானும் முடியாத உயர் வீச்சைக் கொண்டிருக்கின்றது. கியூப போராளிகளின் முன்மாதிரியை ஒத்ததாயினும், அதனைவிட பன்மடங்கு உயர் செறிவைக் கொண்டு இலங்குவதை உலகத்தினால் ஒப்புக்கொள்ளாதிருக்க முடியாது. ரைம்ஸ் கூறிய கட்டுப்பாடும் இறுக்கமும் கொண்ட போராளிகள் என்ற வார்த்தை வெறும் வார்த்தையல்ல.

## உயிர் ஆயுதம்...

உலகின் ஒன்றிரண்டு விடுதலை இயக்கங்களில், ஒன்றிரண்டு தற்கொடைப் போராளிகள் இருந்திருக்கக்கூடும். ஆனால் தலைவர் பிரபாகரனைப் போல எவரும் உயிர் ஆயுதங்கள் தம்மைச் சூழ இருந்ததில்லை. தமது சாவுக்கு நாட்குறித்து, உடலிலே இணைக்கப்பட்ட, ஊர்தியில் ஏற்றப்பட்ட வெடிபொருட்களோடு சிரித்தபடி பாய்ந்து இலக்குகளைச் சாய்த்து தம்மைத் தற்கொடை வழங்கும் கரும்புலிகள் என்ற கெட்டியான அமைப்பை உலகம் விடுதலைப் புலிகளிடமே காணுகின்றது. தலைவர் பிரபாகரனின் சுண்டு விரலசைவு கண்டதுமே, இந்தக் கரும்புலிகள் குறிக்கப்பட்ட இலக்குகளின் மீது நேர்கொண்ட வீறுடன் பாய்ந்து விடுகின்றனர். இவர்களிற் பலரது முகமும், முடிவும் தலைவரைத் தவிர வெறெவருக்கும் தெரிவதில்லை.

இதனாற்றான் பயங்கரவாதி, கிளர்ச்சியாளன் என்று வந்தவாய்க்குப் பேசுபவர்களாற்கூட 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர்களிற் பிரபாகரன் ஒருவர் என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடிவதில்லை.

## பத்தாண்டின் மாமனிதன்-

எண்பதுகளில், தமிழ் ஈழத்தினதும் சிங்கள தேசத்தினதும் அரசியற் தலைவிதியை ஆட்டிப் படைத்து, தொண்ணூறுடன் முடிவடைந்த ஒரு முதன்மையான பத்தாண்டின் வரலாற்றுத் தலைவராக தமிழீழத் தேசியத் தலைவரவர்கள் விளங்குகின்றார் என்று கூறுகிறார் லங்கா கார்டியன் இதழின் ஆசிரியரும் புகழ்பூத்த அரசியல் ஆய்வாளருமான மேர்வின் டி சில்வா. புயலின் மையமாக நின்று தமிழரின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த வீரன் என்பதற்காக ஒரு பத்தாண்டுகளின் மாமனிதன் எனப் பிரபாகரன் போற்றப்படுகிறார் என்பது, அவர் லங்கா கார்டியனில் செய்த இன்னொரு கணிப்பு. இந்தக் கணிப்பு தவிர்க்கமுடியாத வரலாற்றின் தீர்ப்பு என மனந்திறந்து எழுதியிருக்கின்றார் மேர்வின் டீ சில்வா. தொண்ணூறிலிருந்து தொடர்ந்து இப்போது கடந்து முடிந்த அடுத்த பத்தாண்டு, தலைவர் பிரபாகரனை நூற்றாண்டுத் தலைவராக உயர்த்தியிருப்பதை அவர் இன்று உயிரோடு இருப்பின் உணர்ந்து எழுதியிருக்கக்கூடும். அப்படி எழுத வேண்டிய வரலாற்றுத் தீர்ப்பினை, காலத்தின் கட்டளை அவருக்கு நிச்சயம் விதித்திருக்கும்.

## தெற்கு நோக்கித் தேயும் எல்லை..

தலைவர் பிரபாகரன் ஒற்றைத் துப்பாக்கியுடனும் ஒரு சில தோழர்களுடனும் தமிழீழத்தின் தலைவிதியை எழுதப்புறப்பட்ட காலத்தில், சிங்களப் பேரினவாதத்தின் எல்லை தமிழீழத்தை அரித்து அரித்து முன்னேறிக் கொண்டிருந்தது.

எல்லைகளை நாம் நிறைக்காவிடின் எல்லைகள் எம்மை நோக்கி நகர்ந்து வரும் என்ற பொருள் பொதிந்த வாசகத்தை உச்சரித்தவரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே. 1948இலிருந்து ஆளும் பேரினவாதம் தனது வல்லாளகை மூலம் சிங்கள எல்லைகளை நீட்டிக் கொண்டே வந்திருக்கின்றது. தமிழீழப் பண்பாடும் வாழையடியும் செழித்த எல்லைகளைச் சுருக்குவதிலே தமது முழுப்பலத்தையும் பயன்படுத்தி வந்திருக்கின்றது.

இந்தக் காட்டாற்றினை தடுத்து நிறுத்தியதும் தற்போது உலகப் புகழ்பெற்ற ஓயாத அலைகள் தொடர் நடவடிக்கைகள் மூலம் தமிழீழத்தை விடுவித்து மீண்டும் எல்லைகளைத் தெற்கு நோக்கித் தள்ளி வருவதும் பிரபாகரனது நுட்பமான நெறியாள்கையும், புலிப்படையின் மின்னல் வேகப் பாய்ச்சலுமாகும்

## உலகத் தமிழர் 20 நூற்றாண்டுகளிற்...

வியட்னாமின் கோசிமின், சீனாவின் மாவோ, பாலஸ்தீனத்தின் யசீர் அரபாத் போன்ற பெரும் போராட்டத் தலைவர்கள், பல நாடுகளின் உதவிகளோடுகூடச் செய்யமுடியாதிருந்த மின்னல் வேக இராணுவ வெற்றியை எவரது துணையுமின்றி, கருணை நிறைந்த பார்வை தானும் இன்றி, ஆளணி, ஆயுதவளங்குறைந்த பிரபாகரனால் எப்படி நிகழ்ந்த முடிந்ததென்று, உலகம் புருவத்தை உயர்த்துகின்றது. ஓயாத அலைகளின் தொடர் வெற்றிகளின் பின்னாலுள்ள நுண்திட்டத்தை என்றாவது எப்படியாவது அறிந்துவிட வேண்டுமென்று துடிக்கிறது.

## கெரில்லாத் தலைவரா? மரபுப்படைத் தலைவரா?

உலகின் பிரபலமான வெற்றிகரமான கெரில்லாத் தலைவரென்றும், மிக உயர்ந்த கட்டுப்பாடும் இறுக்கமும் கொண்ட உலகின் முதற்தர இராணுவத்தைக் கட்டியெழுப்பிய வரென்றும் பி.பி.சி புகழாரம் சூட்டுகின்றது. ஒரு காலத்தில், கெரில்லாத் தலைவர் எனப் பிரபாகரனை விழித்த பி.பி.சி வலிமை மிகுந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# 20 நூற்றாண்டுகளிற் யற்ற பெருந்தலைவர்

மரபுப்படையைக் கொண்ட புலிப்படைத் தலைவர் என்று இன்று மெல்ல மெல்லச் சொல்லத் தொடங்கியுள்ளது. வெரித்தாஸ் பல படிகள் மேலேபோய், பிரபாகரன் சாதாரண மானிடனேயல்ல என்று புகழ்கின்றது.

## வட இந்தியா சொல்கின்றது..

சிவசேனைத் தலைவர் பால்தக்கரே இந்தியாவின் வணிகத் தலைநகரான மும்பாயில் தொழில் செய்துயர்ந்த தமிழர்களைத் தனது சொந்தப்படைகள் மூலம் அடித்து விரட்டியவர். அதிதீவிர இந்துத்துவக் கோட்பாட்டாளர். பிரபாகரனது வியப்புக்குரிய வீரச் செயல்களால் ஈர்க்கப்பட்ட இந்த இரும்பு மனிதர். உலகத் தமிழர்களின் இணையில்லாத் தலைவன் பிரபாகரன்தான் என அழுத்தந்திருத்தமாக மொழிந்து, ஈழத்தமிழர்களின் இலட்சிய வேள்விக்குத் தனது ஆதரவினை வழங்கத் தவறவில்லை.

1987 நவம்பர் 26ஆம் நாள் சென்னையிலே நடந்த தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் நிகழ்விற் கலந்து கொண்ட மேற்கு வங்காள அமைச்சர் பி.பி. மண்டல், பால்தாக்ரே சொன்னது போன்ற கருத்தை இன்னும் அழுத்தி தம்பி பிரபாகரன் தமிழர்களுக்கு மட்டுமல்ல.. ஒடுக்கப்பட்ட மனிதகுலத்துக்கே தலைவன் என்று வாயாரப் புகழ்ந்தார் இந்தக் கால கட்டத்திற்றான், இந்திய அமைதிப்படை தமிழீழத்திலே புலி வேட்டையாடிக் காயப்பட்டுக் களைத்துக் கொண்டிருந்தது. இந்திய தேசியம், என்ற உணர்வுக்கு அப்பால் நின்று, பிரபாகரனைப் புகழக்கூடிய அளவுக்கு, அவரது கறைபடா மாண்பு மண்டலின் நெஞ்சை இழுத்து ஈர்த்தது என்பதே உண்மை.

## வேட்டி கட்டி நடக்க..

இந்திய அரசியல் தலைநகரான டெல்லியிற்கூடத் தமக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டதற்கும் குனிந்து வளைந்து கேட்பாரற்றுத் திரிந்த தமிழர் வேட்டி கட்டி நிமிர்ந்து நடப்பதற்கும் காரணமாக அமைந்தவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் என்று இந்தியத் தமிழ்த் தலைவர்கள்கூட இன்று ஒப்புக் கொள்கின்றனர். உலக அகர முதலியில் தமிழன் பெயரைக் கூலியென்றிருந்த நிலையையழித்து போராளிகள் என எழுதவைத்த பெருமைக்குரிய தலைவர் பிரபாகரன்தான் என்பதை, அரசியல் அழுத்தங்களால், முரண்படும் தமிழ்த் தலைவர்கள்கூட மறுக்கத் துணிவதில்லை.


வைகோ, ஆலடி அருணா போன்றவர்கள் பிரபாகரன் 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் என்று இந்தியப் பாராளுமன்றத்திலே செய்த மதிப்பீடுகள் அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தமிழக மக்கள் மனதிலும் பதியப்பட்டுள்ளதென்பதை ஓயாத அலைகள் மூன்றின் பின், தடைகளை மீறியெழுந்த தமிழகச் சஞ்சிகைகள், மக்களின் உணர்வலைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

மிகச் சிறியதொரு நாட்டில் தமது விடுதலைக்காகப் போராடும் ஈழத்தமிழர் என்னும் இனத்தின், தேசியத் தலைவர், தனது மாவீரர் நாள் உரையில், என்ன சொல்லப் போகிறார் என்பதை உலகம் விழியசைக்காது பார்த்திருந்ததோடு, எல்லா ஊடகங்களும் அதனை சுடச்சுட அறிவித்தன என்பது பிரபாகரன் 20ஆம் நூற்றாண்டினதும் இனி வரும் நூற்றாண்டினதும் இணையற்ற தலைவர் என்பதற்கான அங்கீகாரமெனில், அதுமிகையன்று.

## உலக மகா வீரர்களில்..

உலகின் பெரும் வீரர்களென்று விரல் விட்டு எண்ணக் கூடியவர்களான அலெக்சாந்தர், நெப்போலியன் போன்றவர்களோடும், கொரில்லா வீரர்களான சேகுவேரா, கரிபால்டி, பிடல் காஸ்ரோ, யசிர் அரபாத், மாவோ, கோசிமின் போன்றவர்களோடும், பெரும் போர்களிற் தனது நாட்டினரை வழி நடத்திச் சென்று வெற்றிக் கனியைப் பறித்துக் கொடுத்த லெனின், ஸ்ராலின், வின்சன் சேர்ச்சில், போன்ற தலைவரோடும் ஒரு சேர வைத்து எண்ணப்படக் கூடியவரென்று பல

தொடர்ச்சி 8ஆம் பக்கம்




# ஆனையிறவு இசைத் தட்டு

-மதிப்பீட்டுரை-

ஆனந்தப் பூங்காற்று காதினிலே,
ஆலோலம் ஆலோலம் பாடுதம்மா!
ஆனையிறவிலே ஏறிடும் போதிலே..
ஆகாயம் கைகளில்
ஆடுதம்மா!

ஆகாயம் மட்டுமா ஆடியது? அன்று இம்மண்ணில் பிறந்த எல்லாமுமே ஆடின. கால் நடக்க இயலாப் பூட்டன்கூட அன்றுதான் நாலு காலிற் பாய்ந்து துள்ளிக் குதித்தார். ஒவ்வொரு தமிழனும் அந்நேரம் இறக்கை கட்டிப் பறந்து விண்ணில் மிதந்தான். யானையைக் காலால் தட்டி விழுத்திய புளுகம் எமக்கு. ஆனையிறவை நாங்களே அடித்துப் பிடித்த நினைப்பு. உச்சரிக்கவே பயந்த ஆனையிறவை பெயர்த்தெறிந்து எம் பிள்ளைகள் வென்றார்கள் என்ற செய்தி அனைவரையுமே உச்சத்திற்கே அழைத்துச் சென்றது. எங்களாலும் எதுவும் முடியும் என்ற அகங்காரம் தலைக்கேற ஆனையிறவில் ஏறி நடந்தோம்.

பல நூற்றாண்டுகளாக ஆதிக்கவாதிகளின் பிடியிலிருந்து எமது வீரர்களால் உயிரும் உதிரமும் அர்ச்சித்துப் பெற்ற பூர்வீகப் பூமியை பார்த்தபோது எமக்கேற்பட்ட ஆனந்தக் களிப்பு எங்களையே மீறி எமக்குள் பீறிட்டெழுந்த சந்தோச அலைகள், ஈடிணையற்ற இந்த வெற்றியை என்னென்று சொல்லி எப்படி மகிழ்வதென்று அறியாது நின்று நாம் பட்ட தத்தளிப்பு, ஒவ்வொரு உயிர்களையும் உப்புத் தரையில் விலை கொடுத்தபோது எமக்கிருந்த உளக் குமுறல், இந்தக் கோட்டையை விழுத்த முடியவில்லையே என்ற ஏக்கம் ஆனையிறவிலும் புலிக்கொடி பறக்காமலா போகும் என்று நீண்டகாலமாய் எமக்குள்ளிருந்த ஆதங்கம்... அத்தனைக்கும் தீர்ப்பெழுதி ஆனையிறவின் கன்னத்தில் முத்தமிடுகிறது எம் மூச்சுக்காற்று.

இவற்றையே அடிநாதமாய் ஆதார சுருதியாய்த் தாங்கி வெளிவந்திருக்கின்றது ஆனையிறவுப் பாடல் இசைத் தட்டு. இசைப் பாடல்களை கேட்கும்போது நாம் மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைகின்றோம். எங்களுடைய புலன்களை கூர்மையடையச் செய்து நாம் நேரில் காணாதவற்றையும் கற்பனையின் மூலம் காணுகின்றோம் இவற்றுக்கும் மேலாக இசைப்பாடல்கள் கேட்பவர் மனங்களை ஆட்கொண்டு அவர்களைச் சிந்திக்கவும் உணரவும் செய்கின்றன.

வெறுமனே ஆகா! ஓகோ! என்று வந்து சன்னதமாடி, கேட்பவர் மனங்களில் பெரும் போதையையே தூவிவிட்டு நிகழ்காலத்திலேயே நிழலற்றுப் போகும் இன்றைய தென்னிந்தியச் சினிமாப் பாடல்களுக்குச் சவாலாக ஈழமண்ணில் பிறப்பெடுக்கும் தாயகப் பாடல்கள் கேட்பவர் மனங்களை மட்டுமன்றி காலத்தையும் வென்று நிலைத்து விடுகின்றன.

குறிப்பாக, 80களிலேயே தாயகப் பாடல்களின் வருகை ஆரம்பமாகியது இற்றைவரை பல நூற்றுக்கணக்கான பாடல்கள் வெளிவந்திருக்கின்றன. விடுதலைக்கு மக்கள் மனங்களில் உயிர்ப்பூட்டுவனவாக சுதந்திரப்போரின் உந்துசக்தியாக, காலப் பதிவாக, மன உணர்வுகளின் வெளிப்பாடாக இசைப்பாடல்களின் வருகை காலத்திற்குக் காலம் உச்சத்தைத் தொட்டே வந்திருக்கின்றது. தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றுப் பதிவான நிகழ்வுகளைக் கலைப்பதிவாக்குவதில் இசைப்பாடல்களும் இடம்பிடித்துள்ளன. இசைப்பாடல்களின் பிரசவம் என்பது புத்துணர்வுடன்கூடிய ஒரு கூட்டு முயற்சியாகும். பாடலாசிரியன் சொல்ல வந்த கருத்தை, அதன் உணர்வைச் சிதைக்காத மெட்டுக்களும், பாடகரின் உச்சரிப்பும் மிகவும் கச்சிதமாக பாடல்களை மெருகேற்றி விடுகின்றன. பாடல் அடிகளில் இசையின் செழுமையுடன் கவித்திறமும் ஈடுசோடாக ஓசை வீசுவதைக் காண்கிறோம். ஆனையிறவு இசைத் தட்டிலே வரும் ஒன்பது பாடல்களின் கவிதை வரிகளுக்கும் சொந்தக்காரர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களே. ஓசை பிறழாது சொல்லைக் கையாளும் விதம் ஒவ்வொரு பாடல்களிலும் பிரமிக்கத் தக்கதாகவே உள்ளது. கேட்பவர் மனங்களைச் சுண்டியிழுக்கும் வார்த்தைகளால் இனிய இசையில் குழைந்து அதற்கு இசைந்த குரல்களில் வெளிவந்துள்ள இப்பாடல்கள் கேட்கும்போது எம்நெஞ்சைத் தொடுகின்றன. தமிழீழத்தின் மூத்த இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணன் அவர்கள் இந்த ஆனையிறவு ஒலிப்பேழைக்கு இசைக் கலவை வழங்கி கனிவூட்டியுள்ளார். இயல்பாகவே தன் நுணுக்கமான மெட்டுக்களால் பாடல்களைக் கேட்பவர் மனங்களில் இலாவகமாகத் தொற்ற வைத்துவிடும் திறமை கைவரப் பெற்ற இசைவாணர் கண்ணன் அவர்கள் ஆனையிறவிலும் தன் கைவண்ணத்தைக் காட்டத் தவறவில்லை. ஆற்றின் ஓட்டம் போல் எந்தத் தடங்கலும் இன்றி இப்பாடல்கள் வந்து குவிகின்றன.

இந்த ஒலிப்பேழையில் உள்ள பாடல்களைப் பாடிய பாடகர்களும் தத்தம் குரல் இனிமையை, திறமையை நிலை நிறுத்தியே உள்ளனர். இவர்களுடன் இளைய ஒலிப்பதிவாளர் மலையவனும் திறம்படச் செயற்பட்டுள்ளார்.

எல்லாப் பாடல்களும் என்று மிகைப்படுத்திக் கூறமுடியாவிட்டாலும், ஓரிரு பாடல்களைத் தவிர ஏனையபாடல்கள் உச்சத்தைத் தொட்டே நிற்கின்றன. இவ்வொலிப் பேழையில் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய பாடலாக மாவீரர் பாடல் அமைந்துள்ளது. இந்தப் பாடல் தன்னுடன் எம்மையும் தென்னை மரத்தோப்பிற்குள் அழைத்துச் செல்கிறது. பாடலில் பொதிந்துள்ள கவிதை வரிகள், பாடலுக்கு வழங்கப்பட்டுள்ள இசை, பாடலைப் பாடியுள்ள விதம் எல்லாமே ஒன்றுடன் ஒன்று போட்டி போடுகின்றன. மாவீரர்களின் முகங்களை நெஞ்சக் கண்முன் நிழலாட வைக்கும் அளவிற்கு உணர்வுப் பிழிவாக அமைந்துள்ள அப்பாடல் மனதின் அடிவேர் வரை சென்று, அது சொல்ல வந்த கருத்தை, உணர்வை மற்றவர்களிடத்தில் தொற்ற வைப்பதில் வெற்றி கண்டுள்ளது.

தென்னை மரத்தோப்பு உம்மை எதிர்பார்த்து ஒரு கண்ணழுதவாறு காத்திருக்கும் என்ற பாடல் நிச்சயமாக கேட்பவர்கள் மனங்களை இளக வைக்கும்.

இவ்வாறே பாடகர் சாந்தனின் வெண்கலக் குரலில் அமைந்த பாடல். இனி வரும் இனி வரும் காலங்கள் அவை எங்களின் காலங்கள் என்ற பாடல் மற்றும் பாடகர் சுகுமாரின் கம்பீரமான குரலில் அமைந்த, நித்திரையா தமிழா என்ற பாடல், திருமலைச்சந்திரன், நிரோஜன் ஆகியோர் பாடிய

சந்தோச மேகங்கள் வந்தாடும் நேரத்தில்
செந்துாரப் பூ மழை தூவியது
சென்றார்கள் வென்றார்கள் என்றார்கள்
அந்நேரம் தேகமெல்லாம்
மின்னல் ஓடியது.

போன்ற பாடல்கள் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகின்றன. இத்தனைக்கும் மேலாக ஒரு வித்தியாசமான,

ஈடு வைத்து ஈடு வைத்து
நந்தலாலா-தமிழ்
ஈழம் தரப் போகிறாவே நந்தலாலா!

என்ற பாடல் எடுத்த எடுப்பிலேயே பலரது மனங்களையும் ஈர்த்துவிட்டது. இந்தப்பாடலைப் பலரின் வாய்கள் முணுமுணுக்கக் காணலாம்.

பாடல்கள் ஒவ்வொன்றுமே உணர்வுப் பிழிவாக அமைந்திருக்கின்றன. பாடகர்கள் அனைவரும் பாடல்களின் வரிகள் சுட்டி நிற்கும் கருத்தை, அதன் உணர்வை ஆழமாக உள்வாங்கி நன்றாகப் பாடியிருக்கின்றார்கள். தமிழீழத்தில் பல வெற்றிப் பாடல்களைப் பரிசளித்த மூத்த இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணன் அவர்கள் குறிப்பிட்ட சில நாட்களுக்குள் தன் அயராத உழைப்பால் ஆனையிறவை கானச்சரங்களாக்கிக் கையளித்துள்ளார். பாடல்கள் யாவும் போராளிகளின் வீர உணர்வையும் போரிடத்துடிக்கும் குன்றாத ஆர்வத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. மனங்களில் மறப்பண்பை ஊட்டுகின்றன.

குறித்த இலக்கு மீது பாய்வதற்கு சந்தர்ப்பமளித்து விழித்திருக்கும் நிலப்புலி போன்ற செயல் புரிந்த வீரரின் வியத்தகு திறமைகளை இப்பாடல்கள் சாற்றுகின்றன.

ஞாயிறு எழுமாயின் ஓடாது நிற்கும் இருளும் உளதோ? புலி உறுமினால் எதிரே நிற்கும் வேறு விலங்கினம் உளதோ? இல்லையே! அவைபோல, ஆள்பலமும், தேச பக்தியும், விடுதலை உணர்வும் வீரமும் உடை வீரருக்குத் தலைவனே! நீ களம் புகுந்தால் எவர்தான் நின்னை எதிர்க்க வல்லார்? புறநானூறை விஞ்சிப் புது நானூறு படைத்து நிற்கும் நின்பலத்திற்கு ஆனையிறவே சான்று பகரும்.

தாயின் கொடி வானில் பறந்தது
ஆனையிறவினிலே..
வாசல் திறந்திடக் கால்கள் நடந்தன
மான உணர்வினிலே..
உப்பு விளைந்திடும் பூமியெடா
இப் பிறப்பாயினும்- எப்
பிறப்பாயினும் அது
எங்களின் பூமியெடா

உலகில் ஒலி உள்ளவரை, காற்று அற்றுப்போகும் வரை இப்பாடல்களும் வாழும்.

தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ள "ஆனையிறவு" இசைத்தட்டினை மீள்வெளியீடாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் வெளியிட்டுள்ளது.





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓயாத அலைகள் - 03 ஓயாத அலைகள் - 03 ஓயாத அலைகள் - 03 ஓயாத அலைகள் - 03



# ஓயாத அலைகள் -03 தொடர் நடவடிக்கையில் வன்னியின் தென்முனையில் மாவீரராகியவர்கள்

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டு வந்தன. இவ்வரலாற்று நடவடிக்கையில் வீரச்சாவடைந்தவர்களின் பூரணமான விபரங்கள் மீண்டும் தொடராக வெளியிடப்படுகின்றன.

**18.11.1999 அன்று முள்ளிக்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் வீரச்சாவடைந்தவர்கள்.**

**2வது. லெப். மகேந்திரலிங்கன்**
வெள்ளைக்குட்டி ஜெயகரன்
துறைநீலாவணை -07, அம்பாறை

**2வது லெப். ரதிவரன்**
தவராஜா மகேந்திரன்
தில்லைநாதன் வீதி,
மொறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு

**வீ.வே. கார்த்திபன்**
லோகநாதன் விமலநாதன்
சகாயஅன்னை ஆலயம், ஆயித்தியமலை, மட்டக்களப்பு

**வீ.வே. ஈகவாணன்**
வடிவேல் நிதிகரன்
ஆலையடி வீதி, நாவற்காடு, அக்கரைப்பற்று, அம்பாறை

**வீ.வே. ரஞ்சன் (மலரவன்)**
கந்தசாமி குகன்
ஐயனார் கோவிலடி, வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம்

**பெரியமடுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 18.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே. சுவர்ணா**
யோகலிங்கம் கோகிலாவதனி
இல: 258, மாணிக்கபுரம், றெட்பானா, விசுவமடு

**கப். அரசலா**
இராசையா துஸ்யந்தன்
பிள்ளையார் கோவிலடி, கோப்பாய்மத்தி, கோப்பாய், யாழ்

**வீ.வே. பருதி**
பெருமாள் இந்துமதி
சுடரேஜன் குடியிருப்பு, 8ம் கட்டை, அக்கராயன்
(புதுப்பாலத்தடி, இரத்தினபுரம், கிளிநொச்சி)

**வீ.வே. கோமளா**
சதாசிவம் வதனி
1000 வீட்டுத்திட்டம், முழங்காவில், மன்னார்
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம், யாழ்)

**பராக்கிரமபுரம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 19.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**2வது லெப். சரத்பாபு**
அன்ரனிதாஸ் அயுஸ்ரன்
5ம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, முல்லை

**மடுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 20.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**மேஜர் சாகரன் (பவான்)**
யோகராசா சிறிகரன்
சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி (பழைய பொலீஸ் நிலைய வீதி, ஆனைக்கோட்டை, யாழ்)

**2வது லெப். அருளாளன்**
கணேசமூர்த்தி பிரதீபன்
மூங்கிலடி வீதி, வந்தாறுமூலை, மட்டக்களப்பு

**2வது லெப். நிதிபாலன்**
சிவலிங்கராஜா மேகேஸ்வரன்
களுதாவளை, மட்டக்களப்பு

**வீ.வே. சதானந்தன்**
மயில்வாகனம் ரவி
பழந்தோட்டம், களுவாஞ்சிக்குடி -09, மட்டக்களப்பு

**பதவியா பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 21.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்.**

**வீ.வே. கன்னிமறவன்**
ஆறுமுகம் விக்கினேஸ்வரன்
மணியங்குளம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி
(கோயில்குடியிருப்பு, முல்லை)

**அடம்பன் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 22.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**மேஜர் மாறன்**
பழனி வசந்தகுமார்
பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல், மன்னார்

**மேஜர் அரியநாயகம் (அரி)**
அல்போன்ஸ் ஜெயசீலன்
இல: 29, பெரியபண்டிவிரிச்சான், மடு, மன்னார்

**கப். ரஜீந்திரன்**
செபமாலை பஸ்ரியான்
தலைமன்னார் கிராமம், மன்னார்

**லெப். பகீதரன்**
கந்தையா தனபாலசிங்கம்
25, தட்சணாமருதமடு முகாம், மன்னார்
(பள்ளிக்குடியிருப்பு, நெடுங்கேணி, முல்லை)

**2வது லெப். மணிமாறன்**
மாமாங்கம் ஜெகநாதன்
சர்வோதயா வீதி, சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு

**2வது லெப். கிளியரசன்**
கனகலிங்கம் கனகராஜ்
முனீஸ்வரன் ஏத்தம், இரணைஇலுப்பைக்குளம்
(மதவடி, குப்பிளான், யாழ்)

**வீ.வே. நிதர்சன்**
கோவிந்தன் கேதீஸ்வரன்
1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லை
(வலதுகரை, முத்தையன்கட்டு, முல்லை)

**வீ.வே. டேவிற்**
தேவதாஸ் சண்முகநாதன்
8ம் ஒழுங்கை, சுமூவடிக்கொலனி, மாமாங்கம், மட்டக்களப்பு

**பாப்பாமோட்டைப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 24.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்.**

**2வது லெப். மாலா**
சிங்கராசா மேரிவசந்தா
முழங்காவில், மன்னார் (நெடுந்தீவு, யாழ்)

**வெடிவைத்தகுளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 25.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்.**

**லெப். நீதன்**
முத்தையா பரமானந்தன்
செபஸ்ரியன் அச்சகத்திற்கு அருகாமையில், சுண்டுக்குழி, யாழ்

**ஒதியமலைப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 29.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே. கயலவன்**
சின்னத்தம்பி சக்தீபன்
வள்ளுவர்புரம், றெட்பானா, விசுவமடு
(பிரசாத் வீதி, சித்தங்கேணி, யாழ்)

**வீ.வே. நாவரசன் (குன்றசீலன்)**
பஞ்சலிங்கம் பாலச்சந்திரன்
இல: 13, வன்னேரிக்குளம், கிளிநொச்சி
(உருத்திரபுரம், கிளிநொச்சி)

**வீ.வே. செழியன்**
ஜெயபாலன் ரவீந்தர்
5ம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு
(அல்வாய் தெற்கு, அல்வாய், யாழ்)

**சேமமடுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 05.12.1999 அன்று வீரச்சாவடைந்தவர்.**

**வீ.வே இன்பமலர்**
சுப்பிரமணியம் நகுலேஸ்வரி
இரணைஇலுப்பைக்குளம், வவுனியா
(குண்டசாலை, கண்டி)

**கோட்டைக்கேணி பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 14.12.1999 அன்று வீரச்சாவடைந்தவர்.**

**மேஜர் தாதாம்பரி**
விக்ரர் அற்புதநாயகி
அம்பலவன்பொக்கணை, புதுக்குடியிருப்பு, முல்லை (மாதகல், யாழ்)

**மகிழங்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 29.12.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**2வது லெப். விஜி**
நாகரத்தினம் ஜெயரூபி
1ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லை
(சுழிபுரம், யாழ்)

**வீ.வே. புரட்சி**
நவரெட்ணம் எட்வின்சுவீற்றி
சூசையப்பர் கோவிலடி, 10ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு (கே.கே.எஸ்.வீதி, பலாலி, யாழ்)

**வீ.வே. வைகைக்குமரன்**
முத்துக்குமார் சந்திரமோகன்
வெள்ளாங்குளம், மன்னார்
(ஜெயந்திநகர், கிளிநொச்சி)

7ஆம் பக்கத் தொடர்ச்சி

## உலகத் தமிழர்...

ஆய்வாளர்கள் இன்று அபிப்பிராயப்பட்டாலும், மேற்சொன்ன அத்தனை பேரையும் சேர்த்துச் செய்த கலவையாகவும், அதே வேளையில் தனித்துவமாகவும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் நிற்பதையும், திக்கற்ற தமிழீழ மந்தையை வாக்களித்த மண்ணில் வாழ வைக்க வந்த மௌனசயாவாகத் தமிழர்கள் மனங்களில் நிறைவதையும், இப்போது இல்லாவிடினும் காலம் இனி உணரக்கூடும்.

## பிரபாகரன் யார்?

வரலாறு கண் விழித்துப் பேசத் தொடங்கிய கடந்த 2000 ஆண்டுகள் காலத்தில், உலகின் தமிழினத்துக்குக் கிடைத்த மாபெருந் தலைவர் பிரபாகரன் தான் என்று கூறியிருக்கின்றார் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதம், இது வெறும் வார்த்தையன்று.

மகாவம்சப் புரட்டுக்களினால், சிங்கள பௌத்த வல்லாள்கை வெறியில் இருப்பவர்களுக்குக் காலன் ஆகவும், ஈழத்தின் அளவு கோலுக்குள் மட்டுமே வைத்து அளக்க நினைப்பவர்க்கு 80இன் பிற்பகுதியில் தோன்றிய பயங்கரவாதி அல்லது மாமனிதன் ஆகவும், உலகின் பார்வையில் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர்களில் ஒருவராகவும். உலகத் தமிழினத்தைப் பொறுத்தவரை 20 நூற்றாண்டுகளில் எவருமே ஒப்பாரும்- மிக்காரும் இல்லாத தலைவனாகவும், பிரபாகரன் விளங்குகிறார், விளங்குவார் என்பது முற்றிலும் உண்மையே! ■




**காணமற்போனவர்: எங்கள் தொண்டமானாற்றுச்சித்தப்பா**
**பாதிக்கப்பட்டுத் தற்கொலை செய்தவர் : எங்கள் பாப்பாச்சித்தி**
**நேரடிக் காரணகர்த்தாக்கள் : சிங்களக் கடற்படை**
**சம்பவம் நடந்த இடம் : தொண்டமானாறு – காங்கேசன்துறை கடற்பகுதி**
**சம்பவம் நடந்த ஆண்டு : 1983**
**வாக்குமூலம் : பெறாமகன்**

# சிங்களக் கடற்படையால் அழிந்துபோன வாழ்க்கை

**-சித்தியின் பெறாமகன்**

காங்கேசன்துறை நகரில் அம்மா, நாம் எல்லாம் தனியே வசிக்க, சித்தி, சின்னம்மா, அம்மாப்பு, அம்மம்மா, மாமா எல்லோரும் அம்மம்மா வீட்டில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள்.

இரவில் பொடியங்கள் இரகசியமாய் வந்துபோகும் இடம். அது மூலை முடுக்கு ஒழுங்கை எல்லாம் பச்சை ஜீப்பில் C.I.D பொலீஸ் திரிந்த காலம். அம்மாப்பு ஒரு சீன கம்யூனிஸ கொள்கைகளில் ஈர்க்கப்பட்டவர். மாவோவின் பொதுவுடமைக் கருத்துக்களில் விசுவாசம் மிக்கவர். அம்மா தீவிர தமிழீழ ஆதரவாளர். தனது மகளுக்காகவும், புரட்சியாளர்கள் என்ற ரீதியிலும் புலிகள் மீது மிகுந்த நம்பிக்கையும், மரியாதையும் அவருக்குண்டு. (இன்றும் வன்னிமண்ணில் தன் மகளுடன் வசிக்கின்றார்) எனவே போராளிகள் தமது பணிகளுக்காக அங்கு வந்து சென்றனர். அன்று ஒரு தோட்டா உயிரிலும் பெரிதாகப் பாதுகாக்கப்பட்ட காலம். இன்றைய தமிழீழப் படையணியின் அபாரவளர்ச்சியின் ஆன்ம பலமாக இன்றும் இருக்கும் எமது போராட்டப்பாதையின் அத்திவாரக்கற்கள், கரம்பிடித்த கருவிகள் அந்த வீட்டின் மண்ணுடனும் புரண்டு சென்றன. சுற்றிவர இருந்த பல கண்கள் இந்த வீட்டின் நிகழ்வுகள் சிலவற்றை, பலாலிப் படையினருக்கு அரச அதிகாரிகளாக இருந்த சில தமிழ் துரோகிகளும் சென்று ஒப்பித்ததும் உண்டு.

சித்தி மென்மையானவர். அம்மாவைப்போல துணிவும், மனத்தைரியமும் இல்லாதவர். பொலீஸ் என்றால் கதவைப் பூட்டி வீட்டுக்குள் ஒளிந்துவிடுவார்.

ஆனால் எங்களைத் தன் கண்ணால் வெருட்டி, தன் கைகளுக்கு கறுப்பு நிற கால் உறைகளைப் போட்டு, பேய் என்று வெருட்டுவார். அதனால் நாம் அவரை முழிச்சி என்று பேசிவிட்டு ஒளிவதுண்டு. அவர் எங்கள் மீது மிகுந்த நேசம் உடையவர். அவர் மீது நாமும் மிகுந்த அன்பு வைத்து இன்றும் வருந்துபவர்கள். பாப்பாச்சித்தி என்று செல்லமாக அழைப்போம்.

அம்மாப்பு, அம்மா அனைவரும் சித்திக்கு திருமணம் செய்ய முடிவு செய்தனர். இவர்தான் உங்கள் சித்தப்பா என்று அம்மாவும், சித்தியும் எங்கள் தொண்டமானாற்றுச்சித்தப்பாவைக் காட்ட அவர் குனிந்து என்னைக் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு, சில ஸ்டார் ரொபிகளையும், புளுட்டோ ரொபிகளையும் தந்தார். அவர் நினைவு வரும்போது இச்சம்பவம் அடிக்கடி நினைவுக்கு வரும்.

திருமணம் விரைவில் நடைபெறப் போகின்றது. எனவே சித்தப்பா தொண்டமானாற்றுக்குச் சென்றுவிட்டார். இங்கும் அனைவரும் மகிழ்ச்சியுடன் அதற்கான ஆயத்தங்கள் செய்து கொண்டு இருந்தனர்.

அம்மம்மா, அம்மாப்பு அங்கு சென்று வந்தனர்.

அடுத்த ஒரு மாதத்தில், ஒரு நாள் அம்மா அவசர அவசரமாக சித்தி வீட்டுக்குப் போனார். அங்கு அனைவரும் சித்தியைச் சுத்தி அழுதபடி இருந்தார்கள். அம்மா சித்திக்கருகில் சென்று அவரை அணைத்தபடி கேட்ட செய்தி

எங்கள் அன்பான சித்தப்பா கடலில் வைத்து சிங்களக் கடற்படையால் சுட்டுச் சாகடிக்கப்பட்டார் என்பதுதான். அவரும் அவருடன் இன்னும் நாலைந்து பேரும் கடலுக்குச் சென்றார்கள். அங்கு நடுக்கடலில் வந்த சிங்களப்படை

# வாசகர் மடல்

உலகின் மூத்த குடியினர், உலகின் மூத்த மொழியினர், பழம்பெரும் நாகரீகத்தின் சொந்தக்காரர் என்று நாம் கடந்தகாலங்களில் பெருமை பேசினோம். மிகப்புராதன காலத்தில் எமது ஆதி மரபினர் சிந்து நதிக் கரையோரம் தொன்மைக் குடிகளாக வாழ்ந்தனர். இலங்கைத்தீவின் ஆதிக்குடிகளாக ஈழத் தமிழர் அன்று வாழ்ந்தனர். இது வெறும் இலக்கிய இதிகாசக்கதையல்ல. விஞ்ஞானபூர்வமாக அகழ்வாராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஈழத்தின் பல்வேறு இடங்களில் பலரால் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினரால் ஆனைக்கோட்டையில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சியின் பொழுது கண்டெடுக்கப்பட்ட புராதன எலும்புக்கூடும், பழைய நாணயம், பெருங்கற்கால தாழிகள் என்பன இதனை விஞ்ஞானபூர்வமாக நிரூபித்துள்ளன. அங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயத்தில் கோவேந்து என்ற எழுத்து காணப்பட்டுள்ளது. விஜயன் கதையே கட்டுக்கதை என்றும் சிங்களவர்கள் சிங்கள மொழி என்பவற்றின் உருவாக்கத்திற்கு தமிழர் உட்பட பல இனங்கள் பங்களிப்புக்கள் செய்து உள்ளன என அண்மைய ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஐரோப்பியர் இலங்கைத் தீவிற்கு வருகை தர முன்பு யாழ்ப்பாண அரசும் திருகோணமலை, மட்டுநகரை உள்ளடக்கிய வன்னிய சிற்றரசும் இருந்துள்ளன. இலங்கை முழுவதையும் தமிழ், சிங்கள அரசர்கள் ஆண்டிருக்கிறார்கள். எல்லாளன் அதற்கு நல்லதொரு உதாரணமாகும். போத்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் பின் பிரிட்டிசாராலும் 1803ஆம் ஆண்டு வரை வன்னிச் சிற்றரசை அடிமைப்படுத்த முடியவில்லை.

ஈழ்த்து அரசுகளின் துறைமுகங்களில் சர்வதேசக் கப்பல்கள் வந்து நின்று வாணிபம் செய்த காட்சிகளை கற்பனை செய்து பாருங்கள். அன்று ஈழத்தவர்கள் தனி நாட்டவர்களாக வாழ்ந்தார்கள். 1796இல் இலங்கையின் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தின் முதலாவது ஆளுனர் நோத் அவர்கள் இலங்கைத்தீவின் வடக்குக் கிழக்கு நிலப்பரப்புக்கள் தமிழ் மக்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

1833ஆம் ஆண்டு கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கு அமைய ஈழமும் சிங்கள தேசமும் சிலோன் என்ற பெயரில் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தினால் ஒன்றிணைக்கப்பட்டது. இது மிகப் பெரிய வரலாற்றுச் சதி. பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் இலங்கையை விட்டுச் சென்றபொழுது சிங்களம் ஈழத்தின் இறமையைக் களவாடியது.

## மாவீரர் இலக்கு

இன்றளவும் இந்த அடிமை நிலை தொடருகின்றது. இதற்கு யார் காரணம்? பிரிட்டிஸ் பல்கலைக்கழகங்களிலே கல்வி கற்று எமது மக்களிடமிருந்து எதையும் கற்காத எமது பிற்போக்குத் தமிழ்த் தலைமைகளே காரணம். பழைய தமிழ்த் தலைமைகளிடம் தீர்க்கதரிசனம் என்கிற நுண்மான் நுழைபுலம் இல்லை, போரியல் அறிவு இல்லை. இந்திய அமைதிப்படையை ஈழத்திலிருந்து வெளியேற்றிய போரியல் அறிவு, ராஜதந்திரத் தெளிவு போன்று அன்றைய தமிழ்த் தலைமைகளிடம் இல்லை. மேடை ஏறினார்கள், முழங்கினார்கள், சோரம் போனார்கள், சோர்ந்து போனார்கள், சோர்ந்து வீழ்ந்தார்கள். பேரினவாதம் பௌத்த மத வெறி வளர்ந்தது. பாராளுமன்றத் தேர்தல் வெற்றிக்காய் ஈழத்தின் அடிமைச் சங்கிலி இறுகியது. பின்பு நடந்ததும் என்ன? சிறீலங்காவின் பாராளுமன்ற அடக்குமுறைச் சட்டங்கள், நிர்வாக ஒடுக்குமுறைகள், கல்வி, தொழில் வாய்ப்பு பாரபட்சங்கள், என்பனவற்றால் ஈழம் நசியுண்டது. தென் தமிழீழத்தின் 1/3 பகுதி திட்டமிட்ட குடியேற்றத்தால் பறிபோனது. 56,58,77,83 என கலவரங்கள் ஈழத்தவரை சூறையாடின. ஈழத்தவர்கள் ஒரு தேசிய இனம், அவர்கட்கு ஒரு பாரம்பரிய தாயகம் உண்டு என்ற அடிப்படைகளைச் சிதைத்து அழித்தொழிக்க வேண்டும் என்று சிறீலங்கா அரசு திட்டமிட்டுச் செயல்பட்டது. உணவு, மருந்து, பொருளாதாரத் தடைகள் சிறீலங்கா இராணுவத்தின் அரச பயங்கரவாதம் என்பனவற்றையே ஈழத்தவர்கள் தொடர்ந்து சந்தித்தனர். சிறீலங்காவின் ஆட்சியில் ஈழத்தவற்கு எங்குமே உயிர்ப் பாதுகாப்பற்ற நிலை, மரணத்துள் வாழ்வு என்ற நிலை. குறிப்பாகச் சொல்லப்போனால் ஈழம் சிறீலங்காவின் உள்நாட்டுக் காலனியாக நடத்தப்படுகின்றது.

இந்நிலையில்தான் பொறுத்தது போதும் பொங்கி எழுவோம், புதுயுகம் படைப்போம் என்று விடுதலைப் புலிகள் தோற்றம் பெற்றார்கள். போரியல் அறிவால் இராணுவ விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்று எம்மைப் பாதுகாப்போம். எமது சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுவோம் என்று புலிகள் எழுந்தார்கள். நாம் ஒரு தேசிய இனம் வரலாற்று ரீதியாக உருவாக்கப்பட்ட பொதுத்தாயகம், பொதுமொழி, பொதுப்பொருளாதாரம், பொதுக்கலாச்சாரப் பண்பாடு என்பன கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். எமக்கிருக்கின்ற சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவோம் என்று விடுதலைப் புலிகள் ஈழத்தின் தேசிய விடுதலை இயக்கமாக, தேசிய விடுதலை இராணுவமாக வளர்ச்சி பெறுவதைத் தடுக்க முடியாத சிறீலங்கா, இந்திய அரசுகள் சதி முயற்சியில் ஈடுபட்டனர். இறுதியில் தோல்வி கண்டன.

இன்று விடுதலைப் புலிகள் ஈழத்தின் சுயநிர்ணய உரிமைக்கான உறுதியான போராட்டத்தினால் பெரும் இன அழிவு தடுத்து நிறுத்தப்படுகிறது. உலகநாட்டு அரசுகள் இரகசியமாக எமது போராட்டத்தை உற்றுப் பார்க்கின்றன. ஓயாத அலைகளின் வெற்றியின் பின்பு அமெரிக்க அரசின் உயர்மட்டத்திலிருந்து எமக்கு ஆதரவாக சில குரல்கள் எழுகின்றன.

எமது மாவீரர்களின் அர்ப்பணிப்பு, தியாகம், உறுதியான எதற்கும் இலட்சியத்தை விட்டுக்கொடுக்காத விடுதலைப் புலிகளின் போர்க்குணம். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முதல் காணாமல், மறைந்து புதையுண்டு மறக்கடிக்கப்பட்டு கருவிவிட்டதோ என்று நினைத்த ஈழத்தவரின் போர்க்குணம் மீண்டும் விதையாக நட்டு தம் உயிரை பசளையாயிட்டு முளைக்கவைத்தார்கள் இந்த மாவீரர்கள். விடுதலைப் புலிகள் தான் உலகம் முழுவதும் ஈழத்தின் பெயரை உச்சரிக்கச் செய்தவர்கள்.

ஈழத்தின் கடந்தகால நிகழ்கால நிலையை நோக்கினோம். எமது மாவீரர்களின், விடுதலைப் புலிகளின் ஈடு இணையற்ற போராட்டத்தால் ஈழத்தின் சுதந்திரம் நாளை நிலை நிறுத்தப்படும். இதுவே எமது சுதந்திரத்தின் விடுதலையின் சமூக மாற்றத்தின் அத்திவாரமாக அமையும். பிறக்கின்ற ஈழத்தில் தமிழர்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதே மாவீரர்களது கனவாகும். அடிப்படை மனித உரிமைகள் கொண்டதாக எத்தகைய வர்க்க சமூக பிரதேச மத இன பேதங்கள் அற்ற நாடாக ஈழம் விளங்க வேண்டும்.

புலம்பெயர்ந்த மக்களாகிய நாங்கள் இரவல் நாட்டில் வாழ்கிறோம். ஐரோப்பாவில் நெருக்கடி நிலை தோன்றும்பொழுது ஐரோப்பிய அரசுகள் தமது நல்வாழ்வை மட்டுமே முதலில் உறுதிப்படுத்துவார்கள். இதனைப் புலம்பெயர்ந்த மக்கள் நன்குணர்ந்து கொள்ள வேண்டும். எம்மிற் பெரும்பாலோர் ஏதோ ஏதோ காரணங்கள் சொல்லிப் புலம்பெயர்ந்தவர்கள், போராளிகள் சிந்திய சிந்துகின்ற இரத்தத்தினால் வெளிநாடுகளில் தஞ்சமடைந்து வாழ முடிகின்றது. என்பதை நாம் என்றும் மறத்தல் ஆகாது. எம்மிற் பலர் ஆத்மரீதியாக பிறந்த மண்ணிற்கான கடமைகளைச் செய்யாமல், தாயகத்தைவிட்டு வந்தமைக்கான நஸ்டஈட்டை எவ்வகையிலும் செலுத்த முடியாது. ஆனால் எமது ஆத்ம திருப்திக்காக எமது தேசியக் கடமையாக எமது மக்களின் விடுதலைக் கடமைகளை, நிதிப்பங்களிப்பினை நாம் செய்தாக வேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்களே! மாணவர்களே! நீங்கள் எமது மண்ணின், மக்களின் சமூக பொருளாதார விடுதலைக்கு உதவக் கூடிய கல்வியினை தேடிப்பயில வேண்டும். எமது மாவீரர்கள், போராளிகள் செயற்பாட்டை தியாகத்தை சிந்திந்துப் பார்த்தால் புலம்பெயர் வாழ்வு மிக அற்பமானதாகவே தோன்றும். ஈழத்தின் செயற்பாட்டு அணியாக நீங்கள் உருவாகவேண்டும். ஈழத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கான சர்வதேசப் பிரச்சாரத்தில் ஈடுபடுங்கள். அல்லலுறும் மக்களுக்காய் நிதி சேகரியுங்கள். உங்களுக்கு ஒன்றை மாத்திரம் ஞாபகப்படுத்துகிறேன் கலாநிதி வொ-டொங்-சுவான் என்கின்ற வியட்நாம் அறிஞர் இருந்தார். இவர் வெளிநாட்டில் கல்வி கற்றவர். அரிசி இறக்குமதி செய்யும் நாடாக இருந்த வியட்நாமை, அரிசி ஏற்றுமதி செய்யும் உலகின் மூன்றாவது பெரிய நாடாக மாற்றினார். வெளிநாட்டில் இருந்து திரும்பி வியட்நாமில் வாழ்ந்து தனது விவசாய ஆராய்ச்சி மூலம் இதனைச் செய்தார். இந்த உணர்வு, இந்த அறிவு, இந்த ஊக்கம் உங்களுக்கும் வர வேண்டும். புலம்பெயர்ந்த இளைஞர்களே மாணவர்களே! உங்களுடைய உழைப்பின் ஒரு பகுதியையாவது கடமையாகத் தருமாறு ஈழத்தாய் உங்களை இறைஞ்சிக் கேட்கின்றாள்.

ஈழத்தில் நாளை சுயநிர்ணய சுதந்திர சூரியன் மலருவான். அவன் சமத்துவமான, ஜனநாயக ஒளியைத் தருவான். இந்த விடியலுக்குப் புலம்பெயர்ந்த மக்கள் காலம் தாழ்த்தாது தமது கடமைகளை, நிதி வழங்கலை செய்ய முதன்மையாக முன்வர வேண்டும். இதன் மூலம் ஈழத்தில் எமது மக்களின் இழப்புக்கள் குறைந்து விடியல் விரைவாகும். ஆகவே மாவீரர்கள் நினைவாக புலம்பெயர்ந்த மக்கள். காலத்தின் கட்டாயப் பணியை விரைந்து செய்தல் வேண்டும்.

**நா.சி.இ. அழகன்**

-ஜேர்மனி-

---

அவர்களை மறித்துவிட்டு, அதிலேயே இருவரைச் சுட்டதும் இருவரும் கடலில் விழுந்தனர். மிகுதிப்பேருக்கு திருக்கைவாலாலும், சங்கிலியாலும் அடித்துவிட்டு அவர்கள் எல்லோரையும் தம்முடன் ஏற்றிவிட்டு படகை மூழ்கடித்தனர். சூடுபட்டுக்கடலில் விழுந்தவர்கள் கரையேறவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரம் இல்லை.

இது முதலில் கிடைத்த செய்தி. அன்றே எங்கள் வீடு செத்தவீடானது. பின்பு சூடுபட்டவர்களில் ஒருவர் உயிருடன் கரைசேர்ந்தார். அவர் மூலமே மேற்சொன்ன தகவல்கிடைத்தது. எனவே அனைவரும் சற்று மகிழ்ச்சியுடன் பலாலி இராணுவமுகாமுக்கும், பருத்தித்துறை இராணுவக் கடற்படை முகாம்களுக்கும் சென்று விசாரித்துப் பார்த்தார்கள். பதில் இல்லை. அப்படி எவரையும் கடலில் தாம் கைது செய்யவில்லை என்ற பதிலே கிடைத்தது. மாறி மாறி அங்கும் இங்கும் அலைந்ததுதான் மிச்சம். அதன் பின்பும் கடற்படையால் பலர் காணமற்போயும், தாக்கபட்டும் வந்தனர். சிலர் மீண்டனர். சிலர் காணமற் போனோர் பட்டியலை நீட்டினர். தம்மை யாராலும் எதுவும் செய்யமுடியாது என்ற மமதையில் எமது கடலில் சிங்களக்கடற்படையின் அட்டகாசம் அன்று சொல்லமுடியாத அளவு அதிகரித்தது. எனினும் எமது காலமும் வரும் என்ற நம்பிக்கையில் நாட்கள் நகர்ந்தன.

சித்தப்பாவின் சம்பவம் சிறிது மறைந்து அனைவரும் அன்றாடக்கடமைகளுக்கு மீண்டாலும், சித்தியில் மாறுதல் தெரிந்தது. பயந்த சுபாவம் கொண்ட அவர் இன்னும் அதிகமாக யோசித்து யோசித்து திக்கப்பிரமை பிடித்தவர் மாதிரி இருந்தார். கனத்தநாட்களில் இது கூடும். எல்லோருக்கும் இது மிகுந்த வேதனையாக இருக்க, சித்தியைத் தனிமையில் இருக்கவிடாமல் பெரியம்மா வீட்டிலும், எமது வீட்டிலும் வந்து வந்து போகச் செய்தார்கள்.

அப்படி ஒருநாள் எமது வீட்டிற்கு வந்த சித்தி, அம்மா சாப்பிடக்கேட்க, வேண்டாம் சின்னக்கா, வீட்டில குஞ்சக்கா பாத்துக்கொண்டு நிற்பார் நான் அங்க சாப்பிடுறன் என்று சொல்லிவிட்டு போனார். அன்றுதான் சித்தியைக் கடைசியாகப் பார்த்தது. அதன்பின்னர் வீட்டில் உண்மையிலேயே ஒரு செத்தவீடு. ஆம் சித்தி நித்திரைக்குளிசைகளைப் போட்டு தன்னைத் தற்கொலை செய்து கொண்டார்.

துன்பத்தைத் தாங்கிப் பழகிக் கொண்ட, அம்மாவும் அம்மாப்புவும் இதனையும் தாங்கிக்கொண்டனர். அவர்கள் மட்டுமல்ல இன்னும், இன்றும் பல எமது உறவுகள் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு எமது நிரந்தர விடியலுக்காகவும், எமது கடலை சிங்களவனிடமிருந்து மட்டுமல்ல, கழுகுகள், முச்சிங்கங்கள், அசோகச்சக்கரங்களின் பிடியிலிருந்தும் மீட்கவேண்டும் என்பதற்காக, தனிப்பட்ட எமது குறுகிய வட்டத்திற்குள் சோகத்திற்குள் நாம் மூழ்கிவிடக் கூடாது. இந்த ரணம் இன்னும் எனது மனதைவிட்டு அழியவில்லை, அழியாது.

( பிற்குறிப்பு சித்தப்பாவின் கைது அல்லது கொலைக்கு சில எம்முடன் வாழும் கோடாரிக் காம்புகளும், சில பொறாமை பிடித்த நயவஞ்சகக் கூட்டமும் காரணம் என்று தெரிய வந்தது. அவர்கள் இவர் படத்தை பலாலி முகாமிற்குக் கொடுத்திருந்தனர்) ■

www.tamilarangam.net



# வேவும் வேள்



லெப்கேணல் மைதிலி
துணைத்தளபதி, மாலதி படையணி
சாந்தி வேலும்மயிலும்
யாழ்ப்பாணம்
1973. 01. 25–1999. 12. 20

கோல்சிலில் எந்நேரமும் இருக்கும் குண்டுகளில் ஒன்று எதிரிக்கு, மற்றது தனக்கு. எதிரியின் கையில் தன் உடல் கூடக் கிடைக்கக்கூடாது என்பதில் அவ்வளவு தீவிரம். நீண்ட காலம் வேவுப்பணியில் இருந்தபோது வந்த அந்தப் பழக்கம். பின்னர் கரும்புலிகளின் பொறுப்பாளராக, தாக்குதல் அணி ஒன்றின் பொறுப்பாளராக, மாலதி படையணியின் துணைத்தளபதியாக பொறுப்புக்கள் மாறியபோதுகூட, மாறவில்லை. கையெறிகுண்டினையும் மைதிலியையும் கனவில் கூடப் பிரிக்க முடியாது.

வேவு பார்க்கப் பகைமுகாமினுள் கால் வைக்கும் பொழுதுகளில் குறைந்தது நான்கு குண்டுகள் கையில் இருக்கும். குண்டுகளின் பாதுகாப்பு ஊசி முழுமையான நிலையில் இருக்காது. அரைவாசி இழுக்கப்பட்டே இருக்கும்.

ஏன் மைதிலி இப்படி?

எதிரியைக் கண்டவுடனேயே அடிக்கக் கூடிய மாதிரி இருக்க வேணும். கிளிப்பைக் கழட்டுறதுக்கு எங்களுக்கு எடுக்கும் ஒரு செக்கன் அவகாசத்தைக்கூட எதிரிக்குக் கொடுக்கக்கூடாது. அது எங்களுக்குத்தான் ஆபத்து.

சூரியக்கதிர் -01 முடிந்த பின்னரான நாட்களில், மைதிலியின் அணி வேவுக்காக வாதரவத்தைப் பகுதியில் எதிரியின் பார்வைக்குட்பட்ட பகுதியில் புகுந்தது. இரண்டாகப்பிரிந்து. ஒரு அணி வெளிப்புறக் காவலில் நிற்க, மைதிலி அடுத்த அணியுடன் எதிரியின் பிரதேசத்துள் நுழைவதற்காக அவதானித்தவாறே நகர்ந்து கொண்டிருந்தார்.

வெளிப்புறக் காவலுக்கு நின்ற அணி, மைதிலி போன திசையிலேயே போய்க்கொண்டிருந்தது. அவர்களைத் திசை திருப்புவதற்காக இவர்கள் தாக்கிவிட்டு வெளியேறிவிட்டார்கள். இந்தச் சத்தத்தால் உஷார் நிலையடைந்த மைதிலியும் மற்றவர்களும் இராணுவத்துடன் மோதாமலேயே தம் நிலைக்குத் திரும்ப முயன்றனர். ஆனால் இராணுவமோ பரவலாகத் தேடத் தொடங்கிவிட்டது. சில வேளை இவர்களைக் காணலாம் காணாமலும் விடலாம். கண்டால் சண்டைதான். இவர்கள் நின்ற தென்னந்தோட்டத்தில் மறைவதற்குக் காப்பான இடங்கள் அற்ற நிலையில், இடையில் இருந்த ஒரே ஒரு பனைவடலிக்குள் மறைந்து கொண்டனர்.

இதற்குள் மைதிலி ஒரு குண்டின் பாதுகாப்பு ஊசியை அகற்றி, ஒரு கையிலும், பின்னர் இன்னொரு குண்டின் பாதுகாப்பு ஊசியை அகற்றி மற்றக் கையிலும் வைத்திருந்தவர். இராணுவம் நெருங்க நெருங்க இடைப்பட்டியில் இருந்த இன்னும் இரண்டு குண்டுகளின் பாதுகாப்பு ஊசிகளைப் பற்களால் கழற்றி எறிந்துவிட்டு, இரண்டு கைகளிலுமே இரண்டிரண்டு குண்டுகளுடன் படுத்திருந்தார். இரண்டு கைகளும் தம் சக்திக்கு அப்பாற்பட்ட பலத்துடன் குண்டுகளை இறுகப் பற்றியிருந்ததால் வேகமாக வியர்க்கத் தொடங்கின.

பின்னொருதரம் மைதிலி தன்னுடைய இந்த அனுபவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தபோது, மலைத்துப் போய் நாலு குண்டுக்கும் கிளிப் கழட்டிப் போட்டோ? என்று கேட்க சிரித்தவாறே, அது ஒண்டும் பெரிய கஸ்ரமில்லை. கை பயிற்சி செய்து இறுக்கமாயிருந்தால் யாரும் வைச்சிருக்கலாம். தப்பிவர வழியே இல்லை. சுத்திவர ஆமி. என்ன பிரச்சனை வந்தாலும் உயிரோட பிடிபடவோ, உடம்பு கிடைக்கவோகூடாது எண்டுதான் நான் அப்பிடிச் செய்தனான் என்றார்.

சரி பிறகு என்ன நடந்தது?

தென்னந்தோட்டத்துக்கு வந்த உடனே அவங்கட மூட் மாறிவிட்டுது. இளநீர் குடிச்சாங்கள். தேங்காய் பிடுங்கி ஒரு சாக்கில கட்டிக்கொண்டு போக வெளிக்கிட்டாங்கள். எங்கட வடலியைக் கடந்து போய்க் கொண்டிருந்தாங்கள். கொஞ்சம் அசைஞ்சாலும் தெரிஞ்சிடும், எங்களுக்குக் கிட்டநிண்டு சிகரட் பிடிச்சாங்கள். புகை மணத்துக்கு இருமல்வர கஸ்ரப்பட்டு அடக்கினோம். அப்படியே எல்லாரும் போய்க் கொண்டிருக்க, சாக்கு வழுக்கித் தேங்காய் எல்லாம் விழுந்து உருண்டுது. எங்களுக்குக் கிட்ட ஒரு தேங்காய் வந்தது. அவங்கள் அதைக் கவனிக்கேல்ல, மற்ற எல்லாத் தேங்காயையும் பொறுக்கிக் கொண்டு போக வெளிக்கிட, ஒருவன் மட்டும் சடாரெண்டு திரும்பி எங்கட பனை வடலியை நோக்கி வந்தான். சரி இனிச் சண்டைதான் என்று நினைத்தேன். வந்தவன் வடலியருகே நிண்டு நிதானித்துவிட்டு, குனிந்து அந்தத் தேங்காயை எடுத்துக் கொண்டு திரும்பிவிட்டான்.

அபாயம் விலகியதும், அவர்கள் வேகமாக வெளியேறி ஆபத்து எல்லையைத் தாண்டியபின், சட்டை ஊசிகளையும், தலைக் கிளிப்புக்களையும் குண்டுகள் வெடிக்காத வண்ணம் பாதுகாப்பு ஊசிகளாகச் செருகிக் கொண்டு தங்களுடைய இடம் திரும்பிய மைதிலிக்கு ஒரு பேராச்சரியம் காத்திருந்தது.

உள்ளே போனவர்களின் தொடர்பும் இல்லை. வெளிப்புறக் காவலில் நின்றவர்கள் அடித்துவிட்டு வந்து சேர்ந்தும் விட்டார்கள். இந்த நிலையில் மைதிலியை நாங்கள் இழந்து விட்டோமா? என்ற கேள்வி மனதில் அலைபாய, மைதிலியின் இடத்தில் படையணியின் சிறப்புத் தளபதி காத்திருந்தார். முன்னரும் எத்தனையோ முறை பகைக்குகைக்குள் புகுந்து பேராபத்தையெல்லாம் கடந்து திரும்பிவந்த மைதிலி இன்றும் வரலாம். வரவேண்டும் என்று அவர்கள் வரும் வழியைப் பார்த்திருந்தார்.

தூரத்தே பற்றைகளுக்கிடையே சில உருவங்கள் ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருப்பது தெரியத் தொடங்க, மைதிலிதான் வந்து கொண்டிருக்கின்றார் என்பது எல்லோருக்குமே புரிந்துவிட சந்தோசத்தில் மனமெல்லாம் நிறைந்து போகப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

தங்கள் வரவுக்காக சிறப்புத் தளபதி வந்து காத்து நின்றதில் மைதிலி சந்தோசத்தில் திக்கு முக்காடிப் போனாள். அத்தனை நேரமும் தாம் பட்ட கஸ்ரங்கள் எல்லாம் அந்த நிமிடத்தில் கரைந்து போயின.

பாதுகாப்பு ஊசியைக் கழற்றிவிட்டு குண்டை வைத்திருப்பது மைதிலிக்கு இதுதான் முதற் தடவையுமல்ல, இதுவே கடைசிமுறையுமல்ல. முன்னர் யாழ். பலாலியைச் சூழவுள்ள காவலரண் பகுதியில் நடந்த சண்டையில் கால் முறிந்தபோதும், பின்னர் சூரியக்கதிர்-02 நடவடிக்கையில் வாயில் காயமடைந்து, கீழ்த்தாடைப் பற்களை இழந்த நிலையிலும் தான் தனித்துப் போனபோது தன் உடலின் கீழே பாதுகாப்பு ஊசி கழற்றப்பட்ட நிலையில் குண்டுகளை வைத்திருந்தார். ஏதேனும் சிக்கல் காரணமாக மைதிலியை, எம்மவர்கள் போக முன்னர் எதிரி நெருங்கியிருந்தால், நிச்சயம் அவள் தொலைந்திருப்பாள்.

இரவு பகலென்றில்லாமல் எப்போதுமே சண்டைக்குத் தயார் நிலையிலிருந்த போராளி என்று மைதிலியைக் குறிப்பிட்டால் அது மிகையில்லை. தாக்குதலணியின் மேலாளராக அவர் பணியாற்றிய காலங்களில் காவற்கடமையைச் சோதிப்பதற்காக அவர் செல்லும் போது துப்பாக்கியின் தொங்குபட்டி அவரது கழுத்தைச் சுற்றிப் போடப்பட்டு, எந்த நிமிடமும் தோளுக்கு உயர்த்திக் குறிபார்க்கக்கூடிய நிலையில் துப்பாக்கி முன்புறமாகத் தொங்கும். துப்பாக்கியின் தேர்வு நெம்பு தனிச்சூட்டு நிலையில் விடப்பட்டு வலது கை துப்பாக்கிக் கைபிடியை பிடித்திருக்க, வலது கை ஆட்காட்டி விரல் விசைவில்லருகே இருக்கும்.

ஆமியைக் கண்டால் உடனேயே சுடுதான், அவனைக் கண்டாப்பிறகு சேப்பிடியைத் தட்டி எய்ம் பார்த்தெல்லாம் மினக்கெடக்கூடாது எங்கடை ஒரு செக்கன் தாமதமும் எதிரிக்குச் சாதகமாகிவிடும் என்பார். தன்னைப் போலவே எங்களையும் துப்பாக்கியைக் கழுத்தில் தொங்கவிடப் பழக்கினார்.

தேவையெண்டால் உடனேயே உயர்த்திச் சுடலாம். இல்லாட்டா அப்படியே விட்டிட்டு ரெண்டு கையையும் வீசிக் கொண்டும் போகலாம் என்றார். செய்தும் காட்டினார்.

ஒவ்வொரு விடயத்திலும் முன் யோசனையும் அவதானமும் மிக அதிகம். தன் துப்பாக்கி மழையில் நனையாமலிருக்க ஒரு உறை தைத்து வைத்திருந்தார். அதன் அமைப்பின்படி துப்பாக்கிமட்டும் மூடப்பட தொங்குபட்டி வெளியில் இருக்கும். அது பழுதடைந்தபின் இன்னொன்று புதிதாகத் தைத்தார். அது எப்படியென்றால் துப்பாக்கியின் தாழ்ப்பாள் கைபிடி வெளியில் நிற்கக்கூடியவாறு ஒரு ஓட்டை, விசைவில்லில் விரல் வைக்கக் கூடியவாறு ஒரு ஓட்டை, ரவை வெளியேறக் கூடியவாறு ஒரு ஓட்டை, தொங்கு பட்டி முன்பு போல வெளியே தொங்கும். புதிய உறையில் துப்பாக்கியை வைத்து எிப்பை இழுத்து மூடியவாறே,எப்படிச் செற்றப்? மழை பெய்யிற நேரம் ஆமியைக் கண்டால் உறையைக் கழட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. இப்படியே சுடலாம், என்று சொன்னவர் உறையால் மூடப்பட்ட துப்பாக்கியை மெல்லத் தடவியவாறே ஆழமாகப் பார்த்தார். பின் மெதுவாக இன்னும் ஒரு சின்னவேலை செய்திருக்கலாம். ரவுண்ஸ் அடிக்கிற நேரம் கொக்கிங் காண்டில் பின்னுக்கு அசைக்கிறதுக்கு இடைவெளி விட்டுத் தைச்சிருக்கலாம். இப்பதான் யோசனை வருது. பரவாயில்லை, அடுத்த முறை தைப்பம் என்றார்.

என்ன மைதிலி? எல்லாப் பக்கத்தாலையும் ஒவ்வொரு ஓட்டை வைச்சுக் கடைசியா ரைபிலே நனையப்போகுது. என்று சும்மா சிரித்தாலும், மைதிலியின் ஆழமான சிந்தனை பிரமிப்பைத் தந்தது. (அந்த இடைவெளி இல்லாவிட்டாலும் உறையைக் கிழித்தவாறு தாழ்ப்பாள் அசைந்து கொள்ளும் அதிலும் ஒரு சிக்கலுமிருக்கவில்லை.) இந்தக் கூர்மையான பார்வையும் ஆழமான சிந்தனையும் நீண்டகால வேவு அனுபவத்தில், தலைவன் வளர்ப்பில் மைதிலியிடம் வந்து சேர்ந்தவை.

எதிரி நிலைகளின் தூரங்களைக் கண்ணால் கணித்து தரவு எடுப்பதை அனுமதிக்கவே மாட்டார். அவரது அணியினர் கையோடு 5 மீற்றர் நீளமான கயிறு ஒன்றை எடுத்துச் செல்வர். எதிரியின்



www.tamilarangam.net



# விகளும்

காவலரண்களுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் மண் அணையின் விளிம்பில் பிடித்து அளக்கத் தொடங்குவார்கள். அப்படியே எடுக்க வேண்டிய தூரங்களையெல்லாம் அந்தக் கயிற்றுத் துண்டை வைத்து வைத்தே அளப்பார்கள்.

எத்தனை அடுக்கு முள்வேலி என்பதைக் கைகளால் தொட்டுத்தான் எண்ண வேண்டும். தள்ளி நின்று கண்களால் எண்ணும் வேலையே கிடையாது. ஓரிடத்தில் முள்வேலியைத் தொட்டு எண்ணிவிட்டு, பின் வலப்புறமும் இடப்புறமும் கொஞ்சத் தூரம் இடைவெளி விட்டு விட்டு 'எண்ணிப் பார்த்துத்தான் எத்தனை அடுக்குக் கம்பிவேலி என்பதை உறுதிப்படுத்தி, மைதிலி வரைபடம் வரையத் தொடங்குவார். தகவல்களை உறுதிப் படுத்தாமல் ஒரு நாளும் தரவுகளைத் தயாரித்ததில்லை.

எண்ணிலடங்காத இரவுகள் மைதிலி தன் அணிகளுடன் எதிரியின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக பகைக்குகைக்குள் நுழைந்து அவதானித்துவிட்டு, வந்த சுவடு தெரியாமலேயே திரும்பியிருக்கிறார்.

காலன் அவரது காலடிவரை வந்தும், வேளை வரவில்லையென்று திரும்பிப் போன நாட்கள் அநேகம். நான் இனிச் சாகமாட்டன். ஏனெண்டா சாவை நான் கனதரம் கடந்து வந்திட்டன் என்று சொல்லிச் சிரிப்பார்.


ஒரு முறை எதிரிப் பிரதேசத்தைக் கண்காணிப்பதற்காக மைதிலி சரசரவென்று ஒரு மரத்தின் உச்சியில் ஏறி, நிமிர்ந்து பார்த்துத் திகைத்துப் போனார். எமது பிரதேசத்தைக் கண்காணிப்பதற்காக பக்கத்து மரத்தில் ஏற்கனவே ஏறி நின்ற இராணுவ வேவுக்காரன் ஒருவன் தன்னையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்ததை மரத்தில் ஏறிய பின்பே மைதிலி கண்டார். இருவருக்குமே கொஞ்ச நேரம் என்ன செய்வதென்று தெரியவில்லை. முதலில் தன்னைத் திடப்படுத்திக் கொண்டது மைதிலிதான், எதிரி நின்று நிதானித்து, மேலதிக இராணுவத்தை' வரவழைத்துச் சுற்றி வளைத்து... என்று நிலைமை மோசமடையமுன் ஏறிய வேகத்திலேயே இறங்கத் தொடங்கினார். எதிரியும் வேகமாக இறங்கத் தொடங்க, அவனுக்கு முன்பே நிலத்தைத் தொட்ட மைதிலி புயலாக வெளியேறிவிட்டார்.

மைதிலி தன்னுடைய ஆட்களுடன் பதுங்கிப் பதுங்கிப் போக, இவர்களைப் போலவே பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருக்கும் எதிரியின் வேவு அணியில் முட்டி முகத்திற்கு முகம் சந்தித்துவிட்டு, மின்னலாக இடம்மாறிய நாட்கள் அநேகம். கைகுலுக்க வரும் காலனுக்குப், பிறகு சந்திப்போம் என்று மைதிலி கைகாட்டிவிட்டு வருவதுதான் வழமை.

முடியாது, இயலாது என்ற சொற்கள் மைதிலியின் அகராதியிலேயே இல்லை. யாழ்ப்பாணத்தில் நாம் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் வெற்றிலைக்கேணி இராணுவத் தளத்தைத் தாக்க மூன்று பாதை எடுக்குமாறு பத்துநாள் காலக்கெடு கொடுக்கப்பட்டது. வேலையைக் கொடுத்தது ஆண்போராளிகளின் பொறுப்பாளர். இவர்களால் இதைச் செய்ய முடியுமா என்று நம்பிக்கையே இல்லாமல் அரைமனதுடன் அவர் வேலை தந்ததில் மைதிலிக்குச் சரியான கோபம்.

எங்களைப் பற்றி எல்லாரும் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்? என்று அணிகளைக் களமிறக்கிய மைதிலி மூன்றே நாளில் மூன்று பாதைகளையும் எடுத்துவிட்டு வரைபடத்தைக் கொடுத்தபோது அந்தப் பொறுப்பாளர் மலைத்துப் போனார். அதன் பின்னர் எந்த வேவு நடவடிக்கையென்றாலும் அவர் மைதிலியின் அணியைக் கூப்பிடத் தவறியதேயில்லை.

வேவுப் புலிகளை தன் பிள்ளைகளாய் நேசித்த மைதிலி, கரிய புலிகளாய் நடக்கும் அண்ணனின் தங்கையர் எல்லோரையும் ஒரு தாயாகவே நிர்வகித்தார். அந்த வேலைக்கென மைதிலியைத்



தேர்ந்தெடுத்ததும் தலைவர்தான்.

கரும்புலிகளின் பயிற்சிகள் மிகக் கடினமானவை. குறிக்கப்படுகின்ற நேரத்துக்குள் ஒவ்வொரு பயிற்சியும் செய்து முடிக்கப்பட வேண்டும். உங்களாலை முடியும், செய்யுங்கோ, நல்லாச் செய்யுங்கோ, நல்லாச் செய்யுங்கோ. என்று உற்சாகப் படுத்தியவாறே நொண்டி நொண்டி அவர்களின் பின்னால் ஓடித் திரிவார். சண்டையொன்றில் முறிந்து

இருண்ட
தேசத்தின் விடியலை
அழைத்துவர
இரவுகளில் எதிரிக் குகையுள்
நடந்தாய்
கரிய புலியாய் நடக்கும்
தங்கையர் கனவுகள் வெல்ல
கடும்பணி செய்தாய்
இதய மெல்லாம் ஈழ மக்களின்
துயர்கள் சுமந்தே களங்கள்
சென்றாய் எங்கள் ஊர் புகுந்த
பகைவரைக் கொன்றாய்
இணையற்ற தலைவனின்
இதயத்தை
வென்றாய்..

பொருத்தப்பட்ட வலது கால் சற்று வெளிப்புறம் நோக்கி வளைந்தபடி கொஞ்சம் கட்டையாக இருக்கும். அந்தக் காலில் இரண்டு செருப்புக்களை ஒட்டி அணிந்து தன் உயரத்தைச் சமப்படுத்திக் கொள்வார். ஒட்டப்பட்ட செருப்புடனேயே ஓடித்திரிந்தார். இரண்டு செருப்புக்களின் பாரத்தாலும் அதிக நடையாலும் இரண்டு மாதங்களுக்கு மேல் செருப்புவார் அறாமல் பாவித்ததாகச் சரித்திரம் இல்லை. சட்டை ஊசியைக் குத்தியும் செருப்பில்லாமலும் மைதிலி நடந்த நாட்கள் அதிகம்.

கரும்புலிகளுக்கு விடிய விடியப் பயிற்சி நடக்கும். எல்லாம் முடியும் வரையில் அவர்களுடனேயே மைதானத்தில் நின்று, இருப்பிடம் திரும்பிக் களைப்புடன் அவர்கள் உறங்கிவிட, தேநீர் தயாரித்து சிற்றுண்டியுடன் வந்து எழுப்பிக் கொடுத்து, அவர்களின் ஒவ்வொரு தேவையையும் உணர்ந்து கவனித்து, அவர்களின் ஒவ்வொரு திறமையையும் கண்டு ஊக்குவித்து, இலக்கு நோக்கி பகைக் குகைக்குள் அவர்கள் பயணிக்கும்போது எதிரியின் கடைசி முட்கம்பித் தடைவேலிவரை போய் விடைகொடுத்து, நேற்றுவரை தன் கையால் சோறுண்டவர்கள், காற்றாகிப்போன பிரிவைத் தாங்கவேமாட்டாமல் கரும்புலியாகப் போகும் தனது விருப்பத்தைத் தலைவரிடம் தெரிவித்தார்.

ஓயாத அலைகள்-02 முடிந்து அப்போது நாங்கள் கிளிநொச்சியில் நிலை கொண்டிருந்தோம். நல்ல மழைகாலம். அருவியெல்லாம் பெருகியோட, மரங்கள் அடிக்கடி தம் ஆடைகளை அலசிச் சுத்தம் செய்து கொண்டிருந்தன. மரங்களின் அருகே போனால், காற்றோடு கைகோர்த்து எம் மீது பன்னீர் தெளிக்கும். இந்த இயற்கை அழகில் லயித்துவிடும் மைதிலி, தமிழீழம் சரியான வடிவு எண்டு எப்ப உலகத்துக்குத் தெரியப்போகுது? என்றவாறு நடப்பார். கார்த்திகைப் பூவைக் கண்டால் அப்படியே நின்றுவிடுவார். கார்த்திகைப் பூவைப் பார்த்தால் (கரும்புலி மேஜர்) நிலவனின் நினைவுதான் வரும், நிலவன் இப்பிடித்தான் இயற்கையை ரசிக்கும், "கார்த்திகைப்பூக்கள் பூத்திடும் மாதம் நடந்தீரே" எண்டு நிலவன் எழுதின பாட்டு எவ்வளவு உண்மையானது. கார்த்திகைப் பூவைக்கண்டால் நிலவனுக்கு மாவீரரின்ரை நினைவு வரும். எனக்கு நிலவனின்ரை நினைவும் சேர்ந்து வருது.

மைதிலியில் மிகவும் மதிப்பு வைத்திருந்த நிலவன் தான் எழுதும் ஆக்கங்களை புலிகளின் குரல் வானொலிக்கு அனுப்பமுன் மைதிலியிடம் காட்டிச் சரிபார்ப்பார். தான் வீரச்சாவடைந்த பின் தனக்குக் கவிதை எழுதுமாறு மைதிலியிடம் அடிக்கடி சொன்னார். நிலவன் வீரச்சாவடைந்தபோது மைதிலி கிளிநொச்சியில் தாக்குதல் அணியுடன் நின்றதால் போக முடியவில்லை. ஆனால் நிலவனுக்காக மைதிலி எழுதி ஒலிபரப்பான கவிதை நிச்சயம் நிலவனின் ஆன்மாவுக்குக் கேட்டிருக்கும்.

ரணகோச-05, ஒரு சவாலான சண்டை, மன்னார் மாவட்டத்தில் தன்னை நிலை நிறுத்த மேஜர் ஜெனரல் வசந்த பெரேரோ எண்ணியபோது எம்மை நாம் நிலை நிறுத்திய சண்டை இது. அமெரிக்காவில் சிறப்புப் பயிற்சி பெற்று வந்திருந்த வசந்த பெரேரா, பள்ளமடு போன்ற பெரு மரங்கள் அதிகமற்ற, சிறு சிறு பற்றைகளைக் கொண்ட வெளியான நிலப்பகுதியில், இப்படி நகர்ந்து முன்னேறலாம் என்று தன் மூளையில் உதித்த திட்டத்தின்படி படைகளை நகர்த்திவர, அவரின் மூக்கை உடைத்தவர்களில் மைதிலியும் ஒருவர்.

எதிரியணி முன்னேறப் போகின்றது என எதிர்பார்த்து, அதற்கான 'தயார்ப்படுத்தலில் முழுமையாக ஈடுபட்டு, மேஜர் கஜேந்தி, கப்டன் மனோ போன்ற ஆற்றலும் துணிவும் தன்னம்பிக்கையும் கொண்ட பொறுப்பாளர்களின் உதவியோடு எதிரியை எதிர்கொண்டு, பலத்த உயிரிழப்பையும் காயத்தையும் ஏற்படுத்தி, ரணகோச நடவடிக்கைக்கே முற்றுப்புள்ளி வைத்ததில் கணிசமான பங்கு மைதிலியுடையதே.

சிறுவயதிலிருந்தே தன்னில் மிக பாசம் வைத்திருந்த தம்பி, இளம் வயதில் திடீரென இறந்ததும், பக்கவாத நோயால் படுக்கையிலிருந்த தாயைப் பராமரித்த தந்தை திடீரென இறந்ததும், அதைத் தொடர்ந்து தாயைப் பராமரிப்பதற்காகவும் வீட்டை நிர்வகிப்பதற்காகவும் பள்ளிப்படிப்பை சின்னத் தங்கை இடைநிறுத்தியதும் மைதிலியைப் பலமாகத் தாக்கியிருந்தன.

வன்னியிலே தங்கியிருந்த குடும்பம் ஊர் திரும்ப விரும்பியபோது தனக்கு விருப்பமில்லை என்றாலும் மைதிலி தடுக்க வில்லை. தாம் விரும்பிய இடத்தில் அவர்கள் நிம்மதியாக இருக்கட்டும் என்று விடைகொடுத்தார். அவர்களின் நினைவைச் சுமந்தவாறு களங்களில் நின்றார்.

இந்த ஆனையிறவை நாங்கள் பிடிக்க வேணும். கனபேரை ஆனையிறவில தான் குடுத்திருக்கிறம். நெடுக இப்பிடிக் குடுத்துக் கொண்டிருக்கேலாது. கெதியா அடிச்சுப் பிடிக்கவேணும். என்று எங்கள் முன்னணிக் காவலரண் ஒன்றில் நின்று பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக் கட்டிடத்தைப் பார்த்து 1998இல் கூறிய கனவு போலவே, 1999இல் ஓயாத அலைகள் -3 ஆக விரிந்த ஆனையிறவுக் களமுனையில், மைதிலியை நாங்கள் இழந்தோம்.

ஆள்விழுங்கிப் பூதமாய் பரந்து கிடந்த ஆனையிறவில் போய் முடிந்த மேஜர் மாதுரியின் உடலை மீட்டுவரவெனச் சென்ற மைதிலி, இனி எக்காலத்திலுமே நாம் மீட்கப் போக முடியாத தூரத்துக்குப் பயணம் போனார்.

ஆனையிறவு இராணுவ வலயம்!

எத்தனை முறை இதனுள் மைதிலியின் காற்தடங்கள் பதிந்திருக்கும்! 1991இல் ஆகாய கடல்வெளிச் சமரில் எமக்கு அதிகமான இழப்பு ஏற்பட்டபோது உருவான ஆனையிறவை அழித்தொழிக்கும் கனவு, தொடர்ந்து கிளாலிக் கடனீரேரியில் சிறீலங்காக் கடற்படையால் எமது மக்கள் வெட்டப்பட்டு பிணங்களாய் மிதந்தவேளைகளில் உயிர் மூச்சானது. 1998.02.1 இல் கிளிநொச்சி- பரந்தனில் நாம் ஊடுருவிச் சண்டை செய்தபோது ஆனையிறவில் தமக்குரிய இலக்குகளைத் தேடிப்போய் வெடித்த கரும்புலிகள் மேஜர் ஆசா, மேஜர் மங்கை, கப்டன் இந்து, கப்டன் உமையாள், கப்டன் செங்கதிர், கப்டன் நளா ஆகியோரின் பிரிவுடன் வெறியாகியது. அதே ஆண்டிலேயே கரும்புலி மேஜர் நிலவனும் ஆனையிறவினுள் வீரச்சாவைத் தழுவிக் கொள்ள மைதிலியின் கோபம் கட்டுக்கடங்காமல் போனது. இனிமேலும் ஆனையிறவில் பகைத்தளம் இருப்பதை அனுமதிக்க முடியாது என்ற மைதிலி ஆவேசப்பட்டது அப்போதுதான்

எல்லோரது கனவுகளையும் சுமந்து களம் புகுந்த மைதிலி, எங்கள் ஊர் புகுந்த பகைவரைக் கொன்றார்.

ஈழத்து மக்களின் இதயத்தை வென்றார்.

**மலைமகள்**

www.tamilarangam.net



# மாவீரர் நாள் நிகழ்வுகள்

## இத்தாலி

கடந்த 26.11.2000 ஞாயிறுமாலை 3 மணிக்கு இத்தாலியில் பொலோனியா என்னும் இடத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்பான முறையில் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பொலோனியா மாலதி கலைப்பள்ளி தமிழ் மாணவிகளுடன், இத்தாலிய மாணவிகளும் விடுதலை நடனத்தைத் தந்திருந்தது மிகவும் சிறப்பாக இருந்தது.







## ரஸ்சியா




உயர் கல்வி கற்கவெனத் தமிழீழத்தின் பல பாகங்களில் இருந்து ரஸ்சியாவிற்கு வந்திருந்த தமிழ் மாணவர்களால் மாவீரர் நாள் 27.11.2000 அன்று உணர்வுபூர்வமாக அநுட்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பல ருஸ்சிய நாட்டவர்களும் கலந்து கொண்டனர்.

## பிரான்ஸ்









3.12.2000 அன்று பிரான்சில் பாரிஸ் புறநகர்ப் பகுதியான Rungis நகரில் எழுச்சிகரமாகவும் உணர்வு பூர்வமாகவும் மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்புற நடந்தேறின. சிறப்புரைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர், தமிழின உணர்வாளரான தமிழகக் கவிஞர் அறிவுமதி ஆகியோர் வழங்கினர். கலைமாமணி கலைவாணன் அவர்களின் இசை நிகழ்ச்சியோடு கலைபண்பாட்டுக் கழக பிரான்ஸ் கிளையினரின் சிறப்பு நிகழ்ச்சிகளும் மாவீரர் நாள் நிகழ்வை அணிசெய்தன. சுமார் 4000ற்கும் அதிகமான பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

# எந்தன் பேரக்குழந்தைகளே...!

செத்துவிட வேண்டும் நான் சீக்கிரமாய்– ஆமாம்
செத்தேவிட வேண்டும் சீக்கிரமாய்
ஊரெல்லாம் மக்கள் உரக்கக் கதைக்கின்றனர்–
இன்னும்
ஒருசில நாள்களிலே தமிழீழம் மலருமென்று
சோராத தலைவனவன் படையணிகள்
வீரமதைச்
சுற்றியுள்ள தேசமெலாம் வியப்போடு
பார்க்குதின்று
நேராக ஆனையிறவு வழியூடாக
நிமிர்ந்து யாழ் செல்ல மக்கள் விழைகின்றார்
இங்கு நின்று
ஆனால் நானோ– யாருடனும்
சேராது ஒதுங்கிநின்று தமிழீழம் மலருமுன்பு
செத்துவிட வேண்டுமெனத் துடிக்கின்றேன்
இன்று
ஏனிந்தத் தவிப்பு எனக்கு?
யாரிந்தத் தவிப்புக்குப் பொறுப்பு?
மாவீரர் பட்டியல் நீண்டுகொண்டே போவதற்கு
மானஉணர் வற்றஎங்கள் தலைமுறையே
காரணம்
இனியேது பயன் இவையெல்லாம் கூறி
இயலாத வயதினிலே இதயம் கொதிக்கிறது
தமிழீழத்திலே இந்தத்தலைமுறைக்குப்
பங்குண்டா?
எந்த முகத்தோடு நாம் இருந்து வாழ்வது?
எனவே– தமிழீழம் மலருமுன்பு
செத்துவிட வேண்டும்நான் சீக்கிரமாய்– ஆமாம்
செத்தே விடவேண்டும் சீக்கிரமாய்
இன்றைய தலைமுறையின் இளைஞர் யுவதிகளே
எண்ணற்ற புண்ணியம் செய்துள்ள
எந்தன் பேரக்குழந்தைகளே– வீரத் தமிழர்களே
பாக்கிய சாலிகள் நீங்கள்– அதனால்
பங்காளிகள் ஆனீர்கள்
இதுவரை பங்கேற்க இயலாமல் இருப்பவர்கள்
இன்றே இணைந்து இதயத்தை நிறையுங்கள்
அன்றேல்
எங்கள் தலைமுறை செய்த தவறுகளால்
இன்று நாம் படும் வேதனை– உங்களையும்
தொற்றிக் கொள்ளும்
இறுதி யுத்தத்தில் உறுதியுடன் பங்குபற்றி
இணையற்ற வெற்றிகளை ஈழத்திற் குவித்திடுங்கள்

-மனோன்மணி நடராசா-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | ITALY<br>TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமது விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல, இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள், சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள், (தியாகிகள்) காலம் காலமாக எமது இதயக் கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

# மாவீரர்நாள்

60P

## நவம்பர் 27



*லெப்ரினன்ட் சங்கரில் தொடங்கி... எத்தனை எத்தனையாயிரம் வித்துக்கள் வீழ்ந்தன. நெஞ்சுகனக்கும் நினைவுகளின் பக்கங்கள் இரத்தத்தாலும் கண்ணீராலும் ஒரு நெடியவரலாற்றை எழுதியபடி....*

*தம்மை வருத்தி வருத்தி.. எம் தாய்த் தேசத்தின் விலங்குடைக்க அல்லும் பகலும் உழைத்த அந்த அரியமனிதர்களின் நினைவுகள் உயிர்ப்பு மிக்கவை. தாய்நிலம் மீட்கும் தவிப்புடன் மண்ணில் புதைந்த அந்த இளைய மனிதர்கள்.. தம் சுயம் துறந்து, தேசிய ஆன்மாவின் இயக்கமாகினர்.*

*நெஞ்சு துடிக்க... விழிகலங்க.. கல்லறைப்பூக்களை தொழுதேற்றும் பொழுதுகளில், புதிய புலர்வின் வழிதேடிக் கிளம்பும் தேசிய ஆன்மாவின் எழுச்சிப் பிரவாகம்.*

*தமிழர்களே..! இது எங்களின் தேசிய எழுச்சிநாள். ஒன்றாகி நின்று விடுதலைக்காய் சபதம் எடுப்பது இங்கேதான். வந்து கலவுங்கள். இன்னமும் விலங்கறுபடாத ஓர் இனத்தின் தாகம் எப்போதும் விடுதலை!*



நவம்பர் 26

### அண்ணனுக்கு இன்று பிறந்த நாள்!

**சூரிய தேவே; மகுடம்**
**சூடிய திருவே; மண்ணில்**
**விரியங் கொண்டே– எம்முள்**
**விளங்கிடும் தலைவா; உன் போல்**
**பாரினில் சிறந்த வீரப்**
**படைஞரு முண்டோ; நின்னை**
**நேரெதிர் முட்டி வெல்வரோ ?**
**நினைத்ததை முடிப்போன் நீயன்றோ ?**

**ஆயிரம் தெய்வம் இருந்தும்**
**என்னடா முடியும் ? எங்கள்**
**நாயகன் நினைத்தால் தேசம்**
**நாலு நாள் பொழுதில் விடியும்**
**பேயெனச் சூழ்ந்த இருளைப்**
**போக்கிடும் வெய்யோன்; எம்மைத்**
**தாயெனத் தழுவும் தானைத்**
**தலைவா; நீயன்றோ தெய்வம் !**

**நூற்றாண்டு காலம் இங்கே**
**நீயிருந் தாள்வாய்; இந்த**
**நூற்றாண்டின் தலைவ னென்ற**
**பேர்கொண்டு வாழ்வாய்! இன்னும்**
**வெற்றிமேல் வெற்றி பெற்றே**
**விடிவினைக் காண்பாய்; ஈழமண்**
**முற்றிலும் உந்தன் ஆட்சி**
**மிளிர்ந்திடும்; தலைவா வாழ்க !**

**வேலணையூர் சுரேஸ்**

# களத்தில்

(16.11.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (221)

## யுத்த முன்னெடுப்புக்களில் மூழ்கிப்போகும் சந்திரிகாஅரசு! சமாதானக் கதவுகள் இறுக்கி மூடப்படுகின்றனவா..?

**நாகரீக உலகம் வெட்கித்தலைகுனியும் விதமாய், பண்டாரவளையில் இனப்படுகொலையை அரங்கேற்றி, தனது இரண்டாம் கட்ட ஆட்சியை தொடக்கி வைத்த சந்திரிகா அரசு, இனஅழிப்புப் போர் ஒன்றிற்கான ஆயத்தங்களில் தற்போது முழுமூச்சாய் இறங்கியிருக்கின்றது.**

இராணுவத்திற்கான ஆட்சேர்ப்புக்கள் ஒருபுறம் நடைபெற்றுவர, பெரும் தொகைப் படையினரை குடாநாட்டுக்கு நகர்த்தும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

சிங்களத்தின் அரசியல் தலைவர்களில் இருந்து, இராணுவத்தளபதிகள் வரை யுத்தம் தீவிரமாய் மேற்கொள்ளப்படும் என, தெரிவித்துவருகின்றனர். சிறீலங்காவின் விமானப்படைத் தளபதியும் கடற்படைத் தளபதியும் இந்தியா பாகிஸ்தான் நாடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர்.

நோர்வேயின் சமாதான முயற்சி என்ன ஆனது என்ற கேள்வியே சமாதான ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

சந்திரிகா அரசின் பேச்சுவார்த்தை நாடகம் உலகை ஏமாற்றும் நடவடிக்கையே என்பதை, அவர்களே நிரூபிக்கும் போக்குகளே காணப்படுகின்றன.

போர் மேகங்கள் குடாநாட்டைச் சூழ்ந்துவருவதாகவே உணரப்படும் நிலையில், சமாதானப் புறாக்கள் பறப்பதற்கு சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை.

சந்திரிகா அரசு, போரை தொடர்ந்து நடத்தப்போவதாக சூளுரைத்திருக்க, சிங்களப் பேரினவாதிகளோ நோர்வேயின் சமாதான முயற்சிகளை கடுமையாக எதிர்த்துவருகின்றனர்.

வன்னி சென்ற நோர்வே பிரதிநிதிகளிடம், சமாதானத் தீர்வுகுறித்து, விடுதலைப் புலிகளுக்குண்டான அக்கறையை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் சிங்களமோ போர்மீதான தமது அக்கறையை வெளிப்படுத்திவருகின்றன. செயலுக்கே முக்கியம் கொடுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், ஆண்டுக்கொருமுறை மாவீரர் நாளின் போது ஆற்றும் பேருரையே, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் திசையைத் திண்மத்தைப் பிரதிபலிக்கும், ஆவணமாகக் கொள்ளப்படுகின்றது. தமிழ்மக்கள் மாத்திரமன்றி, இந்த உலகே எதிர்பார்த்திருக்கும் தலைவரின் மாவீரர்நாள் பேருரை, சிங்களத்திற்கு நல்ல பதிலைத் தரும் என எதிர்பார்க்கலாம். ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எப்போதும் வேதாளம் முருங்கை மரத்தில்.

சிறீலங்கா அரசின் யுத்த முஸ்தீபுகள் தீவிரம் பெற்றுள்ளன. ஒக்டோபர் 25ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் மூன்று வாரகால ஆட்சேர்ப்பு நடவடிக்கை, ஐந்து வாரங்களுக்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. பத்தாயிரம் இராணுவத்தினரை, அவசரமாகத் திரட்டும் இவ்ஆட்சேர்ப்பு நடவடிக்கை சிங்களப் பகுதிகளில் பரந்துபட்ட முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கென, ஐநூறு ஆட்சேர்ப்பு மையங்கள் திறக்கப்பட்டிருப்பது போதாதென்று, பிரதேச செயலகங்களுக்கூடாகவும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை தீவிரம் பெற்றிருக்க, மட்டக்களப்புப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினரை வாபஸ் பெற்று குடாநாட்டில் குவிக்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவை, குடாநாட்டில் பாரிய இராணுவ நடவ்டிக்கை ஒன்றை சிங்கள அரசு ஆரம்பிக்க உள்ளதோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது. சிங்களத்து அரசியல் இராணுவத் தலைவர்களின் பேச்சுக்களும் அதனையே வலியுறுத்திவருகின்றன.

நோர்வே சமாதானத் தூதுக்குழுவினரின் வன்னி விஜயத்திற்குப் பின்னால், சமாதான முயற்சி ஒன்றின் சாத்தியப்பாடுகள் குறித்து, சமாதான ஆர்வலர்கள் நம்பிக்கை கொண்டிருக்கையில், சிறீலங்கா அரசோ நிலைமையை வேறுவிதமாகக் கையாள முனைந்துவருவது தெரிகின்றது. கடந்த ஒன்பதாம் திகதி, பாராளுமன்றத்தின் புதிய அமர்வை தொடக்கி வைத்துப் பேசிய சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவோ, தேர்தலுக்கு முந்தைய தனது நிலைப்பாட்டை மீள வலியுறுத்தியதுடன், போர் தொடரும் என அறிவித்துள்ளார்.

மீண்டும் அதே பல்லவி பாடப்படுகின்றது. முன்னைய அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை மீள பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாகவும், வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்போவதாகவும் சிறீலங்கா அரசு அறிவித்திருக்கின்றது.

பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக தமிழர் தாயகத்தில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற, தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்தை, சிங்களத் தலைவியோ நிராகரித்துள்ளார். பொருளாதாரத்தடையை நீக்கும் விடயத்தை, நிராகரித்துவிட்டு அது புனர்வாழ்வு அமைச்சரின் பணி எனத் தெரிவிக்கும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, யுத்தம் தொடரும் என அறிவித்திருக்கின்றார்.

நோர்வேயின் சமாதான முயற்சி குறித்து, ரட்னசிறீ விக்கிரமநாயக்கா தேர்தலுக்கு முன்னர் தெரிவித்த கருத்துக்கள், தேர்தல் காலத்தில் தவிர்க்கமுடியாமல் தெரிவிக்கப்படும் கருத்துக்களே எனத் தெரிவித்து, நோர்வே அரசை சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் சமாதானப்படுத்தியிருந்தார். அதனைத் தொடர்தே, நோர்வேப் பிரதிநிதிகளின் வன்னி விஜயமும், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடனான சந்திப்பும் இடம்பெற்றது.

வன்னி சென்று திரும்பிய நோர்வே தூதுக் குழுவினர், விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் உண்மையான ஆர்வத்துடன் இருக்கின்றனர் எனத் தெரிவித்தனர். பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை எனவும் அறிவித்திருந்தனர். இதனை, சிங்களப் பேரினவாதிகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இடதுசாரிகள் என்று சொல்லிக் கொள்ளும் ஜே.வி.பி. இயக்கமோ, நோர்வே அரசு, இந்தப்பிரச்சினையில் தலையிடாமல் வெளியேறவேண்டும் எனக்கூறி எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. நோர்வே அரசு, விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக நடந்துகொள்வதாக அது குற்றஞ்சாட்டுகின்றது. சிகல உறுமய போன்ற சிங்களப் பேரினவாத அமைப்புக்களும், பௌத்த மகா சங்கத்தினரும் நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்ப்பதில் மீண்டும் களமிறங்கியிருக்கின்றன.

உண்மையில், சந்திரிகா அரசு, பொய்யான சமாதான நாடகத்தை ஆடி, உலகை ஏமாற்றவே முனைகின்றது என்பது நன்கு தெளிவாகியுள்ளது.

தேர்தல் காலத்து பிரச்சாரப் போட்டா போட்டிகளில், ரட்னசிறீ விக்கிரமநாயக்கா, சமாதான முயற்சிகளை நிராகரித்ததுடன், போரை வலியுறுத்திப் பேசியிருந்தார் என்ற கதிர்காமரின் சமாளிப்பை, சிறீலங்காப் பிரதமர் ரட்னசிறீ விக்கிரமநாயக்கா நிராகரிக்கின்றார். 'அன்றும் சொன்னேன் இன்றும் சொல்லுகின்றேன், விடுதலைப் புலிகளுக்கெதிரான போர் மேலும் தீவிரப்படுத்தப்படும்' என்கின்றார் ரட்னசிறீ விக்கிரமநாயக்கா. விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் அவர். விடுதலைப் புலிகளை இராணுவரீதியாக ஒழித்துக்கட்டும் அரசின் திட்டத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று கூறுகின்றார் அவர்.

சிறீலங்கா இராணுவத்தளபதி, லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவோ, தன் பங்கிற்கு யுத்த முழக்கத்தைச் செய்து வருகின்றார். விடுதலைப் புலிகளும் அரசும் பேசுவதாக இருந்தாலும், யுத்தம் தொடரும் என அறிவிக்கின்றார். பேச்சுவார்த்தை நடத்தி, இரு தரப்பும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தபின்னர் தான் போர்நிறுத்தம் பற்றிப் பேசமுடியும் என அவர் தெரிவித்திருக்கின்றார்.

இதனை எல்லாம்விட இன்னும் ஒரு படி மேலே சென்று, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரவிரும்பினால், ஆயுதங்களைக் கீழே போடச் சம்மதிக்கவேண்டும் எனவும், சில பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகள் விலகிக்கொள்ளவேண்டும் எனவும் அறிவிக்கின்றார்.

சமாதானப் பேச்சுவார்த்தையில், மனச்சுத்தமான ஈடுபாட்டை சந்திரிகா அரசு கொண்டிருந்தால், அதற்கான நகர்வுகளை சந்திரிகா அரசே மேற்கொள்ளவேண்டும் என தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், நோர்வேப் பிரதிநிதிகளிடம் விளக்கியிருந்தார்.

ஆனால், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவில் இருந்து, ரட்னசிறீ விக்கிரமநாயக்கா, லயனல் பலகல்ல வரைப்பட்ட அனைவரும் யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்திச் செல்வதில் ஆர்வமாக இருக்கின்றனர் என்பது வெளிப்படுகின்றது. சமாதான முயற்சிகளுக்கான எந்தச் சந்தர்ப்பத்தையும் வழங்குவதில்லை என, சிங்களம் தீர்மானித்திருக்கின்றது.

சமாதான முயற்சிக்கு எதிரான சமிக்ஞைகள்தான் சந்திரிகா முகாமில் இருந்து வெளிப்படுகின்றன. பாரிய இனஅழிப்புப் போர் ஒன்றுக்கான ஆயத்தங்களில் அது ஈடுபட்டிருக்கும் அறிகுறிகளே தென்படுகின்றன.

சந்திரிகா அரசு, உலகை மீண்டும் ஏமாற்றப்போகின்றது.

ஆனால், விடுதலைப் புலிகளையோ தமிழ் மக்களையோ அதனால் ஏமாற்றமுடியாது. ஒரு நீண்ட வரலாற்றுப் படிப்பினைகளை பெற்றுள்ள தமிழர் தரப்பு எப்போதும் விழிப்பாகவே இருக்கின்றது. ■

## உங்களில் எங்களுக்கு நம்பிக்கை போய்விட்டது

**மட்டக்களப்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள அவசர விண்ணப்ப மடலிலிருந்து.**

சமீப வாரங்களில் நாட்டின் வடக்கிலும், மத்திய மலைநாட்டிலும் அடுத்தடுத்து தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயல்கள் தங்கள் அரசபடையின் தூண்டுதலுடனும் உடந்தையுடனும் நடைபெற்று வருவது குறித்து மிகுந்த மனக்கவலையும் அதிர்ச்சியும் அடைந்திருக்கின்றோம். இந்த அநியாயங்களை தாங்கள் அறிந்து வைத்திருக்கின்றீர்கள் என்பதைச் சமீபகால அறிக்கைகள் தெளிவுபடுத்தியுள்ளன.

சர்வதேசப் பிரபல்யம் வாய்ந்த தமிழ் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வானது அப்பாவித் தமிழ் மகன் ஒவ்வொருவரதும் உயிருக்கு உங்கள் அரசின் கீழ் உத்தரவாதம் ஏதும் கிடையாது என்பது வெட்டவெளிச்சமாகிறது.

யாழ்ப்பாண நகரின் மத்திய பகுதியில் அதுவும் தங்கள் பாதுகாப்புப் படையினர் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்திருந்த வேளையில் ஊடகவியலாளர் நிமலராஜன் அவரது வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டிருக்கின்றார். கிரனைட் வீச்சில் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இது நடந்து கொண்டிருந்தபோது ஊரடங்கை அமுல்படுத்திய உங்கள் பாதுகாப்புப் படையினர் சம்மந்தப்பட்ட கொலையாளிகளைக் கையும் மெய்யுமாக பிடிக்க முடியாமற் போனதன் மர்மம் என்ன? இம்மர்மக் கொலை விவகாரத்தில் கையாலாகாதவர்களாகத் தங்களை வெளிப்படுத்திக் கொண்ட இராணுவத்தினரை நம்பித் தாங்கள் நினைப்பதுபோல் தமிழ் மக்களின் உயிர் உடமைகளைத் தாங்கள் காப்பாற்ற முடியும் என்று நாம் நம்பிக்கை கொள்ளமுடியாதிருக்கின்றது.

ஊடகவியலாளர் நிமலராஜனின் படுகொலைக்கு அரசசார்பான கூலிக்குழுவினரே பொறுப்பு என இலங்கைக்குள்ளும், வெளிநாடுகளிலும் இயங்கும் பல்வேறு ஸ்தாபனங்களும், பொறுப்பு வாய்ந்த சமூகப்பிரமுகர்களும் பகிரங்கமாக எழுதியும் பேசியும் வருகின்ற நிலையில், இன்னமும் நிமலராஜன் படுகொலை மர்மம் துலக்கப்படாமல் இழுத்தடிப்பதன் காரணம் என்ன?

இம்மகஜர் தங்களை வந்தடைகின்ற வேளை இக்குழுவினரால் மேலும் எத்தனை கொலைகள் விழப்போகின்றனவோ என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

சிறந்த தாயாக விளங்கி நாட்டை ஆளுவதாகக் கூறும் அதி உத்தம ஜனாதிபதி அவர்களே, தங்கள் கோணத்தில் பயங்கரவாதிகள் எனக் கருதும் இளைஞர்களை, புனர்வாழ்வு முகாமில் வைத்து தங்கள் அரசு புனர்வாழ்வுப் பயிற்சிகளைக் கொடுத்து திருத்துவதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அண்மையில் நடந்து முடிந்தது மனித நேயமிக்க எவராலும் ஏன் கடவுளாலுமே பொறுக்க முடியாத அக்கிரமம்.

சிங்களக்காடையர்களும், பிந்துநுவேவக் கிராமவாசிகளும் சேர்ந்து அப்பாவித் தமிழ் இளங்குருத்துக்களை வெட்டியும் குத்தியும் என்னென்னவோ சங்காரம் செய்தும் அகோரமாகக் கொலை செய்திருக்கின்றார்கள்.

மழைவிட்டும் தூவானம் ஓயாததுபோல மேற்படி காட்டுமிராண்டிக் கொலைகளைக் கண்டித்தும் எதிர்த்தும் மத்திய மலைநாட்டில் மக்கள் பொங்கி

www.tamilarangam.net



# கல்லறைத் தவசிகளுக்காய் எம் காணிக்கை மலர்கள்...

கார்கால வானில் மழை முகில்கள் கவிந்திருக்கின்றன, இல்லை காத்திருக்கின்றன. தமக்கிடையே முட்டி மோதித் திரண்டு ஏதோ நிகழ்வுக்கென வெண்நீர்த் துளி மலர்களை அள்ளி நிறைத்தபடி காத்திருக்கின்றன.

இந்தக் காலம் பூமியின் உயிர்ப்பின் காலம்.... தமிழீழம் என்ற ஓர் சிறிய நிலப் பரப்பில், புவியோட்டின் எல்லைப்பரப்பின் மாந்தர்கள் அனைவரையும், தம்மை நோக்கிக் கவர்ந்திழுத்துள்ள தர்மத்தின் காவலர்கள். அவர்கள் உயிர்ப்பின் ஆதார சக்தியாக விளங்கும் உறவுகள், மக்கள் அவர்களை வணங்கக் காத்திருக்கின்றனர் கார்மேகம் போல....

அங்கு திரண்டுள்ள மானுடம் கல்லறைக் கோவில்கள் முன்னான காத்திருப்பு, அவர்கள் முகம், கண்கள் நீர்ப்பூக்களை நிறைத்திருக்க, கரங்கள் மெல்லிதழ் மலர்களை ஏந்தி நிற்கின்றன.

அவர்கள் முன்னுள்ள அந்தக் கல்லறைகள், சொல்லும் சேதி என்ன? உடல் துறந்து, விழிமூடிய இளம் உயிர்களின் ஆத்ம தாகத்தின் அடையாளம் இந்தக் கல்லறைகள். அவர்கள் வெறும் மனிதர்கள் அல்ல. மனிதனின் அக இயற்கையின் அனைத்து மாயைகளையும் வென்று, தமிழீழ மக்களின் விடுதலை என்ற தார்மீக மந்திரத்தை சதாகாலமும் உச்சரித்து, தமக்கே உரிய கடமைகளை மிகச் சிறப்புடன் செய்தது மட்டுமன்றி, உடல்-(நோ, உடல் தேடும் பசி, தாகம், உறக்கம்), மனம் - (மயங்கும் சுகம், துக்கம்), ஆசாபாசங்கள் வென்று, இவ்விரண்டும் இணைந்த சிந்தனைத் தடாகத்தை தமிழீழம், சுதந்திரத்தால் நிரப்பி சமர்க்களத்தில் சாவிற்கு சவால் கொடுத்து உடல் துறந்த உத்தமர்கள் நாள் இன்று.

சுயம் வென்றால், பயம் மறையும் சாதாரண மனித வாழ்வில் பலவீனங்களுக்குள் முடங்காது, அதை வென்றதால் அவர்கள் ஞானியர்கள். பிறப்புக்கும், இறப்புக்குமிடைப்பட்ட வாழ்வின் ஆர்வம் இதுதானென்று வாய்ச்சொல்லால் அன்றி, உணர்ச்சி பொங்கும் எழுத்துக்களால் இன்றி, செயல் என்ற ஒன்றால்.... விடைகண்டவர்கள். மேதைகள். தம்மை உணர்ந்து, 'தான்' என்ற முனைப்பு அகற்றி, தமிழீழம் என்ற பரந்த எண்ணப் பாட்டுக்குள் தம்மை விசாலித்து நின்று, கானகம் நடுவே விழி திறந்து, குளிர், வெப்பம், இருள் - பகல் வேறுபாடு மறந்து தவம் செய்தார்கள் இந்த இளம் மலர்கள்.

இலக்கைத் தெளிவாக விளங்கி, இறுதி வரை வெல்லுவதுதான் தன் கடமை என்று கர்மயோகத்தை புதுயுகத்தில் பிரயோகித்துக்காட்டி, புதைகுழியில் விழிமூடிய வீரர்கள்.... இவர்கள் நினைவில் எம் உளம் விழிப்போம். கடமைக்குத் தடையாக எழுகின்ற பலவீன இருள் விலக்கி, அவர்கள் சக்தியால் பலம் பெற்று, தாயகத்தின் பலம் சேர்ப்போம்.

உள்ளத்தில் உறுதி, உடல் வலிமை, கூரிய சிந்தனைத்திறன் இவற்றுடன் அனைத்திலும் மேலான இதயத்தில் மக்கள் நேசம், தலைவன் மீதான நம்பிக்கை இணைந்த அவர்களின் வீரங்கள். இதனால்தான் இவர்கள் மகத்தான ஞானிகள். இவர்கள் பிரிவில் நாம் அழுதுதுவழ அவர்களோ சாவை தமது புதிய வாழ்வாக்கி, மகிழ்கின்றார்கள். அது மிகப் பெரும் புத்துணர்வு சக்தியாக, அடுத்த வீரனைப் பற்றிவளர்கின்றது. அதனால் இங்கு அழிந்தது உடல்கள் மட்டுமே. அதைக் கூட கல்லறைக் கற்கள் காக்கின்றன. என்றும் நித்தியமாய் நிலைத்து நிற்பது இவர்களின் ஆத்ம தாகமே.... அது எம்மைப் பற்றிப்பிடிக்கட்டும், அவர் கல்லறைக்குக் காணிக்கையாக...... கொஞ்சம் அவர்களின் கனவைச் சுமப்போம். பாரம் அதிகமென்றாலும், முள், கல் குத்தி உங்கள் பாதம் வலிக்காமல் அவர்கள் பாதையையும் செப்பனிட்டு எமக்குத் தந்துள்ளார்கள். நாம் பாரம் சுமப்போம். பாதங்கள் மட்டும் சிறிது வலிமைபெற்று பாரம் தாங்கி நடக்கட்டும். அலைகளின் வேகத்திற்கீடாய் வேகம் கூட்டி, வேகம் கூட்டி நடந்து, நடந்து எம் விடுதலைச் சூரிய தரிசனம் பெறுவோம். அதுவரை கல்லறைத் தவசிகள் தவம் கலையாது எம் காணிக்கையை அக அமைதியுடன் செலுத்தி நிமிர்வோம்.

**-க. சேரலாதன்**



## போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்

*எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்வுக்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈய்ந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.*

*உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சியதாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகவும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்படவேண்டியவையாகும்.*

*இம்மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்துசக்தியாக, என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது, ஒரு நிகழ்வாக இருந்துவிடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.*

*இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும், உணர்வு பூர்வமாகவும் நிலை நாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.*

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

நன்றி!

பொறுப்பாளர்,
தமிழீழ மாவீரர் பணிமனை
அரசியல்துறை,
தமிழீழம்.

எழுந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும் அஞ்சலிப் பொதுக்கூட்டமும் கடையடைப்பும் நடத்தியபோது மக்கள் பேரணிகள் மீது காடையர்களைத் தூண்டிவிட்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் மீண்டும் தங்கள் அரச ஆதரவோடு மற்றொரு பயங்கரம் நடந்தேறி இருக்கிறது.

இத்துர்ப்பாக்கிய சம்வத்தில் நான்கு தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் உயிர் பறிக்கப்பட்டிருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளார்கள். தமிழர்களின் சொத்துக்கள், உடமைகள், வர்த்தக நிலையங்கள் சிங்களக் காடையர்களால் அடித்து நொருக்கப்பட்டுப் பலகோடி இழப்புக்களை மலையகத் தமிழ்ச்சமுதாயம் சந்திக்க நேரிட்டிருக்கின்றது.

அம்மணி, இலங்கைத்தீவில் 1956ஆம் ஆண்டு முதல் கோயில்த் திருவிழாபோல அடிக்கடி தமிழர்கள் மீது அராஜகங்கள் நடந்தேறுவதும், அவற்றிற்கெல்லாம் உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு நீதி விசாரணையும், விசாரணைக் குழுக்களுக்கு கோரிக்கைகள் விடுக்கப்படுவதும் ஒரு பழக்கதோசமாகி வரலாறு ஆகிப்போய்விட்டது.

இலங்கைத்தீவின் இந்தக் கறைபடிந்த வரலாற்றுப் போக்கை ஏற்படுத்தி வைத்திருப்பதில் தங்கள் காலஞ்சென்ற அன்புத் தந்தை அமரர் பண்டாரநாயக்கா முதல் இன்றைய ஜனாதிபதியாகிய நீங்கள் வரை சிங்கள ஆட்சியாளர்கள் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும்.

சமாதானப்புறாவாக அரசியலில் பிரவேசித்து இலங்கைத்தீவில் வாழும் ஏனைய இன மக்களினதும் பேராதரவுடனும் பெரும் எதிர்பார்ப்புடனும் ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதியும், பௌத்த கலாச்சார மரபு வழியில் ஊறிப்போன பிள்ளைப்பாசம் மிக்க சிறந்த தாயுமாகிய தாங்கள் இந்த நாட்டின் பாரம்பரிய பிரஜைகளான ஈழத்தமிழ் மக்களினதும் கடைசி நம்பிக்கையையும் கைநழுவவிட்டிருக்கிறீர்கள். ■

# இளங்குருத்துக்கள் தறிக்கப்பட்டதற்கு நீதி கேட்கும் திருமலை மக்கள்

திருமலை வாழ் தமிழீழ மக்கள் பண்டாரவளை -பிந்துநுவேவ தடைமுகாமில் இளைய தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து தமது கடுங்கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் தமது கையொப்பங்களை இட்டு மகஜர் ஒன்றை ஐ.நா பொதுச்செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

திருமலைத் தமிழ் மக்களின் சார்பில் திருமலை புனித மரியாள் கல்லூரி அதிபர் அருட்சகோதரி திரேசராணி தலைமையிலான குழுவினர் மக்களின் கோரிக்கையை திருகோணமலையில் உள்ள ஐ.நா அகதிகள் தூதுவராலயத்தில் வைத்து திருமலை மாவட்டத்திற்கான வதிவிடப்பிரதிநிதியிடமும், யுனிசெவ் பிரதிநிதியிடமும் கையளித்தனர்.

மக்கள் அனுப்பி வைத்துள்ள மகஜரின் சாரம் வருமாறு, தடைமுகாமில் வைத்து 31 தமிழ் தடுப்புக்காவல் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து நடத்தப்படும் விசாரணையில் ஐ.நா அமைப்பு, சர்வதேச மன்னிப்புச் சபை. பொதுநலவாய அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். அவ்வாறு நடத்தப்படும் விசாரணை குற்றம் இழைத்தவர்களைக் கண்டுபிடித்து தண்டனை வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். ஆகிய கோரிக்கைகளோடு இது வரைகாலமும் சிறைச்சாலைகளில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களினது விபரங்களும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ●

www.tamilarangam.net



# படுகொலையைப் பொறுப்பேற்கும் டக்கிளஸ்

# டக்கிளசைப் பாராட்டும் சந்திரிகா

யாழ். செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து உள்நாட்டிலும் உலக நாடுகளிலும் கண்டனங்கள் கடுமையாக எழுப்பப்பட்டிருப்பினும் சிறீலங்கா அரசோ தான் சற்றும் அசைந்து கொடுக்கத் தயாராகவில்லை என்பது போல் இருந்துவருகின்றது. சிங்களத்தின் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் இதுவிடயத்தை தோண்டித்துருவி விசாரணைகள் நடத்தித்தான் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் இன்றி, ஈ.பி.டி.பி.யினரே கொலைகாரர்கள் என்று அனைத்துத் தரப்பும் வலியுறுத்தி வருக்கின்றபோதும் சிங்களத்து சட்டத்தைப் பேணும் பரிவாரங்கள் அவற்றை அசட்டை செய்யாது மௌனம் காத்துவருகின்றன.

சந்திரிகா அரசின் திட்டத்துடன், ஈ.பி.டி.பி.யால் நடத்தப்பட்ட படுகொலை இது என்பதால் யார் யாரைக் கைதுசெய்வது? எதை விசாரிப்பது? என்ற யதார்த்தம் இங்கே உதைக்கக்கூடும்.

இதில் ஒரு விந்தை என்னவென்றால், இந்தப்படுகொலையைச் செய்து முடித்த ஈ.பி.டி.பி.யினரோ, இப்படுகொலைக்கு கண்டனம் தெரிவித்தது தான். சிறீலங்காவில் சாதாரணமாக நடந்துவரும் நடைமுறைதான் இது. சனநாயகவாதிகள் என்ற போர்வையில் இருக்கும் பயங்கரவாதிகள், படுகொலைகளை நடத்திவிட்டு அவற்றிற்கு கண்டனம் தெரிவிப்பதை ஒரு வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த உலகத்தை ஏய்த்துவிட இந்த நடைமுறை தேவைப் படுகின்றது போலும்.

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் இனவாதச் செயற்பாடுகளை தொடர்ச்சியாகப் பகிரங்கப்படுத்தி, சிங்கள அரசிற்கு தலைவலியாக இருந்த மாமனிதர் குமார் பொன்னம்பலத்தைப் படுகொலைசெய்துவிட்டு சந்திரிகா அரசு கண்டனம் தெரிவித்திருந்தது. அது போன்று, பண்டாரவளைப் படுகொலையைத் திட்டமிட்டு நடத்திவிட்டு அதற்கும் சந்திரிகா அரசு கண்டனம் தெரிவித்திருந்தது.



டக்கிளஸ் தேவானந்தா

இந்த எஜமானப் பாணியை, ஈ.பி.டி.பி.யும் கைக்கொண்டுவருகின்றது. அன்று, தினமுரசு ஆசிரியர் அற்புதனை கொழும்பில் படுகொலை செய்த ஈ.பி.டி.பி, சந்திரிகாகூட்டு அதற்குக் கண்டனம் தெரிவிக்கத் தவறவில்லை. அதேபோன்று நிமலராஜன் படுகொலைக்கும் ஈ.பி.டி.பி. கண்டனம் தெரிவித்தது. அக்கண்டனத்தை காவிவருவதில், அரசாங்க ஊடகங்கள் முன்னிலை வகித்தன.

கொலையாளியே கண்ணீர் விடுவது, நிமலராஜன் விடயத்தில் எடுபடவில்லை. ஈ.பி.டி.பி. மீதான கண்டனக்கணைகளின் வலிமை தீவிரமடைந்திருக்கின்றது. மனிதநேய அமைப்புக்களாக இருந்தால் என்ன, மக்கள் அமைப்புக்களாக இருந்தாலென்ன, சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புக்களாக இருந்தாலென்ன சந்தேகமின்றி, அவை ஈ.பி.டி.பி.யை குற்றஞ்சாட்டுகின்றன.

கண்டனங்கள் குற்றச்சாட்டுக்கள் சற்று, கடுமையடைந்து வரவே, அரசாங்கப் பத்திரிகைகள் ஊடகங்கள் ஈ.பி.டி.பி.க்கு வக்காலத்து வாங்கத் தலைப்பட்டுள்ளன. அரசாங்க ஊடகங்கள், ஈ.பி.டி.பி.யைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. தினகரன் என்ற சிங்கள அரசாங்கத்தின் தமிழ்பத்திரிகை, ஈ.பி.டி.பி. மீது கொலைக்கான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பதன் உள்நோக்கம் கேள்விக்குரியது என வாதிட முற்படுகின்றது. படையினரின் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த நேரம், படையினரின் பிரசன்னம் மிகுந்திருந்த பகுதியில் சம்பவம் இடம்பெற்றதை மட்டுமே வைத்துக்கொண்டு, ஈ.பி.டி.பி.யை எப்படிக் குற்றம் சாட்டுவது என்று கேள்வி கேட்கிறது தினகரன். கொல்லப்படுவதற்கு முன், நிமலராஜனே பலரிடம் தெரிவித்திருந்தார், தனக்கு ஈ.பி.டி.பி.யால் கொலை மிரட்டல் விடப்பட்டிருக்கின்றது என்று.

இங்கே கொலையாளிகள், யார் என்பது தெளிவாக நிரூபணமாகிவிட்டது. தற்போது அரசாங்கத்தினதும் அரசாங்க ஊடகங்களினதும் செயற்பாடுகள் கொலையாளிகளைக் காப்பாற்றுவது என்ற வகையிலேயே இடம்பெறுகின்றன.

நிமலராஜனின் படுகொலைக்கு அன்று கண்டனம் தெரிவித்த டக்கிளஸ் தேவானந்தாவோ, தற்போது, நிமலராஜனின் படுகொலையை நியாயப்படுத்த முற்பட்டிருக்கின்றார். எல்லாப் பக்கங்களிலும் இருந்து கிளம்பும் கண்டனக் கணைகளால் எரிச்சலுற்றவராகிவிட்ட டக்கிளஸ் தேவானந்தா, பத்திரிகைகள், அரச தொலைக்காட்சிகளில் தோன்றி, படுகொலையை நியாயப்படுத்த முற்படுகின்றார்.

நிமலராஜனின் மறுபக்கத்தை இந்தப் பத்திரிகை உலகம் மறந்துவிட்டது என்று கோபித்துக்கொள்கின்றார் டக்கிளஸ் தேவானந்தா. பத்திரிகையாளர் என்ற போர்வையில், நிமலராஜன் ஒரு புலி ஏஜென்டாகவே செயற்பட்டார் எனவும் யாழ்ப்பாணத்தில் நடந்த பல அரசியல் கொலைகளுக்கும் நிமலராஜனுக்கும் தொடர்புண்டு என்றும், டக்கிளஸ் தேவானந்தா தனது பேட்டிகளில் தெரிவித்துவருகின்றார்.

ஆக, சந்திரிகா அரசுக்கும் ஈ.பி.டி.பி.க்கும் எதிராக நிமலராஜன் செயற்பட்டார் என்பதும், அவரைக் கொல்வது நியாயமான காரியம் எனவும் டக்கிளஸ் தேவானந்தா சொல்ல முற்படுகின்றார். இதன் மூலம் இந்தப் படுகொலையை தாமே செய்திருப்பதாக அவர் தப்பித்தவறி ஒத்துக்கொண்டிருக்கின்றார்.

அதாவது சந்திரிகாவின் வடக்கு புனர்வாழ்வு அமைச்சரும், தமிழர் விவகார அமைச்சருமான டக்கிளஸ் தேவானந்தா பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலையை பொறுப்பேற்றிருக்கின்றார்.

சரி, டக்கிளசின் இந்த வாதத்தை, சுதந்திர ஊடக இயக்கத்தின் தவிசாளரும், ராவய பத்திரிகையின் ஆசிரியருமான விக்டர் ஐவான் கடுமையாக மறுதலிக்கின்றார். அமைச்சராக்கப்பட்டுள்ள டக்கிளஸ் தேவானந்தா, நிமலராஜன் உயிரோடு இருக்கும் போது, நிமலராஜன் மீதான தனது குற்றச்சாட்டுக்களை ஏன் முன்வைக்கவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ளார் அவர்.

ஈ.பி.டி.பி ஆயுதக்குழுவின் தலைவருமான டக்கிளஸ் தேவானந்தாவின் இந்த நடத்தை, ஆபத்தானது என, விக்டர் ஐவான் தெரிவிக்கின்றார். அமைச்சர் பதவியும், ஆயுதக்குழுவும் கொண்ட அதிகாரம் வாய்ந்த இந்த நபர் நிமலராஜன் படுகொலையை நியாயப்படுத்தும் விதமாய் பேசுவது, வடக்கில் செய்தியாளர்களாய் பணியாற்றும் ஏனையோருக்கு பெரும் எச்சரிக்கையாகியுள்ளது எனத் தெரிவிக்கின்றார்.

உலகம் எவ்விதம் கதைத்தாலும் அக்கறையில்லை சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு. சிறீலங்காவின் பதினோராவது பாராளுமன்றத்தின் புதிய அமர்வு நவம்பர் ஒன்பதாம் திகதி ஆரம்பித்தபோது, டக்கிளஸ் தேவானந்தாவை புகழ்ந்து தள்ளினார் சிறீலங்கா சனாதிபதி.

-சுப்பு-

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜன்



## கடுகுச் செய்திகள்

### நம்பிக்கை இல்லை.

சிறீலங்காவில் பிரபலமான குற்றவியல் வழக்கறிஞரும், வழங்கறிஞர் சங்கத்தின் மனித உரிமைக்குழுவின் தலைவருமான டெஸ்மன் பெர்னான்டோ, பண்டாரவளைப் படுகொலை குறித்து காரசாரமாகக் கண்டனம் தெரிவித்திருக்கின்றார். கண்டனம் தெரிவித்ததோடல்லாமல், இப்படுகொலை நடவடிக்கைக்கு நீதியான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப் படுவர் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை எனவும், சிறீலங்காவின் யதார்த்தத்தை வெளிப்படுத்தியிருந்தார். சந்திரிகா அரசின் நீதிவிசாரணை குறித்து சந்தேகம் தெரிவித்துள்ள அவர், சர்வதேச தலையீடொன்று இதுவிடயத்தில் தேவை என வலியுறுத்தியுள்ளார். ●

### கொலையாளிகள் பலரைக் காணவில்லை.

பண்டரவளை பிந்துநுவேவா படுகொலையை அடுத்து, அப்பகுதியைச் சேர்ந்த இருநூறு வரையான காடையர்களை, சாட்டுக்குக் கைதுசெய்த சிறீலங்கா அரசு, அப்பகுதி மக்கள், பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு கலகம் விளைவித்தனர் எனக்கூறி, அன்றிரவே குற்றவாளிகளை விடுதலை செய்திருந்தது. அப்படுகொலையோடு தொடர்புடைய முப்பதுபேர் தலைமறைவாகிவிட்டனர் என, சிறீலங்கா அரசு தற்போது கூறுகின்றது. விசாரணையின் முடிவும், தண்டனையின் விறுத்தமும் வெளியாகிவிட்டது. ●

### சமாதான முயற்சியை வரவேற்கும் மேற்குலகம்

நோர்வே தூதுக்குழுவினர் வன்னி சென்று, தமிழீழத் தேசியத் தலைவரைச் சந்தித்து பேச்சுநடத்திவிட்டு திரும்பியிருப்பதை, மேற்குலக இராஜதந்திரிகள் வரவேற்றுள்ளனர். அமெரிக்க தூதரக அதிகாரிகள் நோர்வேயின் முயற்சியை வரவேற்றிருப்பதுடன், அதற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் தெரிவித்தனர். பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளும் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சியை வரவேற்றுக் கருத்துத் தெரிவித்திருந்தனர். ●

### இராணுவத்திற்கு மேலும் பத்தாயிரம்...?

ஒக்டோபர் மாதம் 25ம் திகதி, சிறீலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை ஆரம்பித்திருக்கின்றது. நவம்பர் 15ம் திகதிவரை நடைபெற இருந்த இந்த மூன்று வாரத் திட்டத்தில், எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. ஆதலால், நவம்பர் முப்பதாம் திகதிவரை ஆட்சேர்ப்புத் தொடரும் என, இராணுவத் தளபதி அறிவித்திருக்கின்றார். விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை எனத் தெரிவிக்கும் லயனல் பலகல்ல, யுத்தத்திற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஆதரவு நல்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றார். சமாதானத்தில் நாட்டமுள்ள பொறுப்பு வாய்ந்த நாட்டு மக்கள் அனைவரும், இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு தூண்டவேண்டும் எனத் தெரிவிக்கின்றார் லயனல் பலகல்ல. சிறீலங்கா சனாதிபதியும் இதே கருத்தையே பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சொந்தச் சோதரர் படுகொலை கண்டு உணர்வுப்பிழம்புகளாய் மலையக மக்கள்

# தொப்புள் கொடி உறவுகளுக்காய் வீதியில் இறங்கினர்

-சபாபதி

இலங்கைத்தீவின் இறைமையை 1948இல் பிரித்தானியர் சிங்களவர் கையில் ஒப்படைத்த காலந்தொட்டு மலையகத் தமிழர்கள் தாங்கொணாத பேரினவாத அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டு வந்துள்ளனர். 1948 நவம்பர் மாதத்து 15ஆம் திகதிய குடியுரிமைச்சட்டம் இவர்கள் மீது முதன் முதலாக சிங்களத்தால் ஏவப்பட்டது. 1960 களில் இடம்பெற்ற சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமும் இவர்களை இருநாடுகளுக்கும் இடையே அல்லாட வைத்தது. இவர்களை சாதாரண மனிதர்களாகக்கூட சிங்களம் கருதவில்லை, கொத்தடிமைகள் போன்று நடத்தி வருவது கண்கூடு. சிறிலங்காவிற்கு பெருந்தொகையான அந்நியச்செலாவணியை ஈட்டித்தரும் இம்மக்களுக்குச் சாதாரண அடிப்படை வசதிகள்கூட சிங்களப் பேரினவாதிகளால் அனுமதிக்கப்படுவதில்லை. இந்நிலையிலேதான் உலகத்தின் மனிதம் என்பது மறைந்துபோய் விட்டதா எனத்தக்க நிகழ்வான பிந்துநுவேவக் கொடூரம் கடந்த 25.10.2000 அன்று சிங்களக் காடையர்களால் நடத்தி முடிக்கப்பட்டது.

இதுவரைகாலமும் சிங்களத்தால் வாழும் உரிமை மறுக்கப்பட்டும், உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படாத நிலையிலும் பொங்கியெழாத மலையகத் தமிழர்கள், கடந்தகாலங்களில் இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளில் தமிழர்கள் மீது இனப்படுகொலை நோக்கிலான வன்முறைகள் சிங்களப் பேரினவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட வேளைகளில் எல்லாம் சிங்களவர்களால் தாக்கப்பட்ட வேளைகளிலும் பொறுத்துக் கொண்ட மலையகத் தமிழர்கள், ஏதுமறியாத தமது பிஞ்சுகளைத் துடிதுடிக்க தீயினிற் கருக்கியவரின் ஈனற் செயலுக்கு நீதி கேட்டு அமைதிவழியில் இறங்கினர். ராவயவின் பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரியாவின் வார்த்தைகளில் கூறுவதானால் "துஸ்டத்தனமாகக் கொல்லப்பட்ட தமது உறவுகளுக்காக குரல் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமையை ஆற்றவேண்டிய நிலையில் மலையகத் தமிழர்கள் இறங்கினர்" என்பதே சரியானதாகும்.

29.10.2000 அன்று பிந்துநுவேவ தடைமுகாமில் படுகொலை செய்யப்பட்டவ-ரான, சாமிமலைத் தோட்டத்தைச் சேர்ந்த சந்தனம் செல்லத்துரை என்ற இளைஞரின் சாவீடு நடைபெற்றது. அந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். இதன் பின்னர் மலையகமக்கள் முன்னணியின் ஏற்பாட்டிலான அமைதிப்பேரணியும், கண்டனக் கூட்டமும் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. தலவாக்கொல்லை நகரெங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு சோகம-யமானது.

அன்றாட ஜீவனோபாயமான தினக் கூலி உயர்விற்கே அரசின் மனம் இரங்க வேண்டும் என பிரார்த்தனை நடத்திய மக்கள், வீதிக்கு வந்து கண்டனம் தெரிவிக்க முற்பட்டதைப் பொறுக்க முடியாத சிங்கள அரசு, சொந்தச் சோதரர் துன்பத்தில் சிந்தை கலங்கிய மக்களின் ஊர்வலத்தை தடுப்பதற்கு 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரண்டு மணிக்கு ஊரடங்குசட்டத்தை அமுல்ப்படுத்தியது.

பொறுத்தது போதும் இனியும் நாங்கள் மௌனமாய் இருப்பதில் பயனில்லை என்றவாறு நீதி கேட்டு அமைதி வழிப் போராட்டத்தை மேற்கொண்டனர். அகிம்சை வழிப்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது கூட்டமாக வந்த சிங்களக் காடையர் கற்கள் தடிகள் கொண்டு தாக்கினர். மலையகம் சிங்களக் காடையரின் வேட்டைக் காடாக்கப்பட்டது. மலையகப் பாராளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், இச்சம்பவத்தில் சிங்களப் படைகளால் கைதுசெய்யப் பட்டவரான சந்திரசேகரன் தெரிவிக்கையில் திட்மிட்ட வகையில் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப் பட்டன எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தயார்ப்படுத்தப்பட்ட அரச துருப்புக்களின் ஆதரவுடன் இயங்கிய சிங்களக் குண்டர்களிடமிருந்து தப்பவேண்டிய நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டனர். தங்களைத் தாங்களே பாதுகாப்பதைத் தவிர வேறுதெரிவு அவர்களுக்கு இருக்கவில்லை. மலையகத் தமிழ் இளைஞர்கள் தமிழர்பகுதிகளுக்கு காடையர்கள் வருவதை தடுப்பதற்காக மரங்களை சாலைகள் நெடுகிலும் தறித்து விழுத்தினர். இதனால் பெருமளவில் தமிழர்கள் வாழும் தோட்டங்கள் எல்லாம் சிங்களக் காடையர் வெறியாட்டத்தில் இருந்து தப்பின.

தீவின் ஏனைய பகுதிகளில் இருந்து மேலதிக படைகள் மலையகப் பகுதிகளுக்குத் தருவிக்கப்பட்டன. இதன் பின்னர் மேலும் மோசமான தாக்குதல்கள் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. சிறீலங்காப் படைகளின் ஆதரவோடு தலவாக்கொல்லை நகரில் இருந்த தமிழர்களின் 20ற்கு மேற்பட்ட கடைகள் எரித்து சாம்பலாக்கப்பட்டன. 1830இலிருந்து மலையகத்தை வளப்படுத்தி, இலங்கைத்தீவின் அந்நியச் செலாவணி வருமானத்தை மேம்படுத்த பாடுபட்ட தமிழனின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. 25கடைகளில் இராணுவமுமே பூட்டை உடைத்து சிங்களக் குண்டர்களுக்கு பொருட்களை அள்ளியிறைத்ததாக தலவாக்கொல்லை நகர தமிழ் வர்த்தகர் ஒருவர் நெஞ்சுகுமுறக் கூறினார்.

பேரூந்துகளில் வந்த 50ற்கும் மேற்பட்ட தமிழர்கள் தாக்கப்பட்டு கடுங்காயங்களுக்கு ஆட்பட்டனர். தோட்டப் பகுதிகளில் 125 தமிழ்த் தொழிலாளர்கள் பிக்குமாரின் தலைமையில் வந்த சிங்களவர்களால் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளாகினர். சில தோட்டங்களுக்குள் உட்புகுந்து 58, 77, 83களில் சிங்களம் செய்ததைப் போல இங்கு நடைமுறைப் படுத்த முற்பட்டது பௌத்த சிங்களம். ஆனால் நிலைமைகள் சிங்களம் எதிர்பார்த்ததைப் போல அமையவில்லை. "இன்பரிடா" எனப்படும் சுயபாதுகாப்பு அமைப்புக்களைப் போல தமிழ்மக்கள் அனைவரும் திரண்டு நின்றதில் சிங்களக் காடையர் திரும்பித் தப்பியோடினர்.

நுவரேலியா மாவட்டத்தில் இருந்து சிங்களப் பேரிவானதக் கொடும் புயல், "மண்ணை அரிப்பதற்காய் பேய்களின் பெருநதி பெருக்கெடுத்ததுபோல" கினிகதென்ன பகுதிகளுக்கும் பரவியது. சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையெனப்படும் கினிகதென்னப் பகுதியில் கண்டி மன்னன் காலத்திலிருந்து ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த இஸ்லாமியத் தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டனர். கினிகதென்ன பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் நாவலப்பிட்டிக்கு இடம்பெயர்ந்தனர்.

சிங்களக் காவல்துறையும், இராணு

வமும் தமிழ் மக்கள் மீது சுட்டதில் 4 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 14பேர் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகினர். தமிழர்களின் உள்ளத்துணர்ச்சியைக் கண்டு திகைப்படைந்த சந்திரிகா அரசு இரு இராணுவமுகாம்களும், தற்காலிகமாக விசேட அதிரடிப்படையினரின் முகாம்களும் தமிழர் வாழிடங்கள் எங்கனும் அமைக்கப்பட்டன. பலநூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் காரணமேதுமின்றிக் கைதுசெய்யப்பட்டனர். இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது என்னவெனில், தமிழர்கள் சுடப்பட்டதற்குக் காரணமாக அரச தரப்பால் கூட்டத்தைக்கலைப்பதற்குச் சுட்ட வேளையில் தமிழர்கள் இடையில் அகப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் இதுவரைக்கும் இச்சம்பவங்களில் யாரேனும் சிங்களவர்கள் அரசபடைகளால் சுடப்பட்டு கொல்லப்பட்டதாகவோ, காயமடைந்ததாகவோ, தாக்கப்பட்டதாகவோ அல்லது கைதுசெய்யப்பட்டதாகவோ தகவல்கள் ஏதுமில்லை என்று குறிப்பிடுகின்றது சண்டேலீடர் பத்திரிகை.



மலையகத்தில் தமிழர்கள் கைது செய்யப்படுதலும், தாக்கப்படுதலும் அதிகரித்த வேளையில் சிங்கள அரச தரப்பினாலும், ஊடகவியலாளராலும் ஒட்டுமொத்தக் கதையே மாற்றப்பட்டது. தமிழர்கள் வெறிகொண்டு தாக்குகிறார்கள், தமிழ்க் குண்டர்கள் சிங்கள மக்களை விரட்டியடிக்-கின்றார்கள் என்று செய்திகள் விஸ்ரூபமெடுத்து பரப்பப்பட்டன. சிங்களத்து ஊடகவியலே, ஒரு சில பத்திரிகையாளரைத் தவிர பத்திரிகாதர்மத்தை ஒரு புறத்தே வைத்துவிட்டு சிங்களத்துக்குச் சார்பாக இனவாத விசத்தினைக்கக்கியது.

சண்டே ரைம்ஸ் பத்திரிகை தமிழர் பகுதிகளில் இருந்து மனப்பயம் காரணமாக இடம்பெயர்ந்த சில சிங்களவரைப் பேட்டி கண்டு கதைவிட்டது. தமிழர்கள் மலைநாட்டையும் கையகப்படுத்தப் போகின்றார்கள் என்று இன்னொரு சிங்களப்பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தை தீட்டியது.

கினிகதென்ன, லிண்டுவா, தலவாக்கொல்லை, கற்றன், நுவரேலியா எங்கும் தமிழர்கள் தாக்கப்பட்டு, பலகோடி பெறுமதியான தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு தலவாக்கொல்லை சிறீ சட்டகர்மர்மயா விகாரையின் தலைமைப் பிக்குவான மிந்தெனியா சோரத தேரோ குறிப்பிடுகையில் சிங்களவர்களை விரட்டியடிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும் என தமிழர்களின் அமைதி எதிர்ப்புப் போராட்டத்தைக் குறிப்பிட்டு, தலவாக்கொல்லையில் உடன் ஒரு இராணுவ முகாம் வேண்டும் என அவசர வேண்டுகோள் வேறு விடுத்தார்.

இன்னொரு பிக்குவான நுவரேலியா பௌத்த காங்கிரசைச் சேர்ந்த பிக்குவான தந்திரி வேவ மகாநாம தேரர் சிங்கள மக்கள் துக்கத்திற்கு வெள்ளைத் துணியையே கட்டுவார்கள் தமிழர்கள் கறுப்புத் துணியை கட்டியமையே பிரச்சனைக்குக் காரணம் என தமது இனத்தின் கொலை வெறிப் பரிமாணத்தை மறைக்க முற்பட்டுள்ளார்.

அரசு என்பது அதன் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொதுவானது என சனநாயகத்தின் தந்தை எனப்படும் கிரேக்க தத்துவ அறிஞரான பிளாட்டோ தனது குடியியல் நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சந்திரிகா அம்மையாரது அரசோ பிந்துநுவேவவில் கொல்லப்பட்ட இளைஞர்கள் சிங்களப் பாதுகாவலர்களுக்கு உள்ளாடையைக் காட்டியதால் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள் என்று நாளொரு புனைசெய்தியும் பொழுதொரு புழுகுமாய் இளைஞர்கள் படுகொலைக்கு விசமக் கருத்துக்களை விட்டுக் கொண்டிருக்கின்றது. இந்நிலையிலேயேதான் தம்மினப் புதல்வர்களுக்காய் மலையகத் தமிழர்கள் நடத்திய அமைதிப் போராட்டமும், அதன்மீது சிங்களம் தலை விரித்தாடிய பேரினவாதக் கோலமும் சிங்களத்தில் தமிழர்களுக்கு எதுவித உரிமையும் கிடையாது என்பதையே வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

தமிழர்களுக்கு என்று இறைமையுள்ள நாடு ஒன்று அமைவதே உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கெல்லாம் பாதுகாப்பானது என்பதே மலையகத்தில் சிங்கள அரசபயங்கரவாதத்தில் முதன்முதல் தறிக்கப்பட்ட சிவனுஇலட்சுமணன் தொட்டு இறுதியாக கடந்த 30.10.2000 அன்று வஜிரபொரள சந்தியில் கொல்லப்பட்ட இளங்குடும்பஸ்தர் மாதவன் வரைக்குமான படுகொலைச் சம்பவங்கள் கட்டியங் கூறுகின்றன. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தனிமனித நதிகளால் பொங்கிப் பிரவகிக்கும் விடுதலைப் பெருநதி !

கல்லுண்டாய் வெளியில் ஒரு வீரச்சாவு வீட்டுக்குத் தணிகைச்செல்வி என்னைக் கூட்டிப் போயிருந்தார். அந்தப் போராளியின் உடல் சேதமுற்றிருந்ததால் புகழுடல் பேழை மூடப்பட்டுக் கிடந்தது.

திறந்து உடலைக் காட்டாவிட்டால் பேழையை எடுத்துச் செல்லவிடமாட்டேன் என்று அந்தப் போராளியின் தந்தை பிடிவாதமாக நின்றார். மது போதையில் நின்ற அவர் பேழையைக் கொத்தித் திறக்கப்போவதாக கையில் கத்தியுடன் மிரட்டிக் கொண்டிருந்தார். அவருக்குக் கிட்டப்போக அஞ்சிக் கொண்டு குடும்பத்தவரும் அயலவரும் ஒதுங்கி நிற்க, தணிகைச்செல்வி அவரிடம் போனார்.

“அந்தாள் பொல்லாதது, உங்களையும் வெட்டிப்போட்டிடும் போக வேண்டாம்.” என்று அயலவர்கள் தடுக்க, “இல்லை பிரச்சனையில்லை, நான் பார்க்கிறேன்” என்றவாறு அவரை நெருங்கிய தணிகைச்செல்வி, இருங்கோ அப்பா, என்று அவரை ஒரு இருக்கையில் அமரச் செய்து, கையில் இருந்த கத்தியை வாங்கி, வேறுபக்கம் வைத்துவிட்டு கதைக்கத் தொடங்க, அவர் உரத்த குரலில் ஏசத் தொடங்கினார். அவர் தனது கோபம் தீரும் வரையில் ஏசி ஓயும்வரை பொறுமையுடன் காத்திருந்த தணிகைச்செல்வி, நாங்களும் உங்கட பிள்ளையள் தானே அப்பா என்று தொடங்கி, ஆறுதலாகக் கதைத்து விளக்க, அப்பா அமைதியாகி, தன் பிள்ளையின் இறுதி நிகழ்வுக்கு ஒத்துழைத்தார். தணிகைச்செல்வியின் பொறுமையையும், நிதானத்தையும், ஆளுமையையும் நான் அப்போதுதான் அருகே இருந்து பார்த்தேன்.

1989இல் அவர் மணலாற்றுக் காட்டில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருக்கவில்லை. 1993இல் வெளியே வந்து அரசியல் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிய பின்னர்தான் அவரை அடிக்கடி சந்திக்கக் கூடியதாக இருந்தது. அப்போது அவர் யாழ் மாவட்ட ( விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் ) அரசியல் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்தார்.

1996இல் முல்லைப் படைத்தள அழிப்பு நடவடிக்கை நடந்த நேரம் அவர் அரசியல் வேலை செய்யும் அனைத்துப் பெண் போராளிகளினதும் பொறுப்பாளராக பணியாற்றினார். அந்தச் சண்டையில் அவர் என்னுடன் கலந்து கொண்டார்.

சண்டையின் நிலைமைக்கேற்ப அந்த இடத்துக்கு ரவைகள் தேவை. ஒழுங்கு செய்யுங்கோ என்று சொன்னால் உடனடியாகவே ஒழுங்கு

**-விதுஷா-**

செய்வார். அந்த இடத்துக்கு ஆட்கள் தேவை பார்த்து அனுப்புங்கோ என்று சொன்னால் உடனேயே வேகமாக ஒழுங்கு செய்வார். தேவைகளின் அவசியத்தைப் புரிந்துகொண்டு ஒரு சிறுபிள்ளைபோல் தானே ஓடி, ஓடி வேலை செய்தார். தன்னை ஒரு பொறுப்பாளராக நினைத்துக் கொண்டு வேறுயாரிடமும் வேலை சொல்லிவிட்டு நின்றுவிடவில்லை. தனக்கு அனுபவங்கள் வேண்டும் என்பதால் தனக்குத் தரப்பட்ட வேலைகளைத் தானே நேரடியாகச் செய்தார்.

அந்த நேரம் காயக்காரர்களை உடைந்த வீடொன்றுக்கு எடுத்து, அங்கிருந்து பின்னணிக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். திடீரென அந்த வீட்டை நோக்கி ஆர்.பி.ஜி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எதிரி எங்கிருந்து தாக்குகின்றான் என்பது உடனே தெரியவில்லை. அதே நேரம் சிறு இராணுவ அணி நகர்ந்து வீட்டை வளைத்துத் தாக்க முயன்றது. அவ்விடத்தில் நின்றவர்கள் அந்த அணியுடன் சண்டையைத் தொடக்கிவிட, உடனேயே தணிகைச்செல்வி இரண்டு போராளிகளைக் கூட்டிக்கொண்டுபோய் நிலைமையை அவதானித்தவாறு நகர்ந்து, ஆர்.பி.ஜியுடன் எதிரி மறைந்திருந்த நிலையை இனங்கண்டு அவனைச் சுட்டு, எம்மீதான தாக்குதலை நிறுத்திவிட்டார்.

அந்த இடத்தின் நெருக்கடியை அவர் அந்த நேரம் நீக்கியிருக்காவிட்டால், இருந்த காயக்காரர்களையும் அகற்ற முடியாமல், இன்னும் புதிய காயக்காரர்களுடன் நிலைமை சிக்கலாகியிருக்கக்கூடும். ஆனால் நிலைமைக்கேற்ப செயற்படும் தணிகைச்செல்வியின் ஆற்றல், காயப்பட்ட நிலையில் அங்கிருந்தவர்களைக் காப்பாற்றிவிட்டது.

முல்லை வெற்றிச்சமர் முடிந்து, கிளிநொச்சி மீதான எதிரியின் உண்மை வெற்றி நடவடிக்கை நடந்து கொண்டிருந்த காலத்தில், யாழ்ப்பாணத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருந்த பெண்கள் அணிக்குப் பொறுப்பாளராகத் தணிகைச்செல்வி நியமிக்கப்பட்டார். தலைவரால் நம்பிக்கையோடு தரப்பட்ட பொறுப்பு, அதைச் சரியாகச் செய்யவேண்டும் என்ற அவாவில் எல்லோரிடமும் போய்க் கதைப்பார். தனக்குத் தெரியாதவற்றை தன்னிலும் இளைய போராளியிடம் கேட்டறிவதற்குக்கூட அவர் தயங்கியதில்லை.

பொறுப்பாளர்கள் எப்போதும் எல்லோருக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். என்று தலைவர் அடிக்கடி குறிப்பிடுவதை எப்போதும் மனதில் வைத்திருந்தார். ஒருமுறை புதிய வெடிகுண்டு ஒன்றை அதற்குரிய பொறுப்பாளர், தாக்குதல் பொறிப்பாளர்களுக்கு விளக்கி, அதை இயக்கும் முறைபற்றி சொல்லிக் கொடுத்தார். உடனேயே தணிகைச்செல்வி தான் இயக்குவதாகக் கூறி வாங்கி இயக்கினார். இயக்கிய முறையில் ஏற்பட்ட தவறால் அது முழுமையாகச் செயல் விளைவைக் காட்டவில்லை. உடனே பொறுப்பாளர் தணிகைச்செல்வியின் தவறைச் சுட்டிக்காட்டி மறுபடியும் விளக்கினார். அதைப் புரிந்துகொண்ட தணிகைச்செல்வி தயங்காமல் தன்னை மற்றவர்கள் ஏதும் நினைப்பார்களோ என்று கூச்சப்படாமல், அடுத்த தடவையும் தானே முயன்று சரியாகச் செய்துவிட்டார். தனக்கு விளங்கும்வரை திருப்பித் திருப்பிச் செய்வதற்கு, கேட்பதற்கு அவர் பின்னின்றதேயில்லை.

யாழ்ப்பாணத்தில் நின்று வேலை செய்யும் பெண்போராளிகளையும், அந்தப் பணிக்கென மேலும் தன்னிடம் தரப்பட்டிருந்தவர்களையும் நல்ல ஒரு வளர்ச்சி நிலைக்கு கொண்டு வந்துவிட வேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் இரவு பகல் பாராது தணிகைச்செல்வி ஓடி ஓடி உழைத்த நாட்கள் அதிகம்.

ஓய்வையே நினைக்காமல் உழைத்தார். அவருக்குரிய நிர்வாகத் தளமும் தாக்குதல் அணிப் போராளிகள் நிற்கும் இடமும் தேவைகருதிப் பல கிலோமீற்றர் இடைவெளியிலேயே அமைந்திருந்தன. ஆலோசனை கேட்பதற்காக, உதவிகளைப் பெறுவதற்காக வேலைகளை ஒழுங்கமைப்பதற்காக என்று பல்வேறு படையணிகளின் தளபதிகள், வேறு பொறுப்பாளர்களைச் சந்திக்கவென நாள்தோறும் நீண்ட பயணங்களைச் செய்யவேண்டியிருந்தது.

ஒருநாள் எங்கள் சக பொறுப்பாளர் ஒருவர் வீதியால் மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தபோது தணிகைச்செல்வி தன் மோட்டார் சைக்கிளை வீதியோரமாக நிறுத்திவிட்டு, ஆசனத்தில் அமர்ந்தபடியே கைப்பிடியில் முகத்தை வைத்துப் படுத்திருப்பதைக் கண்டார். அவரைத் தட்டி எழுப்பி, “என்னக்கா ஏதும் பிரச்சனையோ?” என்று கேட்க எழும்பி முகத்தைத் துடைத்தவாறே,

“இல்லை ஒரே அலுப்பாக இருந்தது, நித்திரையும் வந்துவிட்டது. அதுதான் கொஞ்ச நேரம் படுத்தனான்.” என்று சொன்னவர், அவசரமாகப் போகவேண்டும் என்று உடனேயே விடைபெற்றுப் போய்விட்டார்.

கடைசி நாட்களில் அவரிடம் வந்து சேர்ந்திருந்த போராளிகளுக்கு சண்டை அனுபவங்களை ஏற்படுத்தி, யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிப்போய்,



லெப்.கேணல் தணிகைச்செல்வி

தாக்குதல்களை நடத்தி, ஏனைய தாக்குதல் அணிகள் உள்நுழையப் பாதைகள் அமைத்து. யாழ்ப்பாணம் பிடித்து என்று பல கனவுகளைச் சுமந்து கொண்டு------

ஒரு நாள் தலைவரின் ஒன்றுகூடல் நடந்து கொண்டிருந்தது. எல்லோரையும் பார்த்தவாறு அவர் கதைத்துக் கொண்டிருந்தார். வெளியில் அலைந்த களைப்புடன் இருந்த தணிகைச்செல்வியைப் பார்த்ததும் உரையாடலை நிறுத்தி, “ஏன் தணிகைச்செல்வி இப்பிடிக் காஞ்சு போய் இருக்கிறீங்கள்?” என்று கேட்டவர். உடனேயே, “நீங்கள் (வெகு தொலைவிலிருந்த அவரின் தளமொன்றைக் குறிப்பிட்டு) நேரே அங்கேயிருந்து வருகிறீங்களோ?” என்றார்.

தலைவருக்கு முன்னால் தான் அப்படி நிற்கின்றேனே என்று சங்கடப்பட்ட தணிகைச்செல்வி “ஓமண்ணை” என்று சொல்லிவிட்டு இருந்து விட்டார். இப்படித்தான், கடைசி நாட்களில் தணிகைச்செல்வி தன்னைக்கூடக் கவனிக்காமல் வேலையிலேயே மூழ்கி ...

1999.06.26இல் பள்ளமடுவில் சண்டை நடக்கும் என்பதை அறிந்தவுடனேயே, அங்கே நிற்கும் தன் அணியினர் சண்டை பிடிக்கும்போது, தான் அவர்களுக்கு அருகில் நிற்கவேண்டும் என்ற ஆதங்கத்துடன், இனி வரும் சமர்களை எதிர் கொள்ளுவதற்கான அனுபவத்தைத் தரப்போகும் சண்டையில் அவர்களைச் சரியான முறையில் வழிநடத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் முதல்நாளிரவே வந்த சேர்ந்துவிட்டார்.

சண்டையில் தன் பிள்ளைகளுடனேயே நின்று, அவர்களுக்கருகிலேயே போரிட்டு வீழ்ந்த லெப்.கேணல் தணிகைச்செல்வியின் உணர்வுகளை வெறும் வார்த்தைகளில் எழுதிவிடமுடியாது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓயாத அலைகள் - 03

## ஒரு இராணுவ ஆய்வு



இரண்டரை வருடப் போருக்குப் பின்னர் இந்தியப் படைகள் தமிழீழ மண்ணைவிட்டு வெளியேற்றப்பட்டபோது கெரில்லா இயக்கம் என்ற தராதரத்திலிருந்து விடுதலைச்சேனை என்ற நிலையை புலிகள் இயக்கம் எட்டியது.

இந்த விடுதலைச்சேனை ஒரு மரபுவழி இராணுவமாக பண்புமாற்றம் பெறும் காலகட்டமாக 1990-91 விளங்கியது.

மாங்குளம்-கொக்காவில் இராணுவத் தங்ககங்கள் தாக்கியழிக்கப்பட்டு நிலத்தை மீட்டெடுத்த இராணுவ நிகழ்ச்சியும்- ஆ.க.வெ. பெரும் தாக்குதலின்போது ஆனையிறவுத்தளம் மீதும், அதையொட்டிய பகுதிகள் மீதும் நடந்த ஒருமாதச் சமரும் சிங்களத்திற்கு அந்த ஆபத்தை உணர்த்தியது.

ஒரு மரபுப்படையாக புலிகள் இயக்கம் வளர்ச்சி பெறுவதற்கு யாழ்ப்பாணக்குடாநாடு சகலவிதத்திலும் வாய்ப்பாகவுள்ளது என சிங்களத்து இராணுவ நிபுணர்கள் கணித்தனர்.

அதனால் குடாநாட்டை ஆக்கிரமித்து அந்த இராணுவ வாய்ப்பை புலிகள் இயக்கத்திற்கு மறுக்க சிங்களப் படைத்தலைமை முடிவெடுத்தது. ஜெனரல் கொப்பேகடுவ தலைமையில் குடாநாட்டைக் கையகப்படுத்த திட்டம் வரைந்து- செயற்படுத்த முனைந்தது.

பேரினவாதத்தின் இராணுவ நட்சத்திரமான கொப்பேகடுவ உட்பட அன்றைய குடாநாட்டுப் படைத் தலைமையை அழித்த வரலாற்றுப் புகழ் மிக்க அராலிக்குண்டு, குடாநாட்டு ஆக்கிரமிப்புத் திட்டத்தைப் பொடிப்பொடியாக்கியது.

சந்திரிகா-ரத்வத்த தலைமை சிங்கள இராணுவ இயந்திரத்தின் இயக்குனர் பதவியைப் பொறுப்பேற்றபோது குடாநாட்டைக் கைப்பற்றும் திட்டம் புதுப்பிக்கப்பட்டது.

பெருந்தொகைப் படையாட்களையும்- பிரம்மாண்டமான அளவில் படைக்கலச் சக்திகளையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தி குடாநாட்டையும் ஆக்கிரமித்து- புலிகளை அழித்தல் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கில் தமிழர்களையும் கொன்று- தமிழ் மக்களுக்கு ஒரு பாடம் படிப்பித்து, தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை நசுக்க சந்திரிகா-ரத்வத்த தலைமை சதித்திட்டம் வகுத்தது.

சூரியக்கதிர் என்ற பெயரில் அந்தப்பெருநாசம் வலிகாமத்தைச் சூழ்ந்தது. தலைவர் பிரபாகரனின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் வலிகாம மக்கள் பாதுகாக்கப்பட்டனர். பின்னர் புலிகளின் சண்டைதவிர்ப்புத் தந்திரோபாயத்தால் ரிவிரச-2, ரிவிரச-3 சண்டைகளில்லாத இராணுவ நடவடிக்கைகளாகின. குடாநாடு படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் சென்றது.

படைத்தலைமை விரும்பியது போல மரபுவழிப் படையாக வளரும் வாய்ப்பை வழங்காத வன்னிப்பெரு நிலபரப்பு புலிகள் இயக்கத்தின் இராணுவமையமானது.

வன்னியில் புலிகள் மரபுவழிப்படையாக வளரமுடியாது என்று சிங்களம் கணித்ததற்கு நியாயமான புறக்காரணிகள் உண்டு.

- மரபுப்போருக்கு மருத்துவ வசதி அத்தியாவசியமானது. வன்னியில் அது போதியளவில் இல்லை என்பது ஒரு காரணம்.

-மரபுப்படைக்கு ஆட்பலம் அடிப்படையானது. வன்னியின் குறைந்த குடித்தொகை அதிக ஆட்சேர்ப்புக்கு வாய்ப்பளிக்காது என்பதும் ஒரு காரணம்.

-இரகசியமானதும்- வேகமானதுமான படைநகர்த்தலுக்கு வேண்டிய போதிய சாலைவசதிகள் வன்னியில் இல்லை என்பது இன்னொரு காரணம்.

-மரபுவழிப் போர்முறையில் மறிப்புச் சண்டைகள் முக்கிய இடம்பெறுகின்றன. இந்தவகைச் சண்டைமுறைக்குத் தகுந்த காப்பரண் வசதிகள் அவசியம் தேவை. மரபுப்போரை புலிகள் இயக்கம் நடாத்துவதற்கு காப்பரண்களுக்கு வாய்ப்பான புறநிலை வசதிகள் வன்னியில் இல்லை. உதிரும் மண்வகையால் உறுதியான நிலப் பதுங்குகுழிகளுக்கும் வாய்ப்பில்லை. இதேவேளை, களமுனைக் கோட்டைகளான காப்பரண்கள்- பதுங்குகுழிகள் கட்டத்தேவையான கட்டடப்பொருட்கள் வன்னியில் இல்லை. இவையும் காரணங்கள்.

-இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போல வன்னியின் விரிந்து பரந்த நிலப்பரப்புடன், தமது முப்படைப்பலத்தையும் இணைத்து சமர்களைத் தமக்குச் சாதகமாக நடாத்தி "எஞ்சிய" புலிகளை அழிக்கும் ஏது நிலைகள் வன்னிக் களத்திற்கு உண்டென்றும் சிங்களத் தளபதிகள் கணித்தனர்.

இவை காரணமாக வன்னிப்பெருநிலப் பரப்பில் புலிகளுடன் நடக்கப் போகும் சண்டைகள் மகிழ்ச்சியான மரதனோட்டத்தைப்போல சிங்களப் படையினருக்கு இருக்கும் என்று சிங்களம் கணித்தது. அஞ்சலோட்டப் படையெடுப்புப் பாணியிலான இராணுவ மரதனோட்டத்தை சிங்களப் படைகள் தொடங்கின.

வன்னியின் மேற்குமுனையூடாக மன்னாரின் தள்ளாடி நோக்கி எடிபல புறப்பட்டது. வழியெங்கும் மயான அமைதி நிலவ, படையினர் வியர்வைவடிய நடந்து தள்ளாடி சென்றடைந்தபோது, சிந்திப்பதற்குப் பதிலாக சிங்களப்படைத் தலைமை சிந்தையிழந்து மமதை கொண்டது.

தமது கணிப்பின் பிரகாரம் இராணுவ நிகழ்ச்சிகள் நடைபெறப்போகின்றன எனச் சிங்களப்படைத் தலைமை இறுமாந்திருந்தது. அந்தப் படைத்திமிர் அடுத்த இராணுவ நடவடிக்கையின் பெயர் சூட்டலில் பகிரங்கமாக வெளிப்பட்டது.

"வெற்றி உறுதி" என முரசு தட்டியபடி ஜயசிக்குறுய் புறப்பட்டது. போர் சம்பந்தப்பட்டிருந்த விடயங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கைகோர்க்கும் நாள் என சிங்களத்தின் சோதிடர்கள் கணித்தெடுத்த 1997, மே, 13ஆம் நாளில் இருதலைப்பாம்பாக இருமுனைகள் ஊடாக ஜயசிக்குறுய் புறப்பட்டது. சந்திரிகா அம்மையாரின் கணவர் விஜய குமாரணதுங்கா நாயகனாக நடித்த வெற்றிப்படத்தின் பெயரும் ஜயசிக்குறுய் என்பதால் அம்மையாருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

ஜயசிக்குறுயின் இராணுவ நோக்கம் உடனடி அபாயத்தை விளைவிக்க வல்லது. பெருநிலப்பரப்பை இரண்டாகப்பிளந்து- பாதை சமைத்து குடாநாட்டுப் படையையும் ஒருங்கு சேர்த்துக்கொண்டு வன்னியை ஒட்டுமொத்தமாகத் துடைத்தழிக்கும் நாசகாரத்திட்டத்தைக் கொண்டிருந்தது. அதனால் புலிகள் இயக்கம் தவிர்க்க விரும்பிய மரபுவழிச் சண்டை தவிர்க்க முடியாததாகியது. ஜயசிக்குறுயை செயலிழக்கச் செய்விக்கத் தலைவர் பிரபாகரன் தீர்மானித்தார். "சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமர்" என அவர் வர்ணிக்கும் அளவுக்கு ஜயசிக்குறுய் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. ஜயசிக்குறுய் படைக்கு எதிரான மரபுச்சண்டைகள் மற்றும் வலிந்த தாக்குதல்களின் தீவிரத்தால் சிங்களப்படை பலத்த சேதத்தைச் சந்தித்தது. போய்ச் சேரவேண்டிய கிளிநொச்சிப் படைத்தளத்தைப் புலிகள் கைப்பற்றினர். புறப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாத களநிலைமை எழுந்ததும் திரும்பிச் சென்றிருக்க வேண்டிய ஜயசிக்குறுய் திரும்ப மறுத்து இடைநடுவில் தரித்து இராணுவத் தவறிழைத்தது.

வன்னி அரங்கில் சுமார் ஒரு வருடகாலம் நடந்த ஜயசிக்குறுய் நடவடிக்கையில் 3000 படையாட்கள் பலியாகினர். 7000 பேர் படுகாயம் பட்டனர். பல கோடி ரூபா பெறுமானமுள்ள படைத்தளபாடங்களை சிங்களப்படை இழந்தது. விஜய குமாரணதுங்காவின் ஜயசிக்குறுய் படம் அடைந்த வசூல் வெற்றி அம்மையாரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருக்கலாம். ஆனால், ஜயசிக்குறுய் எதிர்ச் சமரில் புலிகள் இயக்கம் சிறந்ததொரு இராணுவ அறுவடையை நிலைநாட்டி அம்மையாரின் பேரினவாத ஆசைக்கு பலத்த அடி கொடுத்தது. ஒரு பொய்யை மறைக்க பத்துப் பொய்களைச் சொல்வதுபோல ஒரு இராணுவத் தோல்வியை மறைக்க, தோல்விகளை உள்ளுடனாகக்கொண்ட இன்னும் சில இராணுவ நடவடிக்கைகளை சிங்களப் படைத்தலைமை நடாத்தியது.

ஜயசிக்குறுய் செயற்படமுடியாமல் போனவுடன் ரிவிபல, ரணகோச, வோட்டர்செட் என வன்னிப் பெருநிலப்பரப்பில் படையினரின் இராணுவ அஞ்சலோட்டம் தொடர்ந்தது. ஜெயசிக்குறுயைப்போல ரணகோச, வோட்டர்செட் நடவடிக்கைகள் படைத்தரப்பிற்கு பலத்த இழப்புக்களைக் கொடுத்தன. தனது மரபுப்படைபலத்தை ஒருங்குகுவித்து பயன்படுத்தியும், புலிகள் மரபுவழிச் சண்டைகள் மூலம் தகுந்த பதிலடிகளைத் தொடுத்தனர்.

வன்னி மண்ணில் புலிகள் இயக்கம் ஒரு மரபுவழிப்படையாக வளரமுடியாது என்ற சிங்களத்தின் இராணுவக் கணிப்பை, ஜயசிக்குறுய்- ரணகோச- வோட்டர்செட் போன்றவற்றிற்கெதிரான எதிர்ச்சமர்கள், பொய்யாக்கின. எனினும் சிங்களத்தின் படைத்திமிர் இந்தக் களயதார்த்தத்தை ஏற்க மறுத்தது.

மரபுப்படையாக புலிகள் வளர வன்னியில் இருந்த பாதகநிலைகள் அனைத்தையும், தலைவர் பிரபாகரன் அவர்கள், தனது திட்டமிட்ட செயற்பாடுகளால் மாற்று ஏற்பாடுகள் செய்து- மாற்றியமைத்து- ஒரு தரமான மரபுப்படையாக புலிகள் இயக்கத்தை வளர்த்தெடுக்க வன்னிப்பெருநிலப்பரப்பையே தயார்ப்படுத்தி இராணுவ சாதனை புரிந்துள்ளார்.

இதேவேளை, அடைக்கோழியை முழுங்கிய புடையன்பாம்பு போல சிங்களப்படை நிலம் விழுங்கி ஊதிப் பருத்தபடி உள்ளுக்குள் அவதிப்பட்டதை தலைவர் மிகச்சரியாகக் கண்டறிந்தார்.

சிங்களப்படை மேலும்- மேலும் நிலம் விழுங்கும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேராசையில் படைநகர்வுத் திட்டங்களை வகுக்க, சிங்களம் விழுங்கிய தமிழர் நிலப்பரப்புக்களை மீட்டெடுக்க தேசியத் தலைவரவர்கள் ஓசைப்படாமல் திட்டங்கள் வகுத்து- தாக்குதல் தந்திரோபாயங்களை வரைந்து போராளிகளுக்குப் பயிற்சிகளைக் கொடுத்து தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார். "பயிற்சி, தந்திரம், துணிவு" என்ற தலைவரின் இராணுவ மந்திரத்தை சிரமேற்கொண்டு மாபெரும் தாக்குதலுக்காக புலிவீரர்கள் தயாராகிக்கொண்டிருந்தனர்.

புலிகளின் நிரந்தரப்படைக்கு துணைப் பலம் சேர்க்க வன்னி வாழ் மக்களுக்கு ஆயுதப்பயிற்சிகளை வழங்கும்படி தலைவர் ஆணையிட்டார். எல்லைப்படை-கிராமியப்படை என்ற பெயர்களில் மக்கள் படையைக் கட்டும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

01.11.1999 அன்று நள்ளிரவு ஒட்டுசுட்டான் இராணுவத்தளம் மீது போராளிகளைக் களமிறக்கி, ஓயாத அலைகள்-03 என தாக்குதலுக்குப் பெயர் சூட்டி வேக ஓட்டப்பாணியிலான ஒரு தொடர் தாக்குதல் திட்டத்தை தலைவர் பிரபாகரன் தொடக்கி வைத்தார். நாளொன்றுக்கு ஒரு படைத்தளம் என்ற ரீதியில் சிங்களப்படை முகாங்கள் புலிகள் வசமாகின. அந்தப் பகைத் தளங்களின் ஆதிக்கத்திற்குள் இருந்த தமிழர் நிலங்களும் விடுவிக்கப்பட்டன.

இரண்டரை வருட காலமாக 5000 படையினரைப் பலிகொடுத்து, 12,000 படையினரை படுகாயத்திற்குள்ளாக்கி சிங்களப்படைகள் முக்கி-முனகி-முயன்று பிடித்த வன்னிப்பெருநிலப்பரப்பின் பெரும் பகுதியை ஆறுநாள் சிங்கவேட்டையில் அடித்து மீட்டெடுத்த இராணுவ அற்புதத்தை தேசியத் தலைவர் பிரபாகரன் நிகழ்த்திக் காட்டியுள்ளார். ஆழம் அறியாமல் அகலக்கால் வைத்த சிங்களம் அதற்கான தண்டனையைப் பெற்றுக்கொண்டது.

முல்லைத்தீவுத் தளத்தைப் புலிகள் அடித்து மீட்க-படையினர் கிளிநொச்சியை ஆக்கிரமித்தனர். கிளிநொச்சியைப் புலிகள் தாக்கிக் கைப்பற்ற படையினர் மாங்குளத்தைக் கையகப்படுத்தினர். ஒரு நகரத்திற்குப் பதில் இன்னொரு நகரம் என சிங்கள ஆய்வாளர்கள் திருப்திப்பட்ட காலம் இம்முறை காலமாகிவிட்டது.

ஒலிம்பிக் வேகத்துடன் ஒட்டுசுட்டானுக்குள்ளிருந்து ஓயாத அலைகள்-03 புறப்பட்டபோது ஆக்கிரமிப்பிற்குள் துவண்டு கிடந்த வன்னியின் நகரங்கள் வரிசையாக புலிகள் வசமாகின. ஒரு நகரத்தை புலிகளிடம் பறிகொடுத்துவிட்டு, மறு நகரத்தைக் கையில் வைத்திருக்க முயன்று- இயலாமையால் கைவிட்டோடி, அடுத்த நகரத்தையும் துறந்து, ஆட்லறிகளை இழுத்துக் கொண்டு வவுனியாவரை புறமுதுகிட்டோட வேண்டிய கையறுநிலையில் சிங்களப்படையிருந்தது.

ஆக்கிரமிக்கப்பட்டிருந்த வன்னி நிலத்தின் பெரும்பகுதியை மீட்டதுடன், கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாகப் படை ஆக்கிரமிப்பிற்குள்ளும்- சிங்களக் குடியேற்றத்தாலும் அபகரிக்கப்பட்டுள்ள மணலாற்றின் கணிசமான பண்டைத் தமிழ்க் கிராமங்கள் மீட்கப்பட்டதானது போராட்டத்



திற்கு புதியதொரு அரசியல்- இராணுவ பரிமாணத்தைக் கொடுத்துள்ளது. வடமுனையில் நான்கு நூற்றாண்டு காலம் அந்நியரின் கட்டுப்பாட்டில் இருந்ததும், எவராலும் அசைக்க முடியாதது என சிங்களம் நம்பியிருந்ததுமான ஆனையிறவுப் பெருந்தளம் கைப்பற்றப்பட்டது. வடமராட்சியின் கிழக்குப் பிரதேசத்தின் பெரும் பகுதியும், தென்மராட்சியின் தென்கிழக்கு, மற்றும் தென்மராட்சியின் மேற்குப் பகுதியும், சாவகச்சேரிப் புறநகர்ப் பகுதியும் கைப்பற்றப்பட்டன. வலிகாமத்தின் நுழைவாயிற் பகுதிகளும், யாழ் நகர எல்லைப் பகுதிகளும் தமிழர் சேனையின் வசமாகின.

தமிழர் சேனையின் மரபுவழித்தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் 10ற்கும் மேற்பட்ட படைத்தளங்களையும்- பலடசின் இராணுவத்தங்ககங்களையும் 250 கிலோமீற்றர் நீள இராணுவ வேலியில் அமைக்கப்பட்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல் அரண்களையும் இவற்றின் ஆதிக்கத்திற்குள் இருந்த சுமார் 2250 ச.கிமீற்றர் நிலப்பரப்பையும் கைவிட்டு ஓடச் செய்த ஓயாத அலைகள்-03, தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் மாபெரும் இராணுவப் பிரளயத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிங்களத்தின் முதல்தர சிறப்புப்படையணிகள் உட்பட 15,000ற்கும் அதிகமான ஆட்தொகையைக் கொண்ட சண்டைப் படையணிகள் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது பின்வாங்கி ஓடிய இராணுவநிகழ்ச்சி சிங்களப்படைத் தலைமையையும் அரசியற் தலைமையையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இதை ஒரு அவமானகரமான தேசியத் தோல்வியாக சிங்களத் தேசியவாதிகள் கருதுவர் என்பது திண்ணம். மீட்கப்பட்ட அந்தப் பாரிய நிலப்பரப்பை புலிகள் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தபடி- மேலும் படையினருடன் மோதுவது அவர்களின் மரபுப்போர் ஆற்றலின் வளர்ச்சியை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது.

சோழப்பேரரசின் காலத்திற்குப் பிறகு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர்- சிங்களப் படை நிலைகொண்டிருந்த இராணுவப்பிராந்தியம் ஒன்றிலிருந்து, தமிழர் சேனையால் ஒட்டுமொத்தமாக, அது ஓட ஓட அடித்து விரட்டப்பட்ட வரலாற்று நிகழ்ச்சியாக ஓயாத அலைகள்-03 பதிவாகிவிட்டது.

போர்மூலம் புலிகளை அடக்கி, தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கலாம் என்ற பேரினவாதத்தின் இராணுவ நம்பிக்கையை ஓயாத அலைகள்-03 தகர்த்தெறிந்துவிட்டது. அத்துடன், அத்துமீறிய சிங்களக்குடியேற்றங்கள் வாயிலாக தமிழர் நிலத்தை அபகரித்து சிங்கள மயப்படுத்தலாம் என்ற பேரினவாத முயற்சி, மணலாற்றுக் குடியேற்றங்களுக்கு நடந்துள்ள கதியால், பலத்த அடிவாங்கியுள்ளது.

இதேவேளை, ஆயுதப்போராட்டம் வாயிலாக தமிழரின் அரசியல் இலட்சியமான தமிழீழத் தனியரசை, தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கம் அமைத்து வெற்றிவாகைசூடும் என்ற அரசியல் நம்பிக்கையை ஓயாத அலைகள்-03 அசைக்க முடியாத அளவுக்கு தமிழ் மக்களிடம் புகுத்திவிட்டது.

ஒரு போரில் சில சமர்கள் வரலாற்றுத் திருப்புமுனைகளாக அமைந்து போரின் போக்கை திசைமாற்றிவிடுவதுண்டு. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் ஓயாத அலைகள் என்ற பெயரில் நடந்து முடிந்த மூன்று பெரும் தாக்குதல்களும் அத்தகைய வரலாற்றுப் பாத்திரத்தை வகிக்கும் என்பது திண்ணம். எனினும், ஓயாத அலைகள்-03 திண்ணமான வகையில், போரில் திருப்புமுனையை ஏற்படுத்திய சமராக இருக்கப்போகின்றது.

சிங்களப்படையின் தோல்வியின் ஆரம்பமாக ஓயாத அலைகள்-03 விளங்கப் போகின்றது.

இரண்டாம் உலகப்போரின்போது தனது இராணுவக் கொள்ளளவையும் மீறிப் பேராசையுடன் சோவியத்யூனியனை விழுங்க கிட்லரின் படை புறப்பட்டது. ஒப்பறேசன் பார்பறோசா என்ற பெயரிலான அந்தப் பெரும் படையெடுப்பை கறையான் அரிப்பது போல சிறுகச் சிறுக அரித்த சோவியத் படை, இறுதியில் தோற்கடித்தது. ஒப்பறேசன் பார்பறோசாவின் தோல்வி, கிட்லரது ஜேர்மானியப் படைக்கு தோல்வியின் ஆரம்பமாக மாறியது. சோவியத்மண்ணை விட்டே அது துரத்தியடிக்கப்பட்டது.

இந்திய-புலிகள் போரின்போது தேசியத் தலைவர் பிரபாகரனை இலக்குவைத்து இந்தியப்படைகள் செக்மேற் இராணுவ நடவடிக்கையை தொடங்கின. தேசியத் தலைவரின் நேரடி வழிகாட்டலில் நடந்த எதிர்ச்சமரில் இந்தியப்படைகள் தோற்றன. அந்தத் தோல்வி இந்தியப்படைகளின் வெளியேற்றத்திற்குக் கட்டியம் கூறியது. தமிழீழ மண்ணைவிட்டு, தோல்வியுடன் தம் நாடு திரும்பின இந்தியப்படைகள்.

இதேபோன்று புலிகள் இயக்கத்திற்கு எதிரான வன்னிப்படையெடுப்பை ஓயாத அலைகள்-03 முறியடித்துவிட்டது. அது மாத்திரமன்றி சிங்களம் நெடுங்காலமாக தமிழர் தாயகத்தில் ஆக்கிரமித்து நின்ற இடங்களும் விடுவிக்கப்பட்டுவிட்டன. சிங்களம் சந்தித்த இந்த வரலாற்று இராணுவத் தோல்வியை, அதற்கு தொடர்ந்த தோல்விகளாக ஏற்படுத்த வேண்டும். இதற்கு தமிழர் சேனையின் பலம் தொடர்ந்து பெருகிக்கொண்டே இருக்கவேண்டும். ■




## எங்கள் அண்ணன் எங்கே..,?

**முடிவுறாத தொடர்கதையாய் அரக்கர்களின் அரக்கத்தனம்.**

அமைதிப்படை என்ற பெயரில் நம் மண்ணை ஆக்கிரமித்திருந்த இந்தியப்படையினர் அட்டகாசம் புரிந்த காலம் அது. நமது மண், இந்திய இராணுவச் சப்பாத்துக்களின் கீழ் நசிந்து துடித்த பொழுதுகள். அப்போது எனக்கு பன்னிரண்டு வயதிருக்கும். எனது ஊர் வட்டுக்கோட்டைக் கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் உள்ளது. கொட்டைக்காடு எங்களின் சின்னக்கிராமம். மின்வசதிகள் இல்லை, குடிநீர்வசதிகூட இல்லாத கிராமம். இங்கொன்றும் அங்கொன்றுமாய்... பனை ஓலைகளால் வேய்ந்த குடிசைகளில் நாளைய நம்பிக்கைகளுடன் மனிதர்கள். கஸ்டமான சீவியத்தின் மத்தியிலும் நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்துவந்தோம்.

வயல்வேலையே எங்களது குடும்பத் தொழில். அப்பாவும் அம்மாவும் காலையில் வயலுக்குப் போய் மாலை வீடுவருவார்கள். வசதிக்கேற்ப கஞ்சியோ கூழோ குடித்துவிட்டு, சந்தோசமாகவே வாழ்ந்தோம். தாம் வயலில் கடுமையாக உழைத்து வந்தபோதும், எமது அப்பாவும் அம்மாவும் எம்மை படிக்கவைத்தார்கள். அப்பொழுது எங்களது அண்ணா ஒன்பதாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தார். நான் ஆறாம் வகுப்பிலும், எங்களது தங்கை பாலர் வகுப்பிலும் படித்துக்கொண்டிருந்தோம்.

எங்களது தாயாரும் வயல் வேலைக்காக, அநேக நாட்களில், அதிகாலையிலேயே சென்றுவிடுவதால், எங்கள் அண்ணாவே எங்களுக்கு எல்லாமுமாகி கடமைகள் புரிவார். எங்களைக் குளிக்கவார்த்து, ஆடைகள் உடுத்தி, சாப்பாடு தந்து எங்களை பள்ளிக்கூடத்திற்கு ஏற்றிச் செல்வார் அண்ணா.

நான் சற்று வளர்ந்தவனாகையால், எனது அலுவல்களை நானே பார்த்துக் கொள்வது எனக்குச் சிரமமாக இருப்பதில்லை. ஆனால், பாலர் வகுப்பில் படிக்கும் தங்கச்சிக்கு குளிக்கவார்த்து, எமது பழைய றங்குப் பெட்டிக்குள் இருந்து, பழையதோ கிழிந்ததோ சட்டையை எடுத்துப் போட்டு, தங்கச்சியை பாடசாலைக்கு வெளிக்கிடுத்துவதில், அண்ணா ஒரு தாயாகவே மாறிவிடுவார். சைக்கிளில் எம்மை ஏற்றிக்கொண்டு நேரம் பிந்தக்கூடாது என்பதற்காக அரக்கப்பரக்க சைக்கிளை ஓட்டி எம்மை உரிய நேரத்தில், பாடசாலையில் கொண்டுசென்று விடுவார்.

வயல்வேலையும், பஞ்சம் தீர்க்க நிவாரணமுமாக எங்களது வாழ்க்கை கஸ்டங்கள் நிறைந்தபோதும் நிம்மதியாகவும், பாசம் நிறைந்ததாகவும் இருந்தது.

அன்றொருநாள்.... இன்று நினைக்கையிலும் நெஞ்சு படபடக்கும் அந்த நாள்.. காலைப்பொழுது. காலை எட்டு மணியிருக்கும், இரைந்தபடி விரைந்த வாகனங்களின் சத்தம் பெரிதாகிப் பெரிதாகி... எம் வீட்டுப்பக்கம் நோக்கி வந்தன. ஜீப், றக் வண்டிகளின் கனத்த ஒலி என்பது புரிந்தது. எம் வீட்டை நெருங்கியதும் வாகனச் சத்தங்கள் நின்றன. வாகனங்களின் கதவுகள் திறந்து.. அறைந்து சாற்றப்படும் ஓசைகள். சப்பாத்துக்காலடி ஓசையும்... புரியாத பாசைகளின் சத்தங்கள் உரத்துக் கேட்டன. நாய்களின் குரைப்பும், புரியாத பாசைகளின் அட்டகாச ஒலிகளும் சேர்ந்து மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தின. நான் பயந்து.. அம்மாவைப் பார்த்தேன். அம்மாவும் கலவரமடைந்திருந்தார். அண்ணா வீட்டுக்குள் படித்துக்கொண்டிருந்திருக்கக்கூடும்.

சக்குப்பிடித்த எண்ணை நெடி, மிக அருகில் அடித்தது. வீட்டு முற்றத்தில் பச்சை விரித்ததாய்... எங்கும் இராணுவம். வேலைக்குப் புறப்பட நார்க்கடகத்துடன் தயாராக இருந்த அம்மாவை.. வந்த வேகத்தில் ஒரு மிருகம் பிடித்திழுத்தது. அம்மா வைத்திருந்த நார்க்கடகத்தை பறித்தெ

www.tamilarangam.net







# ஓயாத அலைகள் -03 தொடர் நடவடிக்கையில் வன்னியின் தென்முனையில் மாவீரராகியவர்கள்

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டு வந்தன. இவ்வரலாற்று நடவடிக்கையில் வீரச்சாவடைந்தவர்களின் பூரணமான விபரங்கள் மீண்டும் தொடராக வெளியிடப்படுகின்றன.

*ஒட்டுசுட்டான் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 4.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**2வது லெப். அண்ணாநம்பி**
இராமன் ஜெயசீலன்
8ம் கட்டை, ஆனைவிழுந்தான், கிளிநொச்சி
(இல: 52, 1ம் பகுதி, திருவையாறு, கிளிநொச்சி)

**2வது லெப். திருக்குமரன்**
சந்திரராசா யோகராஜா
இல: 67, கோணாவில், கிளிநொச்சி
(கண்டி)

**வீ.வே. சாந்தினி**
சந்திரசேகரம் விஜிதினி
(கட்டுவன், தெல்லிப்பளை, யாழ்)

*ஒட்டுசுட்டான் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 05.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**மேஜர் அமலன்**
மயில்வாகனம் சுரேஸ்
இல: 16, புற்றடி, விசுவமடு

**கப். உதயன் (எழுகதிரோன்)**
தனபாலசிங்கம் சபேசன்
இரணைஇலுப்பைக்குளம், காக்கையன்குளம், வவுனியா
4ம் வட்டாரம், மண்கும்பான், வேலணை, யாழ்)

**கப். மதிவதனன் (திருவருள்)**
கோபால் இராமச்சந்திரன்
மணியங்குளம், ஸ்கந்தபுரம்
(இரத்தினபுரி)

**வீ.வே. குயில்வேந்தன்**
நவரத்தினம் நந்தரூபன்
நொச்சிக்குளம், ஓமந்தை, வவுனியா

**கப். பதஞ்சலி**
சிதம்பரப்பிள்ளை சுமித்திரா
இல: 152, 2ம் யூனிற், யோகபுரம், மல்லாவி
(இல: 113/ 3, திருவையாறு, கிளிநொச்சி)

*வேலன்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 4.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**2வது லெப். எழில்முரசு**
சிவசாமி சிறீதரன்
அம்பலப்பொருமாள்சந்தி, அக்கராயன், கிளிநொச்சி
(உதயநகர், கிளிநொச்சி)

*நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 4.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**2வது லெப். அகம்**
வாசன் புஸ்பராணி
கல்விச் சேவைகள் நிலையம் பின்புறம்,
மில்லர் குடியிருப்பு, தேராவில், முல்லை
(மூளாய், யாழ்)

**2வது லெப். சிட்டுக்கிளி**
பாலசுப்பிரமணியம் ஜெயலட்சுமி
ஒட்டங்குளம், மல்லாவி
(ஒலுமடு, மாங்குளம்)

**2வது லெப். அருள்நிலா**
குமரகுருபரன் ஜெயறஞ்சினி
மகாலிங்கம் களஞ்சியம், மல்லாவிநகர், மல்லாவி
(இல: 430, வண்ணார்பண்ணை, யாழ்)

**2வது லெப். கவிராணி**
வேலாயுதப்பிள்ளை ராஜலட்சுமி
நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லை
(17ம் கட்டை, கொக்குத்தொடுவாய், முல்லை)

**2வது லெப். தர்சினி**
பாக்கியநாதன் ரஞ்சினி
மட்டு அம்பாறைக் குடியேற்றத்திட்டம், உடையார்கட்டு, முல்லை
(9ம் குறிச்சி, அக்கரைப்பற்று, அம்பாறை)

**2வது லெப். குறிஞ்சிமணி**
மரியதாஸ் பத்திநாதன்
பொருண்மியம், பெரியமடு, மன்னார்
(கற்கடந்தகுளம், முருங்கன், மன்னார்)

**2வது லெப். நிலவழகன்**
சுப்பிரமணியம் சசிறேசன்
இல: 12,12ம்யூனிற், பாலிநகர், வவுனிக்குளம்
(அளவெட்டி, யாழ்)

**வீ.வே. அகன்குயில்**
மாரிமுத்து வாமதேவி
விடத்தல்தீவுக் குடியிருப்பு, மன்னார்
(சுழிபுரம், யாழ்)

**வீ.வே வேணி**
பொன்னம்பலம் தில்லைநடேஸ்வரி
இல:38, கணேஸ்குடியிருப்பு, கரியாலைநாகபடுவான், முழங்காவில், மன்னார்

**வீ.வே. புரட்சிகா**
செல்வரத்தினம், புஸ்பவதி
இல: 01, ரங்கன்குடியிருப்பு, ஜெயபுரம், மன்னார்
(விக்காவில், காரைநகர், யாழ்)

**வீ.வே. குட்டியழகி**
அன்ரனிப்பிள்ளை பிரதீபா
(5ம் வட்டாரம், குமுழமுனை, முள்ளியவளை, முல்லை)
(குருநகர், யாழ்)

**வீ.வே. கதிரவள்**
குலசிங்கம் ஜெனதீபா
மணியங்குளம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி

**வீ.வே. புதியவள்**
வடிவேல் ஜீவிதா
வைத்தியசாலை வீதி, கட்டைக்காடு, பெரியகுளம், கண்டாவளை, கிளிநொச்சி
இல: 292, தருமபுரம், கிளிநொச்சி)

**வீ.வே. யாழினி**
சௌந்தரராஜா இராசலட்சுமி
துரிசடி, மணியங்குளம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி
(உதயநகர், கிளிநொச்சி)

**வீ.வே. திருத்தம்பி**
மாடசாமி மணிவண்ணன்
குரவயல் தெற்கு, உடையார்கட்டு, முல்லை
(கண்டி)

*நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 5.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**கரும்புலி மேஜர் அருளன்**
சந்தையடி வீதி, மல்லாவி
(சங்கரப்பிள்ளைவீதி, ஆனைக்கோட்டை, யாழ்)

**கரும்புலி மேஜர் சசி**
இராசரத்தினம் சுகந்தினி
சூசையப்பர் கோவிலடி, 10ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு
(சித்தங்கேணி, யாழ்)

*நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 07.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**லெப். பரணி**
விநாயகமூர்த்தி கேதீஸ்வரன்
ஆலீம்சேனை, மூதூர், திருமலை

**கப். எழிலழகி**
பலீஸ் இளையராணி
5ம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு
(மணற்காடு, குடத்தனை, யாழ்)

*ஒதியமலைப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 4.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**லெப். பழனித்தம்பி**
ஆறுமுகம் ஆனந்தக்குமார்
இல: 45, 50 வீட்டுத்திட்டம், பெரியமடு, மன்னார்
(1ம் யூனிற், சேமமடு, வவுனியா,)

*கோக்கிளாய் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 4.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**வீ.வே. ஆதியன்**
சிவஞானசுந்தரம் தனேந்திரகுமார்
விநாயகபுரம், மூதூர், திருமலை

*கரிப்பட்டமுறிப்பு பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 5.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**கப். வேங்கையரசு**
சின்னத்தம்பி துரைநாயகம்
சுஸேக்குடியிருப்புத்திட்டம், கைவேலி, புதுக்குடியிருப்பு, முல்லை
(இரணைக்கேணி, குச்சவெளி, திருமலை)

**2வது லெப். ஆதங்கன்**
முத்து உமாரமேஸ்வரன்
தட்சனாமருதமடு முகாம், மடு, மன்னார்
(சின்னத்தம்பனை, வவுனியா)

**2வது லெப். கபிலன்**
சிதம்பரப்பிள்ளை ஜெயராஜா
றோயல் திட்டம், வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு
(7ம் வட்டாரம், குச்சவெளி, திருமலை)

*மாங்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 5.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**2வது லெப். கானப்பிரியா**
மாணிக்கராசா சிறிவித்தியா
வெருகல்முகத்துவாரம், மாவடிச்சேனை, திருமலை

**கப். புவி (விஜே)**
இராசையா ரமேஸ்
இருதயபுரம், மூதூர், திருமலை

**கப். பூவாசன் (பூவாசம்)**
முருகன் தேவராசா
நவபுரம், கைதடி வடக்கு, கைதடி, யாழ்

*கொக்குத்தொடுவாய் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 07.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**மேஜர் விவேகன்**
வேலுப்பிள்ளை உதயகுமார்
7ம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு
(தேனியம்பை, ஒழுங்கை, வல்வெட்டித்துறை, யாழ்)

*கொக்குத்தொடுவாய் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 11.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**மேஜர் கதிரவள்**
மடுத்தீனுப்பிள்ளை மேரியசிந்தா
ஜெகநாதன் குடியிருப்பு, நாச்சிக்குடா, மன்னார்

*சிலோன் தியேட்டர் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 07.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**லெப். சங்கீதன்**
பழனித்தம்பி அருள்ராசா
யானைகட்டியவெளி, மண்டூர், மட்டக்களப்பு.

**2வது லெப். இசைநாதன்**
வடிவேல் சிவகுமார்
அக்கரைப்பற்று-9, அம்பாறை

**2வது லெப் காரழகன்**
கிருபைரெட்ணம் விஜயகுமார்
பெரியதம்பிரான் வீதி, 5ம் குறிச்சி, ஏறாவூர், மட்டக்களப்பு.

**வீ. வே. இசைவேந்தன்**
முனுசாமி விஜயகுமார்
5ம் வட்டாரம், கண்டலடி, வாகரை, மட்டக்களப்பு.
(கற்றன், பழைய சாமி, மலைத்தோட்டம்)

**வீ.வே. ஆத்திநம்பி**
அருளானந்தம் குணாகரன்
கண்ணகிபுரம், அக்கரைப்பற்று, அம்பாறை

*கனகராயன்குளப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 08.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**லெப் ஜனார்த்தனன்**
பாலசிங்கம் மயூரன்
நாவலர் வீதி, 10ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லை
(பிள்ளையார் கோவிலடி, அச்சுவேலி, யாழ்)

*மணலாறுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 08.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**லெப். சடாச்சரம்**
இராமலிங்கம் புலேந்திரன்
கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.

**2வது லெப். குலமாறன் (வாசன்)**
தம்பிராசா குலேந்திரன்
பாடசாலை வீதி, பெரியபோரதீவு, மட்டக்களப்பு.

**2வது. லெப். ஆர்மதி**
புவனேந்திரன் சின்னத்தம்பி
பிரதேசசபைமுன் வீதி, அக்கரைப்பற்று -08, அம்பாறை

**வீ.வே. லிங்ககாந்தன்**
மயில்வாகனம் கிருபைராஜா
3ம் குறுச்சி, மண்டூர், மட்டு

**மேஜர் யாழவன்**
செல்வராசா தயாளேஸ்வரன்
4ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லை
(அன்புவழிபுரம், திருமலை)

**2வது லெப். பொற்செழியன்**
சாமித்தம்பி ஜீவரங்கன்
துரைச்சாமி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை, மட்டக்களப்பு

**2வது லெப். வீரவேல்**
துரையப்பா மோகன்
பிள்ளையார் கோவில் வீதி, அம்பிலாந்துறை, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு

**வீ.வே. கயல்விழி**
ஆரோக்கியம் றீற்றா
ஊற்றுப்புலம், கோணாவில், கிளிநொச்சி
(பளை, இயக்கச்சி, யாழ்)

**மேஜர் வள்ளுவன்**
திருநாவுக்கரசு சிவரூபன்
திருஞானசம்மந்தர் வீதி, வட்டுக்கோட்டை, யாழ்

**லெப். கார்வேந்தன்**
சிதம்பரம் பத்மசீலன்
தர்மகுலசிங்கம் சனசமூகநிலையம், வல்வெட்டித்துறை, யாழ்

**2வது லெப். எழில்மங்கை**
சின்னத்தம்பி ஜெயமலர்
மார்க்கண்டு வீதி, முழங்காவில், மன்னார்
(பூநகரி, மன்னார்)

**வீ.வே. கிளிமொழி**
கேசவராசா உதயலதா
10ம் கட்டை, சாமிப்புலம், நல்லூர், பூநகரி
(கௌதாரிமுனை, பூநகரி, மன்னர்)

*மணலாறுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 19.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.*

**2வது லெப். புகழரசன்**
குலசேகரன் குபேரன்
கேப்பாப்புலவு, புதுக்குடியிருப்பு, முல்லை
(உரும்பிராய் தெற்கு, உரும்பிராய், யாழ்)

**2வது லெப். புகழமுது**
கிறிஸ்தோபர் சுகிர்தமலர்
பாசிமோட்டை, வட்டங்கண்டல், மன்னார்

---

றித்தான் ஒரு மிருகம். பல மொழிகளில் பல குரல்களில் ஒன்றாக ஒலித்து மிரட்டும் அந்த கொடுங்குரல்களுக்கு மத்தியில் தமிழ்க்குரலும் ஒலித்தது.

ஒருவன் அம்மாவை மிக நெருங்கி வந்து கொன்றுவிடும் குரூரப்பார்வையை வீசியவனாய்... தமிழில் கேட்டான்.

'எங்கேயடி உன் மகன் மோகன் புலி'

கேட்டுவிட்டு அம்மாவின் தலைமுடியைப் பிடித்து உலுப்பினான் அந்தச் சண்டாளன். அந்தச் சின்னவயதிலும் என் இரத்தம் சூடேறியது. என்ன செய்வது எங்கள் அம்மாவைப் போட்டு சித்திரவதை செய்கிறார்களே... அழுதேன் துடித்தேன் கடவுளை மன்றாடினேன்.

அண்ணா உள்ளிருந்து ஓடிவந்து அம்மாவைக் காக்க முயன்றார். எங்கள் அம்மாவின் சட்டையைக் கிளித்து பரிகசித்தது அந்த இராணுவ மிருகங்கள். இரத்தக் கண்ணீர் வடித்தோம். அதைத் தவிர எம்மால் என்ன செய்யமுடியும்.

அண்ணா கையெடுத்துக் கும்பிட்டு, மன்றாடினார். இந்த இராணுவ மிருகங்களோ அண்ணாவைச் சூழ்ந்து நின்றுகொண்டு கைகளாலும் கால்களாலும் உதைத்தன.

அன்று.. நானும் தங்கச்சியும் எழுப்பிய அவலக்குரல் இன்றும் என் காதுகளில், எதிரொலிக்கின்றன. நினைத்த மாத்திரத்தில் கண்களில் மீண்டும் மீண்டும் நீர் திரையிடச் செய்யும் அந்தக் கொடிய நினைவுகளை எப்படி மறப்பது?

அந்த இடத்தில் வைத்து அண்ணாவைக் கைதுசெய்தனர் அந்த இராணுவ மிருகங்கள். நாங்கள் கத்திக் குழறினோம். உதவிக்கு யார்தான் வருவர்? விசாரித்துவிட்டு விடுவோம் என, எங்கள் ஆசை அண்ணாவை விலங்கிட்டுக் கொண்டு சென்றனர் அந்த இராணுவ விலங்குகள். அண்ணா எங்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றார். அவரது கண்கள் எங்களை அழவேண்டாம் என்று கெஞ்சியது.

நாய்களின் குரைப்புக்கு மத்தியில், அட்டகாசமான சிரிப்பொலிகளுடன் இந்த இராணுவ விலங்குகள் அண்ணாவை றக் வண்டியில் ஏற்றினர். 'அண்ணா... ' நானும் தங்கச்சியும் கத்தினோம். அம்மா தலையில் அடித்து ஒப்பாரி வைத்தார்.

றக்கில் இருந்தபடி அண்ணா எங்களை மீண்டும் பார்த்தார். தாய்க்குத் தாயாக தந்தைக்குத் தந்தையாக எங்களையெல்லாம் கவனித்த அண்ணாவை.. இறுதியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் அதுதான் என, நான் அப்போது உணரவில்லை. என்றாலும் அண்ணாவைப் பார்க்க பெரிதும் பாவமாய் இருந்தது. என்னால்.. தாங்கிக் கொள்ளமுடியாத ஆற்றாமையாலும் வேதனையாலும் துடித்தேன்.

இது நடந்ததன் பின்னர் எங்களின் வாழ்க்கையின் நிம்மதியே பறிபோனது. அம்மா, அப்பா, நான் தங்கச்சி என, எல்லோரும் அண்ணாவைத் தேடி அலையாத இடங்கள் இல்லை. எத்தனை மைல்கள் நடந்திருப்போம். எத்தனை முகாம்கள் சென்று, இராணுவ அதிகாரிகளைச் சந்தித்திருப்போம். எத்தனை நாட்கள் எத்தனை மாதங்கள் இப்படியாக அலைந்து அலைந்து... இடிந்துபோய்... வாழ்வில் சூனியம் தொற்றிய குடும்பமாய் ஒடுங்கிப் போனோம்.

இந்தக் கொடுமை நடந்ததன் பின்னர், எங்கள் பெரியப்பாவின் உதவியுடன் வெளிநாடு வந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். உழைக்கும் பணத்தைக் கொண்டு என்குடும்பத்தை பார்த்துக்கொள்ள முடிகின்றது. மீண்டும் குடும்பம் எழுந்து நடக்க ஆரம்பித்திருக்கின்றனர். பழையபடி சிரிக்க முனைகின்றோம். சந்தோசங்களில் கலந்துகொள்கின்றோம். ஆனால்... எங்கள் அண்ணா..?

பொறுப்பாக எங்களைப் பக்குவமாய் பார்த்த அண்ணா..?

தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் பரிவோடும் பாசத்தோடும் எம்மை வளர்த்த அண்ணா..?

கைதுசெய்யப்பட்டு...... விலங்கிடப்பட்டு.. இழுத்துச் செல்லப்பட்டபோது... திரும்பி எம்மைப் பார்த்த அந்த அண்ணாவின் முகம் என் நெஞ்சில் இன்னமும் நெருப்பாக. அந்த அன்பு முகத்தை இனிப் பார்க்க மாட்டோமா என்ற தவிப்பு... விதி முடியம் காலம் வரை தொடரவே செய்யும்.

ஒரு குற்றமும் அறியாத எங்கள் அண்ணாவை எம்மிடம் இருந்து பறித்த அந்தக் கொடிய அரக்கர்களின் முகங்களும் அருவருப்பாக என் நெஞ்சில்.

**வ.குணபாலன்-சவூதி அரேபியா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரர் நாள் கையேட்டிலிருந்து

## மாவீரர்

தேச விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தும், எதிரிப் பாசறையை வெடிகுண்டுகொண்டு தகர்த்தும், சத்திய வேள்வியில் நித்தமும் வேகி, கொடியது பறந்திட உயிரினை ஈய்ந்து உடலை உரமிட்டு செங்குருதியால் வரலாறு படைத்து தமிழீழ மண்ணெங்கும் நினைவுச் சிலைகளாய், ஓவியமாய் வெள்ளை மலரேந்திய வேதங்களாய் ஈழமண்ணில் புது விதைகளாய், விடுதலையின் தீச்சுடராகி தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ்இன விடிவிற்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத்தீக்களை தமக்குள்ளே சிறை போட்டவர்கள். தேச மக்களின் பாசப் பிணைப்புக்களுக்காக தமது பாசங்களைப் பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித்தோழருக்காய் பறிகொடுத்தவர்கள். ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள். எல்லைசுற்றி வேலிச்சிலையாய் நின்றவர்கள் தமது மக்களுக்காய் கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் (நவம்பர் 27)

தேச விடுதலைக்காக மரணித்த மாவீரர்களுக்கு தமிழீழ மண்ணில் மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று. இவ் எழுச்சி நாளே தமிழீழத்தின் தேசிய நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலி வீரர்களில் முதலாவதாக வீரச்சாவெய்திய மாவீரர் சத்தியநாதனின் (சங்கர்) நினைவுநாளை நவம்பர் 27ஐ தமிழீழ தேசம் மாவீரர் நாளாக பிரகடனம் செய்துள்ளது. வருடம் தோறும் இப்புனித நாளினை தமிழினம் உணர்வுபூர்வமாகக் கொண்டாடுகின்றது, நினைவு கூருகின்றது.

## மாவீரர் நாளை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது மாவீரர் எழுச்சிநாளாகத் தமிழீழமெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் எழுச்சி நாளானது நவம்பர் 25ல் தொடங்கி நவம்பர் 27ல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களைக் கொண்டாடும் முகமாக நவம்பர் 25ம் நாளுக்கு முன்னதாகவே தமிழீழமெங்கும் புனிதப்பட்டு விடுகின்றது. மாவீரர் தூபிகள், நிழற்படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும், ஒருமித்தும் புனிதமாக்கி விடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு தமிழீழ நாடு புதுப் பொலிவுடன் விளங்கும்.

## மாவீரர் எழுச்சி நாட்கள் 25-27

ஆரம்ப நாள் காலை 8.00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றத்தைத் தொடர்ந்து, மாவீரர் எழுச்சி நாட்கள் கொண்டாட்டம் ஆரம்பமாகும். தமிழீழம் முழுவதும் எழுச்சிக்கோலம் பூண்டு பொலிவுடன் விளங்கும். அனைத்துத் தமிழீழ மக்களும் அலங்கரிப்பு நிகழ்ச்சியிலும், வீரவணக்க நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்கள். வேறு களியாட்டங்கள், கொண்டாட்டங்கள் நடைபெறமாட்டாது. தேவையற்ற கேளிக்கைகள், வேண்டத்தகாத சூழ்நிலைகள் மறைந்துவிடும், மதுச்சாலைகள் மூடப்பட்டு மது பாவிப்பதை நிறுத்தி விடுவார்கள். வீடுகள் தோறும் விடுதலைக் கீதங்கள் ஒலிக்கும். மக்கள் பிரிவு பிரிவாக, அமைப்புக்கள் ரீதியாக ஆக்கபூர்வ வேலைத் திட்டங்களிலும், மற்றும் மாவீரர் நாள் நிகழ்வுகளிலும் கலந்துகொள்வர்.

## பாடசாலைகள்

ஆசிரியர்கள் மாவீரரின் மாண்பினையும், மாவீரர் நாளின் மகிமையையும் மாணவர்களுக்கு முன்கூட்டியே தெளிவினை ஏற்படுத்துவார்கள். பாடசாலைகள் அலங்கரிக்கப்பட்டிருக்கும். நவம்பர் 25ம் நாள் காலை 9.00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றலும், பாடசாலைகளில் வீரவணக்கக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். மாவீரர் நினைவாக சமூக சேவைகளிலும் ஈடுபடுவர். மாவீரருக்கு மலர் வணக்கம் செலுத்தும் பணியினை மாணவர்கள் பெருவிருப்புடன் செய்வார்கள். இந்தத் தேசிய விழாவில் ஆசிரியர்களும், மாணவர்களும், பொதுமக்களும், பொது நிறுவனங்களும் முழுமையாக இணைவதில் தேசியப்பற்று உரமேற்றப்படுகின்றது.

## மாவீரர் எழுச்சி நாட்களின் நிகழ்வுகளும் நடைமுறை ஒழுங்குகளும்

1988ம் ஆண்டில் நவம்பர் 27ம் நாள் மாவீரர் நாளாகவும், 1990ம் ஆண்டிலிருந்து 1994ம் ஆண்டுவரை நவம்பர் 21ம் நாளிலிருந்து 27ம் நாள்வரை மாவீரர் வாரமாகவும் தமிழீழ மக்களால் எழுச்சி நிகழ்வாக நடைபெற்றுவந்த தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள், 1995ம் ஆண்டிலிருந்து நவம்பர் 25ம் நாளிலிருந்து 27ம் நாள்வரை மூன்று நாட்கள் தமிழீழ மாவீரர் எழுச்சி நாட்களாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றன.

## தமிழீழ தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகும்

மாவீரர் நாள் தொடக்க நிகழ்வுகள்
01. சுடரேற்றல்
02. தேசியக்கொடியேற்றல்
03. மலர் வணக்கம்
04. அகவணக்கம்
05. உறுதியுரை
06. நினைவுரை

என்பன வரிசை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும். தொடக்க நிகழ்வுகள் மாவீரர் எழுச்சி நாட்களான மூன்று நாட்களிலும் நடைபெறும்.

## தேசியக்கொடியேற்றல்

மாவீரர் எழுச்சி நாட்களுக்கான நிகழ்வுகள் நவம்பர் 25ம் நாளன்று காலை 8.00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகும்.

மாவீரர் துயிலுமில்லங்களில் 25ம் நாள் காலை 8.00 மணிக்கு ஏற்றப்படும் தேசியக்கொடி நவம்பர் 27ம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

இயக்கப் பணிமனைகள், தளங்களில் முதல் இரண்டு நாட்களிலும் மாலை 6.00 மணிக்கு கொடி இறக்கபட்டு, மறுநாள் காலை ஏற்றப்படும். நவம்பர் 27ம் திகதி மாவீரர் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

பொது நிறுவனங்களிலும், பள்ளிகளிலும் ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின் பகல் 12.01ன் பின்பாகவும் மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக்கொடி இறக்கபட்டு, மறுநாள் காலையில் ஏற்றப்படவேண்டும்.

(தேசியக்கொடி ஏற்றுதல், இறக்குதல் தொடர்பான கூடுதலான விளக்கங்கள் தேசியக்கொடிப்பயன் பாட்டு விதிக்கோவை என்னும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.)

## நினைவொலி எழுப்பலும், சுடரேற்றலும்

27ம் திகதி சுடரேற்றும் நேரத்தை தமிழீழ மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். மாலை 6.05 மணிக்கு தமிழீழமெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழும்பும். அந்த நேரத்தைத் தொடர்ந்து எல்லா மக்களும் அகவணக்கம் செலுத்துவார்கள்.

துயிலுமில்ல மைதான நடுவில் அல்லது பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வுக் கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். அமைப்பின் முதன்மையானவர்கள் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர், உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில் ஒவ்வொரு இல்லங்களிலும், வாசலிலும் மாவீரரின் சுடரொளியை அனைவரும் ஏற்றுவர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுடரானது சுவாலை விட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர்விட்டு நிற்க, தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழீழ மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவுகூரப்படவேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல, தமிழீழமெங்கும் மாவீரர் சுடர்கள் இந்நேரத்தில் எங்கும் ஒளிரவேண்டும். சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீப்பந்தங்கள் எரியும், பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவு கூரவேண்டும். இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப் பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை.

இன்று மாலை 6.05 மணிக்கு ஒலி எழுப்பும் நிகழ்வு தொடங்கக்கூடியதாக தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிகழ்வு இடம்பெறும்.

## நினைவொலி எழுப்புதல் (6.05மணி)

தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிறைவடைந்தவுடன் உடனடியாக 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்புப் பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்றவகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

## அக வணக்கம் (6.06 மணி)

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழீழ மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

## ஈகைச் சுடரேற்றுதல் (6.07 மணி)

அகவணக்கம் நிறைவுற்றதும், 6.07 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றப்படல் வேண்டும். (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடரேற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக்கற்களுக்கு முன்னால் 5.45 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்).

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர் அதேநேரம் மாவீரர் துயிலுமில்லங்களில் இடம்பெயர்ந்த மாவீரர் பெற்றோர்கள் அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகைச்சுடர் ஏற்றுவர்.

இவைதவிர, துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்கள், பொது இடங்கள், அலுவலகங்கள், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில், உரிய முறைப்படி ஈகைச்சுடரேற்றுவர். ஈகைச்சுடரேற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும். (மாவீரர் ஈகைச் சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறுவகையில் ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்).

—தமிழீழ மாவீரர் பணிமனை




# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

தொடரும் ஓயாத அலைகள் 04 நடவடிக்கையில் கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கரும்புலிகளான...

**கரும்புலி மேஜர் வர்ணன்/வேலன்**
வடிவேல் தங்கத்துரை
மட்டக்களப்பு
த.மு: பொன்நகர், முள்ளியவளை

**கரும்புலி மேஜர் கோபிதாஸ்**
துரைச்சாமி ஜீவகணபதி
வவுனியா

**கரும்புலி கப்டன் சந்திரபாபு**
குமாரப்பொடி சந்திரகலா
மட்டக்களப்பு

**24.10.2000 மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான காமினிபுரம் பகுதியில் சிறீலங்காப் படைகளுடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.**

**லெப். அருள்மதன்**
வேலுப்பிள்ளை ஜீவராஜ்
அம்பாறை.

**26.10.2000 அன்று சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் முல்லைத்தீவில் சாவடைந்தார்.**

**நாட்டுப்பற்றாளர் நவநீதன்**
யாழ் மாவட்டம்
10ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.

**29.10.2000 அன்று அம்பாறை பணங்காட்டுப்பாலப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.**

**2ஆம் லெப் மகாந்தி**
தர்மலிங்கம் திலீபன்
மட்டக்களப்பு

**கப்டன் பூவராஜ்**
குருநாதன் ரகுநாதன்
அம்பாறை

**29.10.2000 அன்று தென்மராட்சி கனகம்புளியடிப் பகுதியில் பெருமெடுப்பில் முன்னேற முற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வழிமறிப்புத் தாக்குதலில் இரு போராளிகளும் இரு எல்லைப்படை வீரர்களும் வீரச்சாவடைந்தனர்.**

**லெப். இறைமகன்**
ஞானசுந்தரம் சயந்தன்
யாழ்.மாவட்டம்
த.மு: குருகுலம், முழங்காவில், மன்னார்.

**2ஆம் லெப். பாவரசன்**
ஆனந்தராசா ரூபேந்திரன்
யாழ் மாவட்டம்
த.மு: இல.645, 6ஆம் யூனிட், இராமநாதபுரம், வட்டக்கச்சி

சிறப்பு எல்லைப்படை
**வீரவேங்கை ராஜன்**
சாமித்தம்பி ராஜன்
அம்பாறை
த.மு: நளாயினி குடியிருப்பு, பொன்நகர், முள்ளியவளை

சிறப்பு எல்லைப்படை
**வீரவேங்கை மூர்த்தி**
இலட்சுமணன் மயில்வாகனம்
யாழ் மாவட்டம்
த.மு: நளாயினி குடியிருப்பு, பொன்நகர், முள்ளியவளை

**3.11.2000 அன்று மணலாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.**

**2ஆம் லெப் சிறீதர்**
சண்முகம் இரவீந்திரன்
மட்டக்களப்பு

**04.11.2000 அன்று திருகோணமலைக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படைக்கெதிராக இடம்பெற்ற கடற்கரும்புலித் தாக்குதலில் இரு கடற்கரும்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

**கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் நரேஸ்**
முருகேசு சண்முககுமார்
யாழ் மாவட்டம்
த.மு: புதுக்குடியிருப்பு

**கடற்கரும்புலி மேஜர் சுடர்மணி**
சிவராசா சிறீதரன்
யாழ் மாவட்டம்
த.மு: விசுவமடு

**04.11.2000 அன்று மட்டுவில் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் சிறப்பு எல்லைப்படை வீரரொருவர் வீரச்சாவடைந்தார்.**

சிறப்பு எல்லைப்படை
**வீரவேங்கை ஹரி**
சிவலிங்கம் இதயவர்மன்
யாழ் மாவட்டம்
த.மு: பூவரசங்குளம், மல்லாவி

**04.11.2000 அன்று கிளாலிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.**

**லெப் கேணல் தர்சன்**
யாழ் மாவட்டம்
யோகபுரம், மல்லாவி

# தேசிய மாவீரர் நாள் -2000-

## ஐரோப்பாவில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெறும் இடங்களும், காலங்களும்



**டென்மார்க்**
இடம்: Kongrescenter Herning
காலம்: 25.11.2000 சனிக்கிழமை பி.ப 4.30 மணி
இடம்: Fritidscenter Holbeck
காலம்: 02-12-2000 சனிக்கிழமை பி.ப 4.30

**பிரித்தானியா**
இடம்: London Arena, Limeharbour, London. E14 9Th
காலம்: 02-12-2000 - சனிக்கிழமை பி.ப 3.00

**சுவிஸ்**
இடம்: Bea Expo, Halle 12, Bern
காலம்: 27-11.2000 திங்கள் பி.ப 1.30

**நோர்வே**
இடம்: Folkethus, Oslo
காலம்: 25-11-2000 சனி மாலை 6.00

**ஜேர்மனி**
இடம்: Helmut-Kornig Halle, Strobelalle 42 44139 Dortmund.
காலம்: 25-11-2000 சனிக்கிழமை பி.ப-3.30

**சுவீடன்**
இடம்: Fittjaskolan, Fittja, Stockholm.
காலம்: 02.12.2000 சனிக்கிழமை பி.ப-3.00

**பிரான்ஸ்**
இடம்: Espace Jean Monnet 47-Rue des solets 94533 Rungis
காலம்: 03.12..2000 ஞாயிறு பி.ப 3.00

**நெதர்லாந்து**
இடம்: Maresca hall, Satreweg 1-3, Utrecht
காலம்: 02.12..2000 சனிக்கிழமை பி.ப 3.00

**இத்தாலி**
இடம்: Domenica alle ore 15.00 Sala Centro Fiori Quatire Navile,Via Cotki.No.10 Territorio Corticella, Bologna
காலம்: 26.11.2000 ஞாயிறு
இடம்: Sala Ranchivile (Don Bosco) via Liberta 130, Palermo
காலம்: 03.12..2000 ஞாயிறு
தொடர்புகளுக்கு: (39) 091 61 62 804

www.tamilarangam.net



# காலத்தின் பதில்

-அம்புலி-

நாம் சிந்திய கண்ணீருக்கும்
செந்நீருக்கும் பதில் சொல்லிக்
காலம் காட்டாறாய்ப் பெருக்கெடுத்தது.
வேகாவனத்திலிருந்து புறப்பட்டு
மரங்களிடை முளைத்த
முட்புதர்களை வேரொடு பொசுக்கி
அனல் வீச்சுக் கொட்டிப்
பரந்தோடியது அது.
கிழக்கும் மேற்குமாய்
பிரிவுற்றோமென்ற
அச்சத்துடன் மனம் பொருமிய
உள்ளங்கள் குளிர
இதய பூமியையும்
மன்னார் திருப்பதியையும்
இணைத்துப் பாய்ந்தது.



கனத்துக்கிடந்த எம்
காலப் பெருவெளியில் ஒளிவெள்ளம்.
தணல் பூத்த இதயங்களில்
புதிய நீருற்று,
தனியொரு மனிதன்
தன்னினத்துக்காகக்
கட்டியெழுப்பிய கூட்டின்
அடைகாத்தலின் அறுவடையிது.
இதயம் இறுக்கி
ஓராயிரம் அழுத்தங்களுக்குள்
அமிழ்ந்து போகாது
தாரக மந்திரம் உரக்கப்பாடி
கனவுப் பூக்களின் கண்விழிப்புக்காய்
உயிர் சிந்திய வரலாறிது.

கருப்பை சுருங்கி
கனவுப் பைகளை மட்டும் நிரப்பி
காலமிட்ட பணிமுடிக்க
சொல்லாமல் சென்ற பிள்ளைகளுக்காய்
உயிரொடுங்கக் காத்திருக்கும்
தாயவளின் நிம்மதிப் பெருமூச்சு இது.
ஒதுங்க இடமின்றி
அலைந்துலைந்த கால்கள்
ஊர்சேரக் களம் விரைந்து
விடுதலைக்காக நடந்த
பயணத்தின் வெற்றியிது.

கண்ணீர் சிந்திய மனிதர்களும்
கரங்கள் உயர்த்திய புதல்வர்களும்
சுமையேற்க முன்வந்த தோள்களும்
வரலாற்றில் எமை நிமிர்த்திய
வல்லமையின் வழிகாட்டலும்
சேர்ந்து பெருக்கெடுத்த ஜீவநதியிது.

காலக்கொடுமையால்
கட்டுண்டு கிடந்த இனத்தின்
மான எழுச்சிக்கு
மணிமகுடம் சூட்டிற்று
எங்கள் சுடுதிறன்.
நெருப்பு மழை பொழிந்து
நீசர்களை எரித்தன
எம் சுடுகலன்கள்.

எம் வல்லமை சிதைக்க
வலிந்து படை திரட்டி
எம் வாசல் வந்த
சிங்களத்து வீரர்கள்
திறந்து வைத்த போர்மேடையெல்லாம்
எம் புதிய கலைகள்
அரங்கேறத் தொடங்கின.

எதிரி திறந்து வைத்த திசைகளெல்லாம்
தீயெனச் சுட்டோம்.
இனித் திரும்பிப் பார்க்க முடியாது
வந்தோரை வழியனுப்பி வைத்தோம்.

இந்த நூற்றாண்டு விடைகொடுக்கும்
கால இடைவெளிக்குள்
எம் உதிரமை கொண்டு
கரங்கள் எழுதிய வரலாற்றைக்
கணணி உலகிற்கு கைதூக்கி
காட்டினோம்.
விண்தொடும் தீயெழும்ப
நாம் நடத்திய வேள்வியில்
எமக்காய் ஒளிகால
விடிவெள்ளியொன்று
புதிதாய் பிறப்பதை
எம்மை அங்கீகரிக்க
விரும்பாதவர்களும் புரிந்துகொண்டனர்.

காலச் சக்கரம் – எம்
கரங்களுக்குள் சுழர
காட்டாறு பாய்ந்த வீதிகளில்
எம் கால்கள் படர்கின்றன.
பசுமை காய்ந்த பூமியில்
காயங்கள் தெரிகின்றன.

நெல் விதைத்த வயற்பரப்பில்
நச்சு விதைகள் உறுத்துகின்றன.
உருத்தெரியாத ஊர்களில்
எல்லைகள் தெரியவில்லை.
நடந்ததெல்லாம்
எமது கோடையென நினைத்திருப்போம்
இது மாரிமழைக்காலம்.
பூமி திருத்த விரையும்
காவலர்களாய் நடக்கின்றோம்.

மிடுக்கேறிய பலமுடன்
மிகுந்த தற்துணிவுடன்
வியாபித்த நெஞ்சங்களோடு
இதயத்திலிருந்து மீண்டும்
மனிதரெனப் பிறந்து.....
இன்னும் மீட்கப்படாத எம் எல்லைகளை
நோக்கி......


| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | TCC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| **NETHERLANDS** | **NORWAY** | **SWITZERLAND** | **SWEDEN** | **UNITED KINGDOM** | **U.S.A** |
| TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga. | UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | W.T.C.C<br>170-10 Cedarcroft<br>Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |